மலர் : 57

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

Volume - 57

# ✯ சத்தியத்தின் குரல் ✯

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Abel R. Nayagam
Kingsly rajah

Translation : **B. Benny Martin**

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
86-A, Dharapuram Road,
Kangayam - 638701. TN. India.
Cell : 98427 30382, 99655 30385

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
Cell : 92 4421 4421, 92 4420 4420

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
Cell : 94435 58041



## இனிமையும் இதமுமான பிரசங்கம்

## Cotton candy preaching

*Louis Rushmore*

**வெ**றுமையான வார்த்தை ஜாலம், பஞ்சு மிட்டாய் மற்றும் சர்க்கரையினாலும் முட்டையினாலும் செய்யப்படும் ஓர் இனிப்பு பதார்த்தம் ஆகிய மூன்றுமே இனிப்பு சுவை உடையவைகளா யிருந்தாலும் கூட இம்மூன்றிலுமே சத்துக்கள் எதுவும் இல்லை. வேறுவிதமாகச் சொன்னால் இவைகள் ஆரோக்கியமற்றவைகள். உண்மையைச் சொல்லப் போனால் இவ்வகையான ஆகாரங்கள் நச்சுத்தன்மை உடையவைகளாகும்.

நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும். நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று (2 தீமோத்தேயு 4:1–5).

இந்த முதல் நூற்றாண்டு புத்திமதி நாம் வாழும் 21 ஆம் நூற்றாண்டிலும் அவசியப்படாமலில்லை. கள்ள போதகத்திற்கு அடுத்தபடியாக (1 யோவான் 4:1) நயவசனிப்பு இச்சகப்பேச்சு ஆகியவைகளை உள்ளடக்கிய வெற்றுப் பிரசங்கங்கள் தனிப்பட்ட ரீதியில் கிறிஸ்தவர்களையும், ஒட்டுமொத்தமாக சபையையும் பெரிய அளவில் பாதிக்கிறது.

அந்தோ! இந்த நாட்களில் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைக்காத பிரசங்கியார்களை காண்பது அரிதாக இருக்கிறது [அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:27].

புத்தகம் அதிகாரம் மற்றும் வசன ரீதியான பிரசங்கங்கள் இன்றைய நவ நாகரிக பிரசங்கிமார்களால் அதிகம் விரும்பப்படுவதில்லை. பிரசங்க பீடங்களில் தேவனுடைய வார்த்தைகள் மாத்திரம் எதிரொலித்த காலங்கள் கடந்து போய்விட்டன. எஸ்ராவும் ,அவரோடு இருந்தவர்களும் தேவனுடைய நியாயப்பிரமாண புத்தகத்தை எப்படி தீர்க்கமாக வாசித்து அர்த்தம் சொன்னார்களோ அதேபோன்ற பிரசங்கியார்கள் தான் இன்றைய நாட்களிலே கிறிஸ்துவின் சபைகளுக்கு அவசியமாய் இருக்கிறார்கள் [நெகேமியா 8:8]. ஒருவர் [நெகேமியா 8:1–8] பகுதியை பகுத்தறிந்து பார்க்கும்போது அங்கே காணப்படும் பிரசங்கம் மற்றும் உபதேச மாதிரியை விட சிறந்த மாதிரியை நாம் எங்குமே காண முடியாது.



கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம் குழந்தைகள் பட்டினியாய் இருக்கிறார்கள் [1கொரிந்தியர் 3:1; எபிரேயர் 5:139]. இவர்கள் தேவனுடைய வார்த்தையை கொண்டு போஷிக்கும்படியாக யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ [பிரசங்கியார்கள்] அவர்களுடைய பாதத்தடியிலேயே பட்டினியாய் கிடக்கிறார்கள்[ ரோமர் 10:14]. மேலும், தேவனுடைய வார்த்தையால் தந்தையை போஷிக்கும்படியாக தெரிந்தெடுக்கப்பட்ட முப்பர்கள் எங்கே [அப் 20:28 ;1 பேதுரு 5:1,2].



நம் சகோதரர்கள் எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக நம்பி விட்டு, எதையும் முழுமையாக நம்பாமல் இருப்பது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. பெரும்பாலும் அவர்களுக்கு நாம் எங்கேயிருந்து வந்தோம்,

நாம் யார், நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் போன்றவைகள் தெரியாமல் இருக்கிறது. சாத்தானால் ஆளுகை செய்யப்படும் இந்த பொல்லாத உலகத்திலிருந்து வேறுபட்டு தேவ பக்தி உள்ள வாழ்க்கையை வாழும் சபை அங்கத்தினர்கள் சொற்ப எண்ணிக்கை யில் தான் உள்ளனர் என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை [யோவான் 12:31; 2 கொரிந்தியர் 4:4]. கிறிஸ்தவர்கள் தங்களை சுற்றிலும் உள்ள உலகத்தின் மக்கள் ஒழுக்ககேடாக நடந்து கொண்டு வாழ்க்கையின் அர்த்தத்தை அறியாமல் பரலோகவாஞ்சையே இல்லாதவர்களாய் நடந்து கொள்வதைப் போல நடந்து கொள்வது வேதனையிலும் வேதனையாக உள்ளது. [1 பேதுரு 2:9]. [கொலோசெயர் 3:8].

புள்ளி விவரங்களின்படி உலகெங்கும் கர்த்தருடைய சபையானது காணாமல் போய்க் கொண்டிருக்கிறது அல்லது மறைந்து போய்க்கொண்டிருக்கிறது.

கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கும் கிறிஸ்தவர்கள் தெய்வ பக்தி அற்ற துன்மார்க்கமான கிறிஸ்தவர்களால் இழுக்கப்பட்டு குழியில் விழுகிறார்கள். பாவம் ஒரு கிறிஸ்தவரின் ஆவிக்குரிய வாழ்க்கையை அழித்து விடுவது என்பது வேதனைக்குரிய ஒரு விஷயமாகும். கர்த்தருடைய சபைகளில் பாவத்தின் பக்க விளைவுகள் பெரிய அளவில் பரவி கிடப்பதை நம்மால் காண முடியும்.

உலகின் பல பகுதிகளில் உண்மை கிறிஸ்தவம் இருப்பதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிராமல் உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் தேவனுடைய வார்த்தைகளை சர்வாயுதவர்க்கமாக தரித்துக் கொண்டிருக்கும் நாம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை வெளிப்படையாகவும், தைரியமாகவும் பிரசிங்கிக்க வேண்டும். வார்த்தை ஜாலங்களையோ இதமான வார்த்தைகளையோ நாம் ஒருபோதும் பிரசங்கத்தின் போது உபயோகிக்க கூடாது. கடிந்துகொண்டு புத்திச்சொல்லாத இதமான பிரசங்கங்களும், வேத பாட வகுப்புகளும் ஒரு நன்மையும் செய்யவில்லை என்பது ஒரு புறம் இருந்தாலும் கூட, கர்த்தருடைய சபை இந்த நாட்களிலே எதிர்கொள்ளும் அருவருப்பான சூழ்நிலைகளுக்கு வழிவகுத்தன என்று தான் சொல்ல வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தான் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்கவில்லை என்று சொல்கிறார் [அப்போஸ்தலர்20: 26]. மேலும் அப்போஸ்தலனாகிய பேதுரு 1 பேதுரு 2:3 ல் இவ்விதமாய் எழுதுகிறார்'நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்

போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள் 1பேதுரு 2:3.

இன்றைய நாட்களில் நமக்கு அவசியமான தீர்வு தேவனுடைய வார்த்தையை உட்கொள்ளும் ஆசையுடன் தொடங்குகிறது. அந்த ஆசை ஞானப்பாலில் தொடங்கி திடமான ஆகாரத்தில் போய் முடிய வேண்டும்.( எபிரேயர் 5:12–6:2). இதற்கு இணையாக முக்கியமானது பிரசிங்கியார்கள் வேதாகம ஆசிரியர்கள் தேவனுடைய வார்த்தையாகிய ஞானப்பால் மற்றும் திடமான ஆகாரம் எவ்வித கலப்புமின்றி விசுவாசிகளுக்கு கிடைக்கிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் (கொலோசெயர் 2:23).

அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுதுபோக்குகிறதில்லை. அப்போஸ்தலர் 17:21.

சகோதரரே நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப் பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் (1கொரிந்தியர் 2:2).

(SRIDHAR)

## ஆண்களுக்கு அறிவுரை கூறிய வேதாகமப் பெண்கள்.

*1.தேபோராள் பாராக்கை போரில் வழி நடத்தினார்.*
நியா.4:4–6,8

*2.ஒற்றர்கள் ராகாபின் ஆலோசனையை பெற்றனார்.*
யோசுவா.2:8–11,23,24; 16:32

*3.யோவாப் ஒரு ஞானம் உள்ள பெண்ணின் பேச்சை கேட்டான்.*
2சாமு 20:14–22

*4.லேமுவேல் அரசன் தன் தாயின் ஞானத்திற்கு செவி சாய்த்தார்.*
நீதி.32:1–9

*5. தீர்க்கதரிசியான உல்தாள் அரசன் யோசியாவுக்கு அறிவுரை கூறினார்.*
2.நாளா.34:19–33

*6.எஸ்தர் மொர்தெகாய்க்கு அறிவுரை வழங்கினார்.*
எஸ்தர்.4:17

**நிர்வாக ஆசிரியர் உரை**



# தேவனுடைய உபதேசத்தால் அலங்கலரித்தல்

---------------------------------

**E.Z.S. ராஜநாயகம்**

இந்த அலங்கரிப்பு பற்றி பவுலடியார் நான் விசுவாசத்தில் பெற்ற உத்த குமாரர்களில் ஒருவனாகிய தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் இவ்விதம் குறிப்பிடுகிறார். '.....நம்முடைய இரட்சகராசிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக என்று (நீத்து 2:9)

சரி. இந்த வசனப்பகுதியோடு மேலும் நம்மை சம்பந்தப்படுத்துவதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக இதன் பின்னணி குறித்துக் கொஞ்சம் பார்த்து விடுவோம்.

கிரேத்தா என்பது மத்திய தரைக்கடலில் இருந்த ஒரு தீவு சுமார் 250 கி.மீ. நீளமும், 50 கி.மீ அகலமும் கொண்டது. இத்தீவைச் சேர்ந்தவர்கள் அடிப்படையில் நற்குணங்களைக் கொண்டவர்களாக இல்லை. ஓயாப் பொய்யர்களாகவும், துஷ்ட மிருகங்களாகவும், பெருவயிற்றுச் சேம்பேறி களாகவும் இருந்துள்ளார்கள் (தீத்து 2:11), ஆயினும். பக்தியுள்ளவர்களும் அங்கு இல்லாமலில்லை. எப்படியெனில், கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்கும் பிறகு வந்த பெந்தெகொஸ்தே நாளில், அப்பண்டிகைக்காகக் கூடி வந்தவர் கனில் கிரேத்தாத் வாரும் இருந்துள்ளார்கள் (அப் 2:9), கிறிஸ்துவின் சபையானது ஆரம்பமான அந்த மகாநாளில், பேதுரு செய்த அப்பிரசங்கத்ததைக் கேட்டவர்களில் அவர்களும் அடக்கம். அன்றைக்குக் கீழ்ப்படிந்த 3000 பேரில் (அப். 2:41) கிரேத்தா தீவாரும் இருந்திருக்க வாய்ப்புண்டு. அப்படிக் கீழ்ப்படிந்த புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களால் தான் குணக்கேடு கொண்ட அத்தீவில் சபையானது பட்டணங்களிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது.

காலப்போக்கில், இத்தீவின் மற்ற பட்டணங்களிலும் சபையானது ஆரம்பமாகியிருக்க வேண்டுமென்றும் தெரிகிறது. எப்படியெனில் நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும். நான் உனக்குக் கட்டளையிட்டபடியே பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் உன்னைக் கிரேத்தா தீவிலே விட்டு வந்தேன் என்று பவுலடியார் குறிப்பிட்டுள்ளார். பவுலடியாரைப் பொறுத்தளவில்

தன்னுடைய முதலாவது ரோம சிறைவாசத்திற்குப் பிறகு இத்தீவிற்குச் சென்றிருக்கலாம் என்று நம்ப இடமுண்டு.

தீத்து கிரேத்தா தீவில் விடப்பட்டதற்கு மூன்று பிரதான காரணங்கள் இருந்தது. (1) ஆவிக்குரிய சிந்தை கொண்டவைகளை அடையாளம் காண்பது (1:5) (2) ஆரோக்கியமான உபதேசத்தில் கவனம் செலுத்துவது (2:1) (3) பக்தி வாழ்க்கையை வலியுறுத்துவது (2:7–10) நம்முடைய தலைப்பிற்கான பகுதி இந்த மூன்றாம் பிரிவில் தான் இடம் பெற்றுள்ளது.

ஆகையால், அருமையானவர்களே, தீத்து 2:7–10 வசனங்கள் அடங்கிய இவ்வேதப்பகுதியை நாம் தியானித்து, ஆவிக்குரிய அலங்காரத்திற்கு அவர்களுக்குக் காட்டப்பட்ட வழிமுறை இன்னதென்று புரிந்து கொண்டு, நம்முடைய பக்தி வாழ்க்கைக்கான அலங்கார அம்சங்களைப் பெற்றுக்கொள்ள இப்போது முயற்சிப்போம்.

**I ஆவிக்குரிய அலங்காரத்திற்கு ஒன்றை அப்படியே பின்பற்றுவது அவசியம்**

கிரேத்தா தீவாருக்குத் தேவையான ஆவிக்குரிய அலங்காரத்திற்கு அவசியமானவைகளில் முதலாவதாக வருவது ஒன்றை அப்படியே பின்பற்றுவது.

பொதுவாக, அலங்காரம் என்பது குறையாக இருக்கின்ற ஒன்றை நிறைவாகக் காட்டுவது அல்லது இல்லாத ஒன்றை கிட்டத்தட்ட இருப்பது போல் காட்டுவது. இப்படிச் செய்வதற்கு ஒரு மாதிரி ' அவசியம். மாதிரி இருந்தால்தான் ஒன்றை அதன்படியே செய்யமுடியும். கிரேத்தா தீவார் தாங்களை இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தால் எல்லாவற்றிலும் அமங்கரிப்பதற்கு அவர்களுக்கு மாதிரி தேவைப்பட்டதால், விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீத்துவையே பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு மாதிரியாகக் கொடுக்கிறார். நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி என்று (தீத்து 2:7) இவ்வசனத்தின்படி கிறிஸ்துவின் உபதேசத்தால் ஒருவன் தன்னை அலங்கரித்துக்கொள்வதற்கு நற்கிரியைகள் 'அவசியம் என தெரிகிறது. கிரேத்தா தீவாரிடத்தில் துர்க் கிரியைகள் தான் அதிகம் இருந்தது. அவைகள் அவர்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான அலங்கோலத்தையே கொடுத்திருக்கும். அவைகளை அவர்கள் களைந்து தங்களை நற்கிரியைகளுக்கு உட்படுத்த வேண்டியிருந்தது. அதற்கு ஒரு சிறந்த மாதிரியாக தீத்து இருக்க வேண்டுமென்று

அப்படியானால், நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய உபதேசத்தால் நம்மை அலங்கரித்துக் கொள்வதற்கு கிறிஸ்துவாகிய

மாதிரியும், தீத்து போன்ற மாதிரிகளும் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் போது, தேவனுடைய உபதேசத்தின்படியான அலங்காரம் நம்மிடம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? தேவனால் கட்டளையிடப்பட்டு, கிறிஸ்துவால் உபதேசிக்கப்பட்டு, அப்போஸ் தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட எல்லாவற்றையும் செய்கிறவர்களாக நாம் உண்மையாகவே உள்ளோமா? தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் 'எல்லா வற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக என்றுள்ளதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏதோ, முடிந்த வரை, எனக்குத் தெரிந்த வரை என்றெல்லாம் கூறி நாம் தப்பித்துவிட வழியே இல்லை .

## II. ஆவிக்குரிய அலங்காரத்திற்கு ஆரோக்கியமான பேச்சு அவசியம்

கிரேத்தா தீவாருக்குத் தேவையான ஆவிக்குரிய அலங்காரத்திற்கு அவசியமானவைகளில் இரண்டாவதாக வருவது. ஆரோக்கியமான பேச்சு,

கிரேத்தா தீவாருடைய பேச்சில் உண்மையும், நாணயமும், பரஸ்பர அன்பும் இல்லாதிருந்தபடியால், ஆவியானவர் தீத்துவை, இக்காரியத்திலும் முன்மாதிரியாக இருக்க வேண்டுமென்று பவுலடியார் மூலம் பணிக்கிறார். 'எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும், குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக (தீத்து. 2:8) என்று. இங்கே ஆரோக்கியமான வசனம் என்பது, தேவனுடைய வார்த்தைகள் பற்றியது அல்ல. மாறாக, ஒருவரால் பேசப்படும் பேச்சு சம்மந்தப்பட்டது. அவைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்கிறார். எதற்காக? ஒருவரை ஒருவர் கடித்துப் பட்சிக்கும் கிரேத்தா தீவார் தேவனுடைய உபதேசத்தால் தங்களை அலங்கரிக்க வேண்டுமென்பதற்காகத்தான் வேறெதற்கு?

நாம் பேசும் வார்த்தைகள் எவ்வளவு முக்கியமானவை என்பது விளங்குகிறதா? விளாங்கியாக வேண்டும் நாம் தேவனுடைய உபதேசத்தால் அலங்கரிக்கப்பட வேண்டுமானால் பிறரோடு பேசப்படும் வார்த்தைகள் கவனமுள்ளதாயிருக்க வேண்டுமென்று கொலோசெ பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு இவ்விதம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 'அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக என்று (கொலோ.4:6).

அப்படியானால், அருமையானவர்களே, பிறருடனான நம்முடைய பேச்சு எப்படிப்பட்டதாயுள்ளது? கிரேத்தா தீவார் போன்றுள்ளதா? அல்லது கிருபை பொருந்தினதாயும், உப்பால் சாரமேறினதாயுமிருக்கிறதா? சொல்லுங்கள். நம்முடைய பக்தியற்ற. தரமற்ற, முறையற்ற பேச்சால் காயப்பட்டவர்கள் எத்தனை பேர், வலியால் துடித்தவர்கள் எத்தனை பேர்? அவமானமடைந்தவர்கள் எத்தனை பேர்? நம்மை விட்டு ஒதுங்கிக் கொண்டவர்கள் எந்தனை பேர்? குடும்பத்திலிருந்து பிரிந்து நிற்பவர்கள் எத்தனை பேர்? சபையிலிருந்து விலகிப்போனவர்கள் எத்தனை பேர்? விசுவாசித்தை மறுதலித்தவர்கள் எத்தனை பேர்? சொல்லுங்கள். நாமே ஒரு இரகசியக் கணக்கெடுத்துப் பார்ப்போம். உண்மை நிலவரம் தெரியும்.

### III. ஆவிக்குரிய அலங்கரத்திற்கு தற்சாட்சி அவசியம்

கிரேத்தா தீவாருக்குத் தேவையான ஆவி அலங்காரத்திற்கு அவசியமானது அடுத்ததாக வரும் நற்சாட்சியான வாழ்க்கை.

தீத்து 2:9–10 ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். வேலைக்காரர் நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக, தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப் பேசாமல், எல்லாவற்றிலும் பிரியமுண்டாக நடந்து கொள்ளவும், திருடாமலிருந்து, சகல விதத்திலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்தி சொல்லு என்றுள்ளது. இவ்வசனப்பகுதி, மேலான அதிகாரத்திற்கான ஒருவனுடைய ஆவிக்குரிய மனோபாவம் பற்றியும், அதற்குத் தன்னை ஒப்புக்கொடுப்பது பற்றியும் பேசுகிறது.

ஆக, ஒருவன் எல்லாவற்றிலும் ஆவிக்குரிய அலங்காரத்தோடு திகழ நற்சாட்சி முக்கியம். அப்படிப்பட்ட நற்சாட்சிக்குக் கீழ்ப்படிதல் அவசியம். கீழ்ப் படிதலுக்கு அதிகாரத்தை ஏற்றுக் கொள்வது அவசியம். அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுக்கும், அவருடைய நியமனத்துக்கும் எதிர்த்து நிற்கிறவனாகவே இருப்பான் (ரோமர் 13:2). ஆகையால் தான், ஆதி திருச்சபையில் நற்சாட்சிக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்களின் வேலைப்பளுவைக் குறைக்கும்படியாய், ஏழுபேரைத் தெரிந்தெடுக்க முடிவு செய்யப்பட்டபோது, நற்சாட்சி ஒரு முக்கிய அங்கமாக இருந்துள்ளது. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் (அப். 6:3) என்றுள்ளது. கிறிஸ்தவத்தில் நற்சாட்சி பட்டுப்

போகுமானால், அது கிறிஸ்துவின் நாமத்திற்கும், அவருடைய உபதேசத்துக்கும் சொல்ல முடியாத பாதிப்பை ஏற்படுத்தும்.

அருமையானவர்களே, நம்முடைய நற்சாட்சி எப்படியிருக்கிறது? கிரேத்தா தீவாரிடத்தில் எதிர்பார்க்கப்பட்ட கீழ்ப்படிதலும், பிரியமும், நல்லுண்மையும் எல்லாமட்டங்களிலும் காணப்படுகிறதா? எதிர்த்துப் போத கீழ்ப்படிதல் என்று வசனம் குறிப்பிடுவதை நாம் கவனிக்க வேண்டும். அதாவது செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்படுகின்ற எல்லா வற்றையும் அப்படியே நிறைவேற்றுவது. இப்பண்பு இரட்சகராகிய இயேசுவிடம் காணப்பட்டது. அதினிமித்தமே, நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது என்று அவரால் முழங்க முடிந்தது (யோவான் 6:34).

ஆகையால் நாம் ஒவ்வொருவரும் இந்த உண்மைகளைப் புரிந்து நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக நம்மை, அவருடைய கிருபையுள்ள வசனத்திற்கு ஒப்புக்கொடுப்போமாக! ஆமென்!

✞

# கிறிஸ்தவத்தன்மை

- விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள் (ரோமர் 14 : 1).
- கிறிஸ்துவின் வேலைக்காரனை குற்றவாளியாகத் தீர்க்காதிருங்கள் (ரோமர் 4 : 4).
- முக்கியமற்ற காரியங்கள் சரீரத்தின் ஒற்றுமையை சீர்குலைக்க ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்.
- சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடுங்கள் (ரோமர் 14 : 19)

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| இனிமையும் இதமுமான பிரசங்கம் | Louis Rushmore | *...1* |
| தேவனுடைய உபதேசத்தால்... | E.Z.S. Rajanayagam. | *...4* |
| ஞானஸ்நானம் தேவனுடைய... | Jerry Bates | *...11* |
| கடைசி நாட்கள் | Shane Fisher | *...15* |
| எது உண்மையாகவே கிறிஸ்துவை... | J.C. Choate | *...19* |
| ஐக்கியத்துக்காக இயேசுவின் ஜெபம்... | Byron Nichols | *...25* |
| ஒத்திவைப்பு என்னும் பாவம் | E.Z. Selvanayagam | *...29* |
| பாவத்தினை மேற்கொள்ளுதல் | Benny Martin | *...33* |
| நான் உமது அடியேன் | P.C.Philemon Rajah | *...37* |
| | B. Arjunan | |


## தேவன் - God


| | | |
|---|---|---|
| என் இரட்சிப்புக்கு நான் என்ன... | Betty Burton Choate | *...50* |
| தேவன் கட்டுப்பாட்டுக்குள்... | Marilyn LaStrape | *...56* |


## தேவனுடைய வார்த்தை - Word Of God


| | | |
|---|---|---|
| நிலைத்திருக்கும் வார்த்தை | Rodney Nulph | *...59* |
| வேத வாக்கியங்கள் சம்மந்தமாக | Wayne Barrier | *...63* |


## இரட்சிப்பு - Salvation


| | | |
|---|---|---|
| நான் முன்பு இருந்த மனிதனாக... | Raymond Elliott | *...65* |
| பரலோகத்தில் பேரக் குழந்தைகள்... | Rebecca Rushmore | *...68* |

## வாழ்வதற்கான உபதேசம் - Doctrine to Live


| | | |
|---|---|---|
| எதிரிகளின் விழுதலில் களிகூருதல் | D. Gene West | *...74* |
| இறுதி நியாயத்தீர்ப்பு | T. Pierce Brown | *...77* |
| பெண்கள் ஏன் சபையில் ஊழியம்... | Jack Wilkie | *...81* |


---

## செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action


| | | |
|---|---|---|
| தனியாள் சுவிசேஷம் சம்மந்தமான... | Tom Baxley | *...86* |
| ஆராதனையின் இருதயம் | Rebecca Rushmore | *...88* |


---

## ஆராதனை - Worship


| | | |
|---|---|---|
| ஆராதனையின் இருதயம் | Gary C. Hampton | *...93* |
| புதிய ஏற்பாட்டு கொடுத்தலும் பழைய... | Brian R. Kenyon | *...95* |


---

## சபை - The Church


| | | |
|---|---|---|
| சபையின் தெய்வீக ஆரம்பம் | Ed Melott | *...101* |
| சபையால் இன்னும் வளர முடியும் | Steve Snider | *...104* |


---

## கிறிஸ்தவ இல்லம் - Christian Home


| | | |
|---|---|---|
| நம் விளையாட்டு வீரர்களை... | Wes Mc Adams | *...107* |



# ஞானஸ்நானம் தேவனுடைய கிரியையாய் இருக்கிறது

## Baptism is the work of God

*Jerry Bates*

இவ்வுலகில் ஞானஸ்நானம் என்பது மத சம்மந்தமான உபதேசங்களில் அதிகமாக விவாதிக்கப்படும் ஒன்றாக இருக்கிறது, கிட்டத்தட்ட எல்லா கிறிஸ்தவ அமைப்புகளுமே ஏதோ ஒரு வகையான ஞானஸ்நானத்தை எடுத்துக்கொண்டுத்தான் இருக்கிறார்கள். பெரும்பாலான மக்கள் புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தைப் பற்றி போதிக்கிறதென்றும் வாழ்க்கையின் ஏதோ ஒரு காலகட்டத்தில் ஒரு கிறிஸ்தவர் ஞானஸ்தானம் பெற வேண்டும் என்றும் ஒத்துக்கொள்வார்கள். இருந்த போதிலும், எப்படி ஞானஸ்நானம் பெறுவது, எதற்காக ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதைக்குறித்து பல்வேறு குழப்பங்களும் பல்வேறு முரண்பாடுகளும் உள்ளன. இதற்கு நாம் அநேக வசனங்களை உதாரணங்களாக காட்ட முடியும். ஆனால், அவர்கள் எல்லாவற்றையும் இந்த ஒரே கட்டுரையில் நம்மால் அடக்க முடியாது. பெந்தெகொஸ்தே நாளிலே பேதுரு பிரசிங்கத்த போது இந்த வார்த்தைகளை பேசினார்38 பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

(அப்போஸ்தலர் 2:38). அப்போஸ்தலனாகிய பேதுரு அந்த ஜனங்கள் இரண்டு காரியங்களை செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டார் அதாவது அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கட்டளையிட்டார்.

முதலாவது மனந்திரும்ப வேண்டும் என்னும் கட்டளையை நாம் இங்கே காண்கிறோம். மனந் திரும்புவது என்பது ஒருவர் தன்னுடைய மனதை மாற்றுவதாகும் அதாவது ஒருவர் தன் மனதையும், விருப்பத்தையும், உணர்வுகளையும் முற்றிலுமாக மாற்றும் ஒரு அனுபவமந் தான் மனந்திரும்புதலாகும். இது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நம்மை முற்றிலுமாக சமர்ப்பிப்பதாகும்.

ஆனால், இந்தக் கட்டளையை ஒருவர் நிறைவேற்ற விசுவாசம் அவருக்குள் இருப்பது அவசியமாகிறது. ஏனென்றால், ஒருவருக்குள் விசுவாசம் இல்லை என்று சொன்னால் அவர் தன்னுடைய வாழ்க்கையை மாற்றுவதற்கு எதுவும் தூண்டுகோலாக இருக்காது. இது கீழ்படிவதற்கு சற்று கடினமான கட்டளையாக இருந்தாலும் கூட ஒருவர் தேவனுக்கு முழுமையாக தன்னை அர்ப்பணிக்கவில்லை என்றால் இரட்சிப்பு என்பது சாத்தியமில்லாத ஒன்றாகி விடுகிறது.

இன்றைய நாட்களில் மனந்திரும்புதல் பற்றி நாம் அதிகமாக கேள்விப்படுவதில்லை. கிறிஸ்துவின் அன்பைப்பற்றியும், சிலுவையில் அவருடைய மரணத்தை பற்றியும் மரணத்தினால் நாம் விற்கப்பட நம்முடைய பங்கில் விசுவாசம் தேவை என்பதைப் பற்றி அதிகமாக பேசப்பட்டிருக்கிறது. ஆனால், மனந் திரும்புதல் பற்றி அதிகமாக பேசப்படுவதில்லை.

இரண்டாவது நாம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. தமிழில் நாம் ஞானஸ்நானம் என்று அழைக்கும் வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை **Baptisma** என்பதாகும். நாம் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ளும்படியாக ஞானஸ்நானம் பெறும்படியாக கட்டளையை பெற்றிருக்கிறோம். மனந் திரும்புதலும் ஞானஸ்நானமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணையப்பட்டிருக்கும் இணைப்புச் சொற்களாகும். பலர் நம்முடைய பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டு விட்டதால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். அது தவறான வேத விளக்கமாகும் நம்முடைய பாவங்கள் ஏற்கனவே மன்னிக்கப்பட்டு விட்டதால் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்றால் அதே காரணத்திற்காக நாம் மனந்திரும்பவும் வேண்டும். இதன் பொருள் நாம் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் கொண்டு வருவதற்கு முன்பாகவே நமக்கு இரட்சிப்பு கிடைத்து விடுகிறது என்றாகிவிடும்.



எனவே தான் இயேசு கிறிஸ்து இவ்விதமாய் அறிவித்தார் (லூக்கா 13:3,5). இதே போதனையை பிரதிபலிக்கும் இன்னும் அநேக வசனங்களும் உண்டு.

ஞானஸ்நானம் சம்மந்தமாக தெளிவான விளக்கங்கள் வேதாகமத்தில் இருக்கும் போது சரியான ஞானஸ்நானத்தை பெற்றுக் கொள்வதற்கு ஜனங்கள் இன்னும்

தயக்கம் காட்டுவது ஏன்? இந்த தவறான புரிந்து கொள்ளுதலுக்கு காரணம் விசுவாசத்தின் பங்கு தான். இது பற்றிய காரியங்களை நாம் [எபேசியர் 2:8-9] வசனங்களில் காண முடியும் 8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. [எபேசியர் 2:8,9]. நம்மில் பெரும்பாலானோரால் வைக்கப்படும் விவாதம் நாம் கிரியைகளினாலே அல்ல விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் என்பதாய் இருக்கிறது. அது மனந்திரும்புவது ,ஞானஸ்நானம் பெறுவது போன்று நாம் செய்யும் கிரியைகளை ஒன்றுமில்லாமல் செய்து விடுகிறது. இன்னும் பலர் ஞானஸ்நானத்தை நாம் செய்யும் ஒரு செயலாக எண்ணி, அது நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்படுகிறோம் என்று செய்யும் உபதேசத்திற்கு பொருந்தாததாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப்போல் இன்னும் சிலர் ஞானஸ்நானம் இரட்சிப்புக்கு அவசியமானது என்று நம்பினால் அதன் பொருள் ஒருவர் தன்னைத்தானே இரட்சித்து கொள்ள முயற்சிக்கிறார் என்பதாகிவிடும், ஒருவரால் அப்படி செய்ய முடியாதே.

நாம் இங்கே துரிதமாக கருத்தில் கொள்ள வேண்டிய சில காரியங்கள் உண்டு. முதலாவது, புதிய ஏற்பாடு ஞானஸ்நானம் என்பது மனிதனுடைய செயல் என்று எங்கும் குறிப்பிடவில்லை.

வேதாகமத்தில் ஞானஸ்நானம் என்பது எப்போதுமே ஒரு செயப்பாட்டு வினையாக தான் சொல்லப்பட்டு இருக்கிறது அதன் பொருள் இது ஒரு நபருக்கு செய்யப்படும் ஏதோ ஒரு செயல் தானே தவிர அந்த நபர் செய்யும் ஒரு செயல் அல்ல. இது எப்படிப்பார்த்தாலும் ஒருவர் ஏதோ ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக அல்லது அடைவதற்காக செய்யும் நற்கிரியையோ அல்லது முயற்சியோ அல்ல.கொலோசெயர் 2:12 ன் படி ஞானஸ்நானத்தில் தேவன் தான் செயல்படுகிறவராக அல்லது கிரியை செய்கிறவராக இருக்கிறார்'ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப் பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

[கொலோசெயர் 2:12]. நாம் கிறிஸ்துவோடு கூட அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடு கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறோம். இங்கே ஞானஸ்நானத்தில் மனிதன் செயல்படுகிறதாக அல்லது ஏதோ

கிரியை செய்கிறதாக எதுவுமே சொல்லப்படவில்லை என்பதை கவனியுங்கள். ஞானஸ்நானத்தில் தேவன் செயல்படுகிறார் அதில் நாம் நம்முடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறோம் அவ்வளவுதான். இங்கே செயல்படுகிறவர் அல்லது கிரியை செய்கிறவர் தேவனே தேவன் தான் ரட்சிக்கிறார் மனிதன் தன்னைத்தான் இரட்சித்து கொள்ளவில்லை.

இரண்டாவது கருத்து ஞானஸ்நானத்தில் நாம் ஒருபோதும் நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முயற்சிப்பதில்லை. யோவான் ஒன்பதாம் அதிகாரத்தில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு பிறவிக்குருடனுக்கு பார்வை கொடுப்பதை நாம் காண முடியும். அந்த அற்புத சம்பவத்தில் நம் ஆண்டவர் தரையிலே துப்பி உமிழ்நீரினால் சேறு ண்டாக்கி அந்தச் சேற்றை குருடனுடைய கண்களின் மேல் பூசி நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். இயேசு கிறிஸ்து சொன்னதை இந்த மனிதன் செய்யாமல் இருந்திருந்தால் சுகம் பெற்றிருக்க மாட்டான் என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். அந்த பிறவி குருடன் இயேசு சொன்னபடி செய்தபடியால் பார்வை அடைந்தவனாய் திரும்பி வந்தான் (யோவான் 9:7). அந்த அற்புதம் நடந்த உடனேயே மதத் தலைவர்கள் மற்றும் அங்கே கூடி இருந்த மக்கள் மத்தியில் எப்படி அவன் பார்வை அடைந்தான் என்பதை குறித்து அமளி உண்டானது. அந்த மதத் தலைவர்கள் இயேசு செய்த அந்த அற்புதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தபடியால் அந்தப் பிறவிக் குருடனிடம் திரும்பத் திரும்ப பார்வை அடைந்ததை குறித்து கேள்வி கேட்டார்கள். அந்தப் பிறவி குருடன் இயேசு தம்மை பார்வையடைய செய்தார் என்று உண்மையைச் சொன்னான்( 9:11). அப்போது அங்கு இருந்தவர்களில் ஒருவர் கூட சீலோவாம் குளம் பார்வையடைய செய்தது என்று சொல்லவில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அங்கிருந்தவர்கள் இயேசுவின் வல்லமை தான் அவனை சுகமாக்கியது என்பதை உணராமல் இல்லை. எனவே நாம் தேவனுடைய கட்டளைகளின்படி ஞானஸ்நானம் பெறும் போது நம்மை நாமே இரட்சித்துக் கொள்வதில்லை மாறாக நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவின் ரத்தத்தினாலே கழுவப்படுகின்றன (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). ஆனால், நாம் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியும்போது மாத்திரமே அதாவது மனந் திரும்பி ஞானஸ்நானம் பெறும் போது மாத்திரமே இது சாத்தியமாகும்.



# கிறிஸ்தவத்தின் முரண்பாடுகள் : ஏற்கனவே, ஆனால் இன்னும்

# Paradoxes of Christianity : Already,but not yet

*Shane Fisher*

தமிழ் அகராதி **paradox** என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு முரண்பட்டது போல் இருந்தாலும் உண்மையான ஒரு கூற்று என்று பொருள் கொடுக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் பல இடங்களில் முரண்பாடு உள்ள வாக்கியங்கள் இடம்பெற்றிருக்கின்றன. மேற்ச்சொல்லப்பட்ட தலைப்பு ஒரு முரணாக தோன்றினாலும் கூட, இதிலிருந்து நாம் சில ஆவிக்குரிய உண்மைகளை கற்றுக் கொள்ள முடியும். வேதாகமம் முழுவதும் நாம் பார்க்கும் போது இதுபோன்ற முரண் உள்ள வாக்கியங்கள் நம் ஆழமான சத்தியங்களை தியானிக்க உதவுகின்றன. இங்கே நாம் பரிசீலிக்கப்போகும் முரண்பாடு வேதாகமம் கடைசி நாட்களில் ஆரம்ப நிலை என்று எதை போதிக்கிறதோ அது ஏற்கனவே இருக்கிறதென்றும், பூரணமான நிலை இன்னும் வரவில்லை என்றும் நாம் பார்க்கப் போகிறோம்.

ஐந்து கருப்பொருள்களை கொண்டு இந்த முரண்பாட்டை உதாரணங்களுடன் விளக்கப் போகிறோம்: 1. உயிர்த்தெழுதல், 2. ராஜ்ஜியம், 3. இரட்சிப்பு, 4. நியாயத்தீர்ப்பு, 5. தேவனுடைய பரம நகரம்.

### உயிர்த்தெழுதலின் ஆரம்ப நிலை (ஏற்கனவே) மற்றும் பூரண நிலை (இன்னும் வரவில்லை).

ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்த போது அவர்கள் தங்கள் மீதும், தங்கள் சந்ததிகள் மீதும் பாவத்தின் விளைவுகளாக சரீர மரணத்தை கொண்டு வந்தார்கள் (ஆதியாகமம் 2:16,17; 1கொரிந்தியர் 15:22). விலக்கப்பட்ட கனியை புசிக்கும் நாளிலே நீங்கள் சாகவே சாவீர்கள் என்று தேவன் சொன்ன வார்த்தைகளில் நிச்சயம் இருந்தது, அதன் காரணமாக ஆதாம் சரீரப்பிரகாரமாக மரித்தான் (ஆதியாகமம் 5:5). ஆதாம் மற்றும் ஏவாளின் ஒவ்வொரு சந்ததியும் பாவம் செய்வதை தெரிந்து கொண்டு ஆவிக்குரிய மரணத்தை தழுவுகிறது.

இந்த ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடத்திலிருந்து பாவத்தின் காரணமாக பிரிவதாகும் (ஏசாயா 59:1-2).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரண்டு வகையான மரணங்களையும் அழிப்பதற்காக உலகத்திற்கு வந்தார். நாம் ஆவிக்குரியப் பிரகாரமாக தேவனிடத்தில் ஒப்புரவாகும்படி அவர் நம்முடைய பாவங்களுக்காக பாவ பலியாக செலுத்தப்பட்டார் (2கொரி 5:20–21). நம்ம ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சரீர பிரகாரம் ஆகும் மரித்து அப்படி இல்ல இருந்து நம்மை தப்புவிக்கத்தக்கதாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த முதற்பேரானவரானார். அவர் அழிவில்லாத மகிமையான சரீரத்தை உடையவராக உயிர்த்தெழுந்தார் (அப் 26:23; 1கொரிந்தியர் 15; எபிரேயர் 2:14,15).

ஒருவர் இரட்சிக்கப்படும் படியாக தேவன் என்ன நிபந்தனைகளை வைத்திருக்கிறாரோ அந்த நிபந்தனங்களுக்கு ஒரு பாவி உட்படும்போது ஆவிக்குரியப்பிரகாரமாக உயிர்த்தெழ முடியும் (ரோமர் 6:1–4). அது மாத்திரமல்ல, அந்த நபர் தேவனுக்குள்ளாக மறுபடியும் கொண்டுவரப்படுகிறார் அதாவது ஆவிக்குரிய ஜீவனுக்குள்ளாக கொண்டுவரப்படுகிறார் (யோவான் 10:10; எபேசியர் 3:5,6). மேலும் இந்த நபர் உயிர்த்தெழுதலின் (ஏற்கனவே)என்னும் ஆரம்ப நிலைக்குள் பிரவேசிக்கிறார். (யோவான் 5:24–27) இவ்விதமாய்ச்சொல்கிறது‘என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு, அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டுநீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது: அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில்,பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். (யோவான் 5:24–27).

ஒரு கிறிஸ்தவர் உண்மையுள்ள வாழ்க்கையை வாழ்ந்தால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது நடக்கும் அந்த உயிர்த்தெழுதலின் பூரண நிலையின் போது மரித்தோரிலிருந்து சரீரப்பிரகாரமாக உயிர்த்தெழுவேன் என்னும் நம்பிக்கையை கொண்டிருக்க முடியும் ( யோவான் 6:39;44,54;12:48) (அப் 1:9–11; 1 தெச 4:13–18).

யோவான் 5:28,29 உயிர்த்தெழுதலின் பூரண நிலையை (இன்னும் வரவில்லை) நிரூபித்துக் காட்டுகிறது. இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்: ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும். அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் (யோவான் 5:28,29).

## ராஜ்யத்தின் ஆரம்ப நிலை (ஏற்கனவே)
## ராஜ்யத்தின் பூரண நிலை (இன்னும் வரவில்லை)

தேவனே இந்த அண்ட சராசரங்களின் ராஜாவாக இருந்து வருகிறார் (சங்கீதம் 95:3). தேவன் இப்பிரபஞ்சத்தை ஆட்சி செய்து வருகிறபடியால் மனித இனம் ஆரம்பத்திலிருந்து தேவனுடைய சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படியவும் கணக்கு ஒப்புவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறது (ரோமர் 5:15;1 யோவான் 3:4). யோவான் ஸ்நானனும், இயேசு கிறிஸ்துவும் மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசிங்கத்தபோது( மத்தேயு 3:2) தேவனுடைய ராஜ்ஜியம் அதாவது தேவனுடைய அரசாட்சி மேசியாவாகிய இயேசுவினிடத்தில் ஒப்பு கொடுக்கப்படுவதைப்பற்றித்தான் அறிவித்திருக்கிறார்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் ஊழியம் செய்த நாட்களில் அவர் நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே என்று சொன்னார். (மத்தேயு 12:28). ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஒரு அரசியல் ராஜாவாக ஆக்க முயற்சித்திருக்கிறார்கள் வசனம் இவ்விதமாய்ச்சொல்கிறது யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது, பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்த.

(மத்தேயு 11:12). அந்த நாட்களில் ஜனங்கள் யோவானின் ஞான ஸ்நானத்தை பெற்றுக் கொண்டார்கள் அது ராஜ்ஜியத்தின் ஆரம்ப நிலைக்குள் பிரவேசிக்க அவர்களுக்கு ஒரு வாய்ப்பை கொடுத்தது (யோவான் 1:28,35-42; 3:3-5; லூக்கா 7:29-30; மத்தேயு23:13). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரமேறின போது, அவர் தம்முடைய ராஜ்யத்தை ஆளும் படியாக பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்தார் . இயேசு கிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டது (மத்தேயு 28:18). இயேசுவுக்கு விரோதமாக யூதர்கள்

செய்த கலகத்தினாலும் ,அவர்கள் இயேசுவை தள்ளினபடியினாலும் இயேசு கிறிஸ்து அந்த யூதர்கள் மீது தம்முடைய வல்லமையை காட்டும் படியாக கிபி 70 ல் தேவன் எருசலேம் பட்டணத்தை அழித்துப் போட்டார்[ லூக்கா21:29–33]. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் நாம் இன்று ராஜ்ஜியத்தின் ஆரம்ப நிலைக்குள் பிரவேசிக்க முடியும் அதில் தான் இன்றைய நாட்களில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆளுகை செய்து கொண்டிருக்கிறார். [கொலோசெயர் 1:13,; 4:11; அப்போஸ்தலர் 8:12; ரோமர் 14:17]. ஜனங்கள் தங்கள் அன்றாட வாழ்வில் தேவனோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு தேவனுடைய ராஜ்ஜியமாகிய சபை தற்கால வெளிப்பாடாக இருக்கிறது.

அதே நேரத்தில் தேவனுடைய ராஜ்யத்தின் பூரண நிலை என்று ஒன்று இருக்கிறது [இன்னும் வரவில்லை]. இது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுபடியும் வந்து ராஜ்யத்தை பிதாவனிடத்தில் ஒப்புக்கொடுப்பதை குறிக்கிறது. இப்போது நீதிமான்கள் எல்லோரும் தேவனோடு அந்த நித்திய வாசஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார்கள், அதே நேரத்தில் துன்மார்க்கரும் நித்திய நரகத்திற்குள் தள்ளப்படுவார்கள் [1 கொரிந்தியர் 6:9–11; 15:24; கலாத்தியர் 5:21; எபேசியர் 5:5].

## இரட்சிப்பின் ஆரம்ப நிலை [ஏற்கனவே] மற்றும் பூரண நிலை [இன்னும் வரவில்லை]

இயேசு கிறிஸ்து இழந்து போனதை தேடவும் இரட்சிக்கவும் இவ்வுலகத்திற்கு வந்தார் [லூக்கா19:10]. அவர் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார் [மத்தேயு 1:21; 1 தீமோத்தேயு 2:4]. நம் சுவிசேஷத்தின் நிபந்தனைகளுக்கு உட்படும்போது நம் கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டு நாம் இரட்சிப்பின் ஆரம்ப நிலைக்குள் பிரவேசிப்போம் [அப் 2:38]. நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தால். அவர் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தினாலே சகல பாவங்களையும் கழுவ அவர் உண்மை உள்ளவராக இருக்கிறார். நாம் செய்ய வேண்டியது எல்லாம் தேவன் மேல் விசுவாசம் வைத்து நம்முடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டியதுதான் 1 யோவான் 1:7–9; அப்போஸ்தலர் 8:22–24]. நாம் உண்மையாக ஜெபித்தால் இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிப்பின் பூரண நிலையாகிய பரலோகத்திற்கே நம்மை அழைத்துச் செல்வார் அங்கே நம்மால் கிருபையிலிருந்து விழவே முடியாது ஏனென்றால் அங்கே பாவமே இராது [1 பேதுரு 1:5; எபிரேயர் 1:14;5:9].

## நியாய தீர்ப்பின் ஆரம்ப நிலை (ஏற்கனவே) மற்றும் பூரண நிலை (இன்னும் வரவில்லை)

நாம் இப்பூமியில் வாழும்போதே நியாயசனத்திற்கு முன்பாக நிற்கிறோம். எதிர்ப்பின் ஆரம்ப நிலை சாத்தான் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்த போதே ஆரம்பமாகிவிட்டது ( 1 தீமோத்தேயு 3:7). தேவன் தம்முடைய குமாரனைக் கொண்டு இந்த பூமியை நியாயந்தீர்க்க ஒரு நாளை குறித்து விட்டார் (அப் 17:31). நாம் தேவனுடைய கட்டளைகளை மீறினால் இப்போது நாம் பாவம் செய்தவர்களாக இருந்து பரிசுத்தமும், நீதியுமுள்ள தேவனுக்கு முன்பாக பாவிகளாக நிற்போம் யோவான் 3:18 இவ்விதமாய் சொல்லுகிறது அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்: விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று (யோவான் 3:18). நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தால் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோமர் 3:24; 5:1). நாம் கிறிஸ்துவுக்குள் இருந்தால் நமக்கு ஆக்கினை தீர்ப்பில்லை (ரோமர் 8:1). நாம் தேவனுக்காக தொடர்ந்து வாழும்போது அவர் நம்மை நீதிமான் ஆக்கிக் கொண்டே இருப்பார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்போது நியாயத்தீர்ப்பின் மாபெரும் நாள் அதாவது நியாயத் தீர்ப்பின் பூரண நிலை தொடங்கும்( மத்தேயு 25:31-46; அப். 17:30,31). கிறிஸ்துவின் வருகையின் போது நீதிமான்கள் அவரிடமிருந்து தக்க பலனை அடைவார்கள் அதாவது உலகத் தோற்றமுதல் நீதிமான்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற ராஜ்யத்திற்குள்ளாக அவர்கள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவார்கள் (மத்தேயு 25:34)அந்நாளிலே துன்மார்க்கர் பிசாசுக்காகவும், அவனுடைய தூதருக்காகவும் ஆயத்தமாக் கப்பட்டிருக்கிற நித்திய அக்னி கடலிலே தூக்கி எறியப்படுவார்கள்.

## தேவனுடைய நகரத்தின் ஆரம்ப நிலை (ஏற்கனவே) மற்றும் அதன் பூரண நிலை (இன்னும் வரவில்லை).

நாம் கிறிஸ்தவர்களாக தேவனுடைய நகரமாகிய புதிய எருசலேமின் ஆரம்ப நிலைக்குள் பிரவேசிக்கிறோம். (எபிரேயர் 12:22-24) இவ்விதமாய்ச் சொல்கிறது நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற

முதற்பேறானவர்களிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள் (எபிரேயர் 12:22-24).

மேற்சொல்லப்பட்ட இந்த வசனப் பகுதியில் கிறிஸ்தவர்களுக்கான ஆசீர்வாதங்கள் முற்றுப்பெற்ற நிகழ்காலத்தில் சொல்லப்பட்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். வேறு விதமாகச் சொன்னால் கடந்த காலத்தில் ஒரு செயல் நடந்திருக்கிறது அது விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்தி யிருக்கிறது என்று பொருள்படும். இருந்தபோதிலும், எபிரேய ஆசிரியர் தேவனுடைய நகரத்தின் பூரண நிலையைப் பற்றியும் (இன்னும் வரவில்லை) விவாதித்திருக்கிறார் நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். (எபிரேயர் 13:14). அப்போஸ்தலனாகிய யோவானும் தேவனுடைய நகரத்தைப் பற்றி தான் வெளிப்படுத்தின விசேஷம் 21 22 அதிகாரங்களின் இறுதியில் எழுதி யிருக்கிறார். எபிரேயர் 12:22-24 வசனங்களின்படி கிறிஸ்தவர்கள் தேவனுடைய நகரத்தின் ஆரம்ப நிலைக்குள் பிரவேசித்திருப்பதை அறிந்து கொள்ள முடியும். ஆனால், தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். வசனங்களோடு எதையாகிலும் கூட்டினாலோ, அல்லது இவைகளில் இருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டாலோ தேவன் நகரத்திலிருந்து பங்கை எடுத்துப் போடுவார் (வெளிப்படுத்தின விசேஷம் 22:18,19). இவைகள் எல்லாம் தேவனுடைய பரிசுத்த நகரத்தின் ஆரம்ப நிலைக்குள் தான் பிரவேசித்திருக்கிறோம் அதனுடைய பூரண நிலைக்குள் பிரவேசிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறது. ஏனென்றால், பூரண நிலையில் நாம் பிரவேசிக்கும் போது அங்கே பாவமே இராது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அந்த மகா நாளான நியாயத் தீர்ப்பின் நாளுக்கு முன் பிசாசின் சக்திகள் சுத்த நகரத்தை வளைந்து கொண்டு உங்களால் முடிந்தவரை அந்த பரிசுத்த நகரத்தை அழிக்க முயற்சி செய்யும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:9). எனவே, பிசாசின் எல்லா தந்திரங்களுக்கும் எதிர்த்து நிற்கத்தக்கதாக தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்து கொள்ள வேண்டும் (எபேசியர் 6:10-18).

முடிவுரை

நீங்கள் தேவனிடத்திலிருந்து ஆவிக்குரியப் பிரகாரமாக பிரிந்திருக்கிறீர்களா? தேவனோடு சரியான உறவில் இருக்க நீங்கள் ஏன் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியக் கூடாது? அப்படி நீங்கள் செய்யும் போது புதிதான ஜீவன் உள்ளவர்களாக நடந்து கொள்ளும்படி எழுப்பப்படுவீர்கள் ரோமர் 6:4] நீங்கள் தேவனுடைய குமாரனுடைய ரத்தத்தினால் நீதிமான்களாக்கப்படுவீர்கள் [ரோமர் 5:9]. நீங்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தின் ஆரம்ப நிலைக்குள் பிரவேசிப்பீர்கள் [கொலோசெயர் 1:13].

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே இரட்சிப்பை பெற்றுக் கொண்டிருப்பீர்கள் [அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:12]. தேவனுடைய நகரத்தின் ஆரம்ப நிலைக்குள் நீங்கள் பிரவேசித்திருப்பீர்கள் [எபிரேயர் 12:22-24]. நீங்கள் இவ்வுலகில் உண்மையுள்ள வாழ்க்கை வாழும் போது சரீரப்பிரகாரமாக மரித்தாலும் கூட, நித்திய ஜீவனுக்கான சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலை நீங்கள் அனுபவிப்பீர்கள்[ யோவான் 5:28,29]. அதுமாத்திரமல்லாமல் தேவனுடைய ராஜ்யத்தின் பூரண நிலைக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தையும் பெற்றுக் கொள்வீர்கள் [2 பேதுரு 1:5-11]. தேவனுடைய நகரத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை பெறுவது என்பது எத்தனை ஆசீர்வாதமானது! [எபிரேயர் 13:14].

## நாம் அல்ல, தேவனே

1. நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்.
(சங்கீதம். 100: 33)

2. நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.
(கலாத்தியர். 2:20)

3. நீங்கள் அல்ல ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்.
(மத்தேயு.10:20)

4. நான் அல்ல, தேவனே உத்தரவு அருளிச்செய்வார்.
(ஆதியாகமம். 41:16)

5.நான் அல்ல தேவகிருபையே பிரயாசப்பட செய்தது.
(கொரிந்தியர். 15:10)



# கடைசி நாட்கள்

## The last days

*J C choate*

**தே**வனுடைய தீர்க்கதரிசிகள் கடைசி நாட்களைப் பற்றி பேசி இருக்கிறார்கள். ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாய்ச் சொன்னார்:2 கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். [ஏசாயா 2:2–3].. இதே காரியங்களை மீகா தீர்க்கதரிசியும் பதிவு செய்திருக்கிறார். ஆனாலும் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்பட்டிருக்கும், எல்லா ஜாதிகளும் அதனிடத்திற்கு ஓடி வருவார்கள். திரளான ஜாதிகள் புறப்பட்டுவந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போமென்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும் [மீகா4:1,2].

நாம் புதிய ஏற்பாட்டுக்கு வரும்போது, அப்போஸ்டதலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்திருக்கிறபடி கர்த்தர் கட்டளையிட்ட படியால் அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேமிலே கூடியிருந்தார்கள் [லூக்கா 24:44–49] யோவான்14:26ல் இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணினபடியே அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் அந்நாளிலே இறங்கினார். அதன் விளைவாக அப்போஸ்தலர்கள் உலகின் பல பகுதிகளிலிருந்து அங்கே கூடியிருந்த ஜனங்களின் பாஷைகளை பேசினார்கள். இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியமடைந்து அப்போஸ்தலர்கள் மதுபானத்தினால் நிறைந்திருந்தார்கள் என்று

சொன்னார்கள் அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்கதரிசனஞ்சொல்;லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள் [அப்போஸ்தலர் 2:14-17]. எபிரேய எழுத்தாளர் இவ்விதமாய் அறிவித்தார்.

'பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களை உண்டாக்கினார் [எபிரேயர் 1:1,2]. மேலும், பவுலும் தீமோத்தேயுவுக்கு இவ்விதமாய் எழுதினார். மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர் களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. [2 தீமோ 3:1-5].

இப்போது நமக்கு மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற வசனங்களை வைத்துப் பார்த்தால் பல்வேறுபட்ட எழுத்தாளர்கள் கடைசி நாட்களைப் பற்றியும் அந்நாட்களில் சம்பவிக்கும் வேறுபட்ட காரியங்களை குறித்தும் எழுதியிருக்கிறார்கள் என்பதை நம்மால் காண முடிகிறது. முதலாவதாக, எந்த நாட்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவைகள் அந்த நாட்கள் தொடங்கி விட்டனவா? நாம் இப்போது அந்த

நாட்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா அந்த நாட்களில் என்ன சம்பவிக்கும் அந்த நாட்கள் எத்தனை நாட்கள் நீடிக்கும் என்று அநேக கேள்விகளை நமக்குள் நாம் எழுப்பலாம்.




பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் கடைசி நாட்களை வருங்காலத்தில் வரும் ஒன்றாகத்தான் பேசியிருக்கிறார்கள். இருந்த போதிலும், கிறிஸ்துவின் மரணத்திற்குப் பிறகு புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கடைசி நாட்களை நிகழ்காலத்தில் இருக்கின்ற ஒன்றாகவே பேசியிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் யோவேல் தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டினதை நாம் பார்த்தோம். அங்கே பேதுரு கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று தேவன் சொன்னது அந்தப் பெந்தகோஸ்தே நாளிலே நிறைவேறுகிறது என்று சொன்னார்.

எனவே, கடைசி நாட்கள் என்பது கிறிஸ்துவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலிலிருந்து தொடங்குகிறது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. வேதாகம வரலாறு பிதாக்களின் காலம் மோசேயின் காலம் அல்லது யூத காலம் கிறிஸ்தவ காலம் என்று பிரிக்கப்பட்டு இருந்தாலும் கூட நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் இந்த கிறிஸ்தவ காலந்தான் மாபெரும் காலமாக இருக்கிறது. ஆகவே, கடைசி நாட்கள் என்பது கிறிஸ்துவின் மரணத்திலிருந்து அவருடைய இரண்டாம் வருகை வரையிலான கால அளவை குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை கிறிஸ்தவ காலம் மற்றும் நாம் அறிந்திருக்கின்ற எல்லாவற்றிற்கும் ஒரு முடிவை கொண்டு வரும். நாம் ஏற்கனவே கடைசி நாட்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் இது காட்டுகிறது.

எண்ணற்ற காரியங்கள் இந்த கடைசி நாட்களில் நடைபெறும் என தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. அதாவது கடைசி நாட்களில் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக திருவுளம் பற்றுவார். அப்பபோஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்தானத்தை பெற்றுக் கொள்வார்கள்; முதன்முறையாக சுவிசேஷம் பிரசிங்கப்படும். சபை ஸ்தாபிக்கப்படும்; கிறிஸ்தவ காலம் செழித்தொங்கும்; புதிய

ஏற்பாடு புத்தக வடிவில் மனிதனுக்கு கொடுக்கப்படும்; சுவிசேஷம் உலகெங்கும் பிரசங்கிக்கப்படும்; கிறிஸ்தவர்கள் துன்பப்படுத்தப்படுவார்கள்; குறித்த காலத்தில் கிறிஸ்து மீண்டும் வருவார், என்பன போன்ற காரியங்கள் முன்னறிவிக்கப்பட்டன.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் என்று எச்சரித்தார். மேலே பட்டியலிட்டிருக்கும் பாவங்களையும், கொடிய காலங்களையும் வைத்துப் பார்த்தால் மனிதனுக்கு எல்லா காலகட்டங்களிலும் பாவத்தோடு ஒரு போராட்டம் இருந்து வந்திருக்கிறது என்பது புலப்படுகிறது. காரியங்கள் இன்னும் மோசமானதாக மாறிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த எச்சரிப்பு பவுலால் விடுக்கப்படுகிறது. இந்தக் கொடிய காலங்களில் மனிதனுடைய நிலைமை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி, மனிதன் எப்போதுமே பாவத்தை எதிர்கொண்டு, இழுக்கடிக்கப்பட்டு இரட்சிக்கப்படுவதற்கான அவசியத்தில் இருக்கிறான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆகவே, நாம் இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய குடும்பத்தில் அங்கம் வகிக்கத்தக்கதாக விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் அவருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுக்க வேண்டும். இவ்விதமாக நாம் செய்யும் போது நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் அதன் பிறகு நாம் நம்முடைய ஜீவியங்களை உலகம் முழுவதிலும் சுவிசேஷத்தை அறிவிப்பதில் செலவழிக்க வேண்டும்.

சிலர் கடைசி நாட்கள் என்பதை சொல்அர்த்த ரீதியாக கர்த்தருடைய வருகைக்கு முன்பான சில நாட்கள் என்று பொருள் கொடுக்கிறார்கள். ஆனால், உண்மையில் கடைசி நாட்கள் என்பது ஏறத்தாழ 2000 ஆண்டுகளாக இருந்து வருகிறது. இந்த கடைசி நாட்கள் எப்போது முடிவுக்கு வரும் என்பதை பற்றி நமக்கு எந்த அறிவும் இல்லை. நம் ஆண்டவர் இன்று கூட வரக்கூடும், இன்றிலிருந்து நூறு ஆண்டுகளுக்கு பிறகு வரக்கூடும் அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு வரக்கூடும் யாருக்குத் தெரியும்? கிறிஸ்துவின் வருகையை பற்றி தேவனுக்கு மாத்திரமே தெரியும் [மத்தேயு 24:36]. இங்கே கருத்து என்னவென்றால் கர்த்தருடைய வருகைக்கு முன்பான நாட்கள் அது எத்தனை நாட்களாக இருந்தாலும் சரி அது நாட்களாகத்தான் இருக்கும். கர்த்தருடைய வருகைக்கு முன் கடைசி காலம் அல்லாமல் வேறொரு காலகட்டம் நிச்சயமாக இருக்காது. கடைசி காலம் என்பது எத்தனை வருடங்களை உள்ளடக்கிய காலகட்டமாக இருந்தாலும்

கூட நித்தியத்தோடு ஒப்பிடும்போது அது மிக குறைந்த கால அளவேயாகும்.

நம் கர்த்தருடைய வருகையின் போது இந்தக் கடைசி காலத்திற்கு ஒரு முடிவு வருகிறபடியால் அவருடைய வருகைக்காக நம்மை நாம் ஆயத்தமாக்கிக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய வருகையின் போது, மரித்தோர் யாவரும் உயிரோடு எழுப்பப்படுவார்கள், வானமும் பூமியும் அழிந்து போகும், நியாயத் தீர்ப்பு நடந்தே றும், நீதிமான்கள் என்றென்றும் கர்த்தரோடு வாழ்வதற்காக வானத்திற்கும் புதிய பூமிக்கும் அழைத்துச் செல்லப்படுவார்கள். அன்பானவர்களே, அந்த நித்தியத்திற்கு ஆயத்தமாவதற்கு இந்த கடைசி நாட்கள் தான் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் காலத்தை ஞானமாக பிரயோஜனப்படுத்திக்கொள்வோம், ஏனென்றால் நம் ஒருவருக்கும் இரண்டாவது வாய்ப்பு தரப்படாது.

எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிற வைகளினாலே, உலகமுண்டானது தற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும், ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை.

(ரோமர் 1:20).

இந்த வசனத்தில் ஆதலால் அவர்கள் போக்கு சொல்ல இடமில்லை என்னும் சொற்றொடரை வாசிக்கும் போது உண்மையாகவே அது என்னை அதிக பாரப்படுத்துகிறது . இன்னும் சொல்லப் போனால், இந்த வாசகத்தை நாம் வாசிக்கும் போதெல்லாம் அது எனக்குள் ஒரு விதமான நடுக்கத்தை ஏற்படுத்துகிறது. கிறிஸ்தவர்களாக மாற மறுப்பவர்களுடைய நிலைமையை எண்ணிப் பார்த்தால் மிகப் பயங்கரமாக இருக்கிறது . இங்கே கிறிஸ்தவர்கள் என்று நான் குறிப்பிடுவது ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளைத்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்

(மாற்கு 16:16).



# எது உண்மையாகவே கிறிஸ்துவை சிலுவையில் பிடித்து வைத்திருந்தது?

# What really held Christ to the cross?

*Byron Nichols*

இதைப் பற்றி எந்த சந்தேகமும் இல்லை. இயேசு கிறிஸ்து சிலுவையில் 6 மணி நேரம் தொங்கிக் கொண்டிருந்தார்; ரோமபோர்ச் சேவகர்கள் அவருடைய கைகள் மற்றும் கால்கள் வழியாக ஆணிகளைக் கடாவினார்கள். [யோவான் 20:24-29] வசனங்களில் தோமா இயேசுவின் கைகளில் உண்டான காயத்தை கண்டு அந்த காயத்திலேயே விரலை விட்டு விலாவிலே தன் கையைப்போட்டால் ஒழிய விசுவாசிக்க மாட்டேன் என்று சொன்னதை நாம் வாசிக்க முடியும்.

நாம் இவ்வசனப்பகுதியை அடிக்கடி வாசித்தாலும் கூட, இன்னும் எனக்குள் ஒரு கேள்வி இருக்கிறது அது என்னவென்றால்‘ எது உண்மையாகவே கிறிஸ்துவை சிலுவையில் பிடித்து வைத்திருந்தது?‘ என்பதாயிருக்கிறது. நம் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் பிடித்து வைத்திருந்தது ஆணிகள் மாத்திரம் அல்ல என்பதை என்னால் சொல்ல முடியும். ஏனென்றால், அவருக்கு ஆணிகளை அடியோடு அகற்றி விடும் அதிகாரம் இருக்கத்தான் செய்தது. மத்தேயு 26:53 ல் நம் கர்த்தர் இவ்விதமாய்ச் சொல்கிறார் ‘ நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?‘

[மத்தேயு 26:53]. கொந்தளித்த கடலை அமர்த்தும் அதிகாரம் அவருக்கு இருந்தது; அதேபோல் மரித்தோரை உயிர்த்தெழச் செய்யும் அதிகாரமும் அவருக்கு இருந்தது. நம்முடைய புரிதலுக்கு அப்பால் வல்லமையை பயன்படுத்தும் உரிமை இயேசு கிறிஸ்துவுக்கு இருந்தது. உண்மையாகவே நம் கர்த்தருடைய சரீரத்தில் ஆணிகள் கடாவப்பட்டபோது வலி கடுமையானதாக இருந்திருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, ஆனால், அதைத் தாண்டி அநேக காரியங்கள் நம் ஆண்டவரை பிடித்து வைத்திருந்தன .

1. ஒரு கீழ்ப்படியும் தாசராக கிறிஸ்துவின் சுய விருப்பமே அவரை அந்த கோரச் சிலுவையில் பிடித்துவைத்திருந்தது. யோவான் 10:17-18

வசனங்களில் நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம் 17 நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார்.

ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளமாட்டான், நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார் [யோவான் 10:17,18]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பற்றி மத்தேயு ஆசிரியர் இவ்விதமாய் சொல்கிறார் மத்தேயு 16:21 'அதுமுதல் இயேசு, தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார் [மத்தேயு 16:21]. ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த கோர மரணத்தை சகிப்பது மாத்திரமல்லாமல் அதை மனப்பூர்வமாக எதிர்பார்த்தது போல் தான் தோன்றுகிறது. இயேசு கிறிஸ்து தாம் இந்த உலகத்திற்கு வந்தது தம்முடைய சித்தத்தை செய்வதற்காக அல்ல மாறாக பிதாவின் சித்தத்தை செய்யும்படியாக வந்ததை ஜனங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கடுமையாக முயற்சித்தார். [யோவான் 6:38] என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன் [யோவான் 6:38]. இயேசு கிறிஸ்து கீழ்ப்படியும் தாசராக இருந்தபடியால் அந்த இளம் வயதில் சிலுவையில் தொங்கினார்.

2. இயேசுவின் சத்துருக்கள் மீதான அவருடைய அன்பு அந்தக் கோர சிலுவையில் இயேசுவை பிடித்து வைத்திருந்தது தேவனுடைய குமாரன் அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். ஆனால் அவர் சிலுவையில் தொங்கியபோது தப்பித்துக் கொள்ள எந்த அற்புதத்தையும் அவர் செய்யவில்லை, நாமும் சகிப்புத்தன்மையை அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக நமக்காக பாடுகளை சகித்தார்[ 1 பேதுரு 2:18-21]. தம்முடைய சத்துருக்கள் மீது கூட அவர் கொண்டிருந்த அன்பு அவரை அந்தக் கோரச் சிலுவையில் தொங்கச் செய்தது. தேவனுக்கு கீழ்ப்படியும் மனப்பான்மை இயேசு கிறிஸ்துவை அந்தக் கோர சிலுவையில் பிடித்து வைத்திருந்தது.

3 இயேசு கிறிஸ்துவின் கரங்களில் ஆணிகள் கடாவப்பட்டதனால் வேதனை அதிகமாக இருந்த போதிலும் கூட பிதா மீது அவர்

வைத்திருந்த அசையாத விசுவாசத்தை விட்டு விடவே இல்லை. இயேசுவுக்கு தேவன் பாடுகளைக் கடக்க செய்வார் என்றும், தமக்கு எது சிறந்ததோ அதைத்தான் பிதாவாகிய தேவன் செய்வார் என்னும் அசராத நம்பிக்கை கொண்டிருந்தார். இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலுக்கு பிதாவின் சித்தத்தை செய்வதற்கான அவருடைய ஆசையும் தீர்மானமும் உதவியாக அமைந்தன.

4 ஒரே இரட்சகர் இயேசு கிறிஸ்து தான். பரிசுத்த வேதாகம எழுத்துக்களில் பல விசுவாச வீரர்கள் வீராங்கனைகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட ,மனிதர்களுடைய பாவங்களை மன்னிக்கும் வல்லமை நசரேனாகிய இயேசுவுக்கு மாத்திரமே உண்டு. கிறிஸ்து இதை நன்கு அறிந்திருந்தபடியால் அவர் பிதாவால் தமக்கு கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்ற தம்மை முற்றிலுமாக அர்ப்பணித்தார். மேலும் மனிதனுக்கு பாவமன்னிப்பு உண்டாவதற்கான ஒரே வழி தாம் ரத்தம் சிந்துவதனால்தான் என்பதையும் அறிந்திருந்தார். மனித இனத்தின் இரட்சகராக இருப்பதற்கான நம் ஆண்டவருடைய அர்ப்பணிப்பு அந்த ஆணிகள் ஏற்படுத்தின வலியைவிட அதிகமாக இருந்தது என்பதை நாம் இங்கே புரிந்து கொள்ள வேண்டும்.

5 . இயேசு கிறிஸ்து தம்முடைய சபையை வாங்குவதற்கான ஒரே வழி சிலுவையில் தொங்குவது தான் என்பதை அறிந்திருந்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 20 ஆம் அதிகாரத்தில் பவுல் எபேசு பட்டணத்து மூப்பர்களை சந்தித்தார். பவுல் அந்த மூப்பர்களிடம் அநேக முக்கியமான காரியங்களை பற்றி பேசினார், அதில் குறிப்பாக 28 ஆம் வசனத்தில் இவ்விதமாய் எச்சரித்தார். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் [அப்போஸ்தலர் 20:28]. கேள்வி: இயேசு கிறிஸ்து செய்த எந்த செயல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது? இயேசு தம் கால்களையும், கைகளையும் வேதனைப்படுத்த விடாமல் விலக்கி இருக்க வேண்டுமா? அல்லது தம்முடைய சுய இரத்தத்தை சிந்தி சபையை வாங்கியிருக்க வேண்டுமா?

6. இயேசு கிறிஸ்து நம்முடைய மத்தியஸ்தராக அந்தக் கோரச் சிலுவையில் தொங்கினார். நாம் இந்த வார்த்தைகளை யோவான் 14:6, 13-16 வசனங்களிலே கவனிக்க முடியும் ‘நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச்

செய்வேன் என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் யோவான் 14:13-16]. இயேசு கிறிஸ்து அந்த ஆணிகளிடமிருந்து தம்மை விடுவித்திருந்தால் அவர் நம்முடைய மத்தியஸ்தராக செயல்படும் பொறுப்பை நிறைவேற்றுவதை தவறி இருப்பார்.

7. கிறிஸ்துவுக்கு முன் வைக்கப்பட்டிருந்த சந்தோஷம் அவரை சிலுவையில் பிடித்து வைத்திருந்தது எபிரேயர் 12:2 இவ்விதமாய் சொல்கிறது அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்[எபிரேயர் 12:2]. இயேசு கிறிஸ்துவால் அற்புதவிதமாக அந்த ஆணிகளுக்கு தப்பி ஜனக் கூட்டத்துக்குள் மறைந்து போய் இருக்கலாம்., ஆனால் அது அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த சந்தோஷத்தை அழித்திருக்கும். அதாவது, பிதாவின் வலது பாரிசத்தில் அமரும்படியான சந்தோஷத்தை அழித்துப் போட்டிருக்கும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த சிலுவை பாடுகளை தவிர்த்திருந்தால் இந்த உலகத்திலே அவருடைய பணி முழுமை பெறாமல் இருந்திருக்கும் அது பிதாவின் சித்தமே அல்ல. இப்போது நாம் இதுகாறும் பார்த்த காரியங்களைச் சுருக்கமாக பார்ப்போம்.

ஆம், அந்தக் கோரச் சிலுவையில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை அந்த ஆணிகள் தான் பிடித்திருந்தன. ஆனால் அதைத் தாண்டி அநேக காரியங்கள் நம் இரட்சகரை அந்த சிலுவையில் பிடித்து வைத்திருந்தன என்பதைத்தான் நாம் பார்த்தோம்.

நம்மில் ஒவ்வொருவருக்கும் பிடித்தமான பாடல் என்று ஏதோ ஒன்று இருக்கும், அதாவது ஆழமான அர்த்தங்களை கொடுக்கக்கூடிய பல பாடல்கள் நமக்கு பிடித்திருக்கும். நான் என்னைப் பொறுத்தவரை சிலுவைக் காட்சியை அப்படியே படம் பிடித்து காட்டும் ஒரு பாடல் ஒன்று எப்பொழுதும் என் மனம் கவர்ந்த பாடலாக இருந்து வருகிறது. அந்தப் பாடல் உங்களில் அனைவருக்கும் கூட பிடித்தமான பாடலாக இருக்கக்கூடும், அந்தப் பாடல் இதோ:

என் அருள் நாதா இயேசுவே
சிலுவை காட்சி பார்க்கையில்,
பூலோக நன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்.

என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறதை நான் பாராட்டுவேன்?
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்

கைத்தலை காலிலும், இதோ!
பேரன்பும் துன்பம் கலந்தே
பாய்ந்தோடும் காட்சி போல் உண்டோ!
முன் முடியும் ஒப்பற்றதே .

## காலம்

காத்திருப்போருக்கு மிகவும் மெதுவாகச்
செல்லும்

பயப்படுகிறவர்களுக்கு வேகமாகச் செல்லும்

வருத்தப்படுகிறவர்களுக்கு மிகவும் நீளமாக
இருக்கும்

சந்தோஷப்படுகிறவர்களுக்கு மிகக்
குறுகியதாக இருக்கும்.

ஆனால் கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ
காலம் ஒரு நித்தியம்.

## ஐக்கியத்துக்காக இயேசுவின் ஜெபம் - ( 17:11.20-23)

-----------------------------

*E.Z. Selvanayagam*

தற்காலத்தில் கிறிஸ்தவர்களிடையே காணப்படுகிற பிரிவினைகள் பற்றியும். அதைப் பற்றி யாருமே கண்டு கொள்ளாதது பற்றியும் நினைக்கும் போது, இவைகளையெல்லாம் கர்த்தர் அங்கீகரித்துக் கொண்டார் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஏற்பட்டு விட்டதோ என்று சந்தேகப்பட வேண்டியதாயிருக்கிறது. அப்படியானால், யோவான் 17:11.20–23 ஆகிய வசனங்களில் நாம் வாசிக்கிற இயேசுவின் உருக்கமான ஜெபத்துக்கு என்ன பொருள்?.

சுமார் ஆறு கேள்விகள் கேட்டு, இந்த ஜெபத்தின் பொருளைக் கண்டு பிடிக்க முயல்வோம்.

**1. இயேசு ஐக்கியத்தை விரும்புகிறாரா?**

இந்த ஜெபத்தில் காணப்படுகிற சொல்லாட்சியைக் கவனிக்கும்போது ‘ஆம்‘ என்றே சொல்லத் தோன்றுகிறது. இயேசு ஐக்கியத்தை அவ்வளவு பெரிது படுத்தவில்லை என்போமானால் பின் ஏன் அவர் இவ்வளவு உருக்கமாக எல்லோரும் ஒன்றாயிருக்க வேண்டும் என்று மன்றாடி ஜெபிக்க வேண்டும்?

பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி. எப்பொழுதெல்லாம் பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றியும் யெகோவாவின் ஆலயமாகிய வீட்டைப் பற்றியும், சபையைப் பற்றியும் குறிப்புகள் காணப்பட்டாலும் அவைகள் எல்லாமே ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வண்ணம் ஒருமையிலேயே சொல்லப்பட்டிருக் கிறதை கவனியுங்கள். யெகோவாவின் ஆலயமாகிய பர்வதம் (ஏசாயா 2:2) தேவனுடைய வீட்டிலே, ஜீவனுள்ள தேவனுடைய சபை சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமும் (1 தீமோ. 3:15) என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்ஜியம் (தானி. 2:44) இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்ஜியத்தை (மாற்கு 9:1). என் சபையைக் கட்டுவேன் என்று இப்படியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (. 16:18)

அது அல்லாமல் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசிய பரிசுத்த மனிதர்களின் மூலமாக இயேசு தம்மை விசுவாசிக்கிறவர்களின் ஒற்றுமைக்காக மன்றாடுகிறார். ‘சகோதரரே, நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும். பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே

உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் என்கிறார் பவுல் [1கொரி.1:10].

இங்கே தேவன் ஒற்றுமையை எந்த அளவுக்கு வலியுறுத்துகிறார் என்று கவனியுங்கள். ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினையில்லாமல் ஏக யோசனையுள்ளவர்களாய் சீர்பொருந்தியிருக்கவும். அறிவுரை கூறி விட்டு 13–ம் வசனத்தில் கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? என்று சிந்தையைத் தூண்டும் ஒரு கேள்வியையும் கேட்கிறார். இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கிற எந்த மனிதனும் கிறிஸ்து பிரிவினையை அங்கீகரிக்கிறார் என்ற கூற்றை நம்பவே மாட்டான்

**2 எந்த அளவுக்கு விசுவாசிகளின் ஒருமைப்பாட்டை கோருகிறார்?**

அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவும். பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயி ருக்கவும் வேண்டிக்கொள்கிறேன் [வசனம். 21] என்று ஜெபித்தார். பிதாவுக்கும் குமாரனுக்கும் ஒற்றுமையின் நெருக்கத்தை விளக்குவதற்கு வார்த்தைகளே கிடையாது. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவது உணவை விட முக்கியமானது என்கிறார். [யோவான் 4:34].

எனக்குச் சித்தமானதைத் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறேன் என்று கூறி, தான் பிதாவின் மேல் கொண்டிருக்கிற மதிப்பையும், ஐக்கியத்தையும் பறைசாற்றுகிறார் [யோவான் 5.30]

என் சித்தத்தின்படியல்ல. என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங்கி வந்தேன் எனத் தாழ்மையாகவும் தந்தையின் விருப்பத்துக்கு இசைவாக நடப்பதற்குமே வந்தேன் என்று தன் பூலோக வருகைக்கான காரணத்தைச் சொல்லுகிறார் ''[யோவான் 17:4].

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த பணியைச் செய்து முடித்தேன் என்று அடக்கத்தோடு சொல்லுகிறார். [யோவான் 17:4]

இப்படிப் பிதாவும் குமாரனும் ஒருவருக்கொருவர் இணக்கமாகச் செயல்படுகிறார்கள். தேவத்துவத்துக்குள் இம்மியேனும் வேற்றுமையின் நிழலைக் காணமுடியாது. அதைப் போன்ற ஒரு ஐக்கியம் அவருடைய உபதேசங்களைக் கேட்டு விசுவாசிக்கிற மக்கள் மத்தியில் இருக்க வேண்டும் என்று மன்றாடுகிறார். அவ்விதமான ஐக்கியம் ஏன் வேண்டும் என்கிறார்? அப்பொழுதுதான் இயேசுவை பிதா உலகத்துக்கு அனுப்பி வைத்தார் என்று உலகம் நம்பும் என்கிறார். இன்றைக்கு கிறிஸ்தவ மார்க்கத்தில் உள்ள பிரிவுகளினால் உலகத்து மக்களுடைய கண்களுக்கு. கிறிஸ்தவம் மக்களை

நல்வழிப்படுத்தத் தோன்றின பல்வேறு மதங்களில் ஒன்று என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. அதனால் இயேசுவை ஒரு அவதார புருஷராக, சமூக சீர்திருத்தவாதியாக. சன்மார்க்க நெறியாளராக, ஏழைப் பங்காளனாகப் பார்க்கிறார் களேயல்லாமல் உலக இரட்சகராகப் பார்ப்பதில்லை. சகோதரர்களே! நம்முடைய ஒற்றுமைக் குறைவு எவ்வளவு பெரிய இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று அறிந்து, பிரிவினை எண்ணங்களை தவிர்த்து ஒன்று படுவோம்.

**3. இந்த ஒற்றுமை சாத்தியமா?**

தேவனும் கிறிஸ்துவும் ஒன்றாயிருந்தது போல மானிடர்களாகிய நாம் இருப்பது சாத்தியமில்லை என்று பலர் ஆயாசப்படுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்மைப் போலவே இயேசுவும் நினைத்திருந்தால். ஏன் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி உருக்கமாக ஜெபித்தார்? ஏன் பரிசுத்த மனிதர்களைக் கொண்டு ஒற்றுமையைப் பற்றி எழுதச் சொன்னார்? நமக்குத் தெரிந்தது ஆண்டவருக்கு தெரியாமற் போயிற்று என்று நினைக்கலாமா? நடக்க முடியாத ஒன்றைத் தொடர்ந்து வலியுறுத்துவாரா? நிச்சயமாக மாட்டார்?

ஆதிச் சபையிலே அது சாத்தியமாயிற்று என்றால் இன்று மட்டும் ஏன் முடியாது? வாசியுங்கள் 'விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்' (அப் 2:44) அவர்கள் ஒருமனப் பட்டவர்களாய் தேவாலயத்தில் அனுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி (அப். 2:46) என்றெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் அப். 4:32ல் 'விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும். ஒரே மனமுமுள்ளவர்களாய் இருந்தார்கள் என்றும் வாசிக்கிறோம். இவைகள் எல்லாம் நமக்கு உணர்த்தும் உண்மை என்ன? விசுவாசிகள் ஒன்றாயிருப்பது சாத்தியம் என்பது தானே? ஆகவே, ஆதிச் சபையார் செய்தபடி, உபதேசித்தபடி நாமும் செய்தால் இப்பொழுதும் ஒற்றுமையாக இருக்க முடியும்.

**4. இப்படிப்பட்ட ஒற்றுமைக்கு அடித்தளம் என்ன?**

'விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17) என்று சொல்லியிருக்கிறபடி தேவனுடைய வசனமே அவ்வித ஒற்றுமைக்கு அடித்தளமாக இருக்க முடியும். தேவனுடைய வசனம் ஒன்றுக்கொன்று முரண்படுகிறதா? நிச்சயமாக இல்லை என்று நாம் அறிவோம். தோவன் வெளிப்படுத்தின காரியங்களில் முரண்பாடு கிடையாது என்றும் முரண் பாடுகவெல்லாம் மனிதன் அதைப் புரிந்து கொள்ளும் விதத்தில் தான்

என்பதற்கு (மத் 16.13–17) ஆகிய வசனப்பகுதிகள் ஓர் அருமையான உதாரணம் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி மனிதகுமாரனாகிய என்னைப் பற்றி மக்கள் என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்று கேட்டார். சிலர் எலியா என்றும். எரேமியா என்றும், தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் கருதுகிறார்கள் என்று கூறினர். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, நீங்கள் என்னை யார் என்று கருதுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சீமோன் பேதுரு, நீர் உயிரோடிருக்கிற தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றார். அதற்கு இயேசு அவரைப் பாராட்டி யோனாவின் குமாரனாகிய சீமோனே! மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் என்றார் (மத் 16.17). மனிதருடைய எண்ணங் களையும் கருத்துக்களையும் கொண்டு ஆராய்ந்தால் ஆளுக்கொரு விதமான விடைகள் கிடைக்கும். ஆனால், தேவனுடைய வெளிப்பாட்டை அடித்தளமாகக் கொண்டு ஆராய்வோமானால் அங்கே பரிபூரண உண்மையும், ஒருமைப்பாடும் காணப்படும் மார்க்க சம்பந்தமான காரியங்களில் தேவனுடைய வசனங்களை மட்டும் ஏற்றுக் கொண்டு மனித ஞானத்தை ஒதுக்கி விடுவோமானால் அங்கே பிரிவினைக்கு இடமேயில்லை. தேவனுடைய வசனம் எப்போதும் முரண்பாடு இல்லாமல் ஒரே காரியத்தையே போதிக்கிறது.

**5. இயேசு ஜெபித்த ஒருமைப்பாட்டின் விளைவுகள் என்ன?**

இயேசு ஜெபித்த இந்த ஜெபத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட இடத்தில் நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதுக்கு.'என்ற சொற்றொடர் காணப்படுகிறது. ஆதிச் சபை ஒற்றுமையாக இருந்தது என்று பார்த்தோம். அவர்களுடைய ஒற்றுமை விசுவாசத்தை ஊக்குவித்ததா? அல்லது விசுவாசத்தை பலவீனப்படுத்தியதா? நிச்சயமாகவே, இயேசு எதிர்பார்த்ததைப் போலவே விசயாசத்தைப் பெருகப் பண்ணிற்று. ஆதிச்சபை எருசலேமில் வெறும் 3000 பேரைக் கொண்டு தொடங்கிற்று (அப் 2:41) அது வெகு விரைவில் 5000 மாகப் பெருகினது. (அப்64) 'விசுவாசிகளின் கூட்டம் பெருகிற்று' (அப்61) தேவ வசனம் விருத்தியடைந்தது சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று ஆசாரியரில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்' (அ 47) இந்தப் பெருக்கத்துக்கு விசுவாசிகளிடத்தில் காணப்பட்ட ஒற்றுமை உணர்வே முக்கிய காரணம்.

அவர்களுடைய ஒருமைப்பாட்டின் பலம். ஒரு நூற்றாண்டுக்கும் குறைவான காலத்தில் வானத்தின் கீழ் இருக்கிற சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷம் பிராங்கிக்கப்பட உதவிற்று. (கொலோ 133) ஆம். இயேசு கூறியபு விசுவாசிகள் ஒன்றுபட்டு உழைத்தனர். (அப்.8:4) அவர் காட்டின ஒற்றுமை உணர்வு உலகத் தாருக்கு இயேசுவின் மேல் விசுவாசம் வைக்க உதவியது. இன்றைக்குப் பல நூற்றாண்டுகளாக

எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் இந்தயாயேன் மூன்று விழுக்காடு மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வரமுடிய வில்லை, காரணம் என்ன? கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரித்து ஒன்றுக் கொன்று முரண்பாடான போதனைகளைப் போதித்து மக்கள் மத்தியில் பிரிவினைகளை உண்டுபண்ணி, இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகர் என்ற உயரிய நிலையில் இருந்து கீழே தள்ளி, இருக்கும் எத்தனையோ கடவுள்களில் இவரும் ஒருவர் என்ற நிலைக்குத் தாழ்த்தி விட்டது.

**6. இந்த அவல நிலை நீங்க நாம் என்ன செய்யப்போகிறோம்?**

இயேசுவை நேசிக்கிறேன் என்று சொல்லுகிற அனைவரும் உண்மை யாகவே நேசிப்பார்களானால் அவருடைய கற்பனைகளை கைக் கொள்ள வேண்டும் (யோவான் 14:16) மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கக்கூடாது (மத் 154) அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்கள் ஐக்கியத்தை அசட்டை செய்ய முடியாது. இயேசு ஐக்கியத்துக்காக ஜெபித்தார் அவரைப் பின்பற்றுகிற நாமும் ஐக்கியத்துக்காக ஜெபிக்க வேண்டும். இயேசு ஐக்கியம் வேண்டி பாடுபட்டார். அவரைப் போலவே நானும் ஐக்கியத்துக் காகப் பாடுபடுவேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். ஜெபமும் செயல்பாடும் ஒருங்கிணைந்தால் வெற்றி நிச்சயம் நெகேமியா நான்காம் அதிகாரத்தை வாசித்து தியானியுங்கள். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் எருசலேமின் மதில்களை எண்ணி ஐம்பத்தி இரண்டு நாட்களுக்குள் கட்டி முடித்தார்கள், எப்படி?

**ஒரு கையில் கத்தி, மற்றொரு கையில் சுத்தி**

தேவனை நோக்கி ஜெபித்தார்கள். அதோடு நிற்கவில்லை. எதிர்ப்பை சமாளிக்க ஒரு கையில் வாளேந்திக் கொண்டு மறு கையினால் வேலை செய்தார்கள். நாமும் கூட ஒற்றுமைக்காக ஜெபிக்கவும் உழைக்கவும் வேண்டும். அத்துடன் தேவனுடைய வசனத்தை ஆராய்ந்து பார்த்து தெளிவ பெற வேண்டும். அதுவே ஒருமைப்பாட்டுக்கு அடித்தளம் மனித ஞானத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள எந்த உபதேசத்துக்கும் உடன்படவே கூடாது. அவைகள் தான் இயேசு ஜெபித்த ஐக்கியத்துக்கு சாவு மணி அடித்தவைகள். சிந்திப்பீர்! செயல்படுவீர்!.

# ஒத்திவைப்பு என்னும் பாவம்
# A Sin Called Procrastination

**Bro. பென்னி மார்டின்**

அருமையானவர்களே! நம்முடைய வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் நாம்செய்ய வேண்டிய கரியாங்களை நாளை, நாளை என்று ஒத்திவைக்கிறோம். பிறகு நாளை என்பது நமக்குக்கிடைக்காமலேயே போய் அந்த காரியங்களை நாம் செய்யாமலேயே நேரத்தைக் களைந்து விடுகிறோம் அல்லது வருடங்கள் உருண்டோடி விடுகின்றன. இப்படியாக நாம் செய்ய நினைத்த காரியங்களை ஒத்தி வைப்பதினால் பின்பு வாய்ப்பு கிடைக்காமலே போய் நம் வாழ்க்கையில் கை நழுவிப்போன காரியங்கள் பலபல, அன்பானவர்களே! நாளை என்பது நம்முடைய கைகளில் இல்லை. காலங்களை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தேவனுடைய கைகளில் தான் இருக்கிறது (யாக்கோபு 4:14). எனவே தான். நாம் காலத்தின் அருமை யை உணர்ந்தவர்களாக அதை பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டு மென்று தேவனால் எச்சரிக்கப்படுகிறோம் (எபேசியர் 5:16), சிலரைப் பற்றி நாம் பார்க்கும் போது இவ்வுலகத்திற்குரிய வேலைகளை ஒத்திவைக்காமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும் போது ஒத்தி வைப்பில் ஈடுபடுவதை நாம் பார்க்கிறோம்.

இப்படிப்பட்டவர்களுக்கு ஆவிக்குரிய சிந்தை என்பது துளிகூட இருக்காது. மாறாக, மாம்ச சிந்தையால் நிரப்பப்பட்டவர்களாய் இருப்பார்கள். ஆனால். ஒத்தி வைப்பில் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால். நாம் உலகத் திற்குரிய காரியங்களை ஒத்தி வைப்பதினால் தற்காலிகமாக நமக்கு இழப்பு ஏற்படும். ஆனால், ஆவிக்குரிய காரியங்களில் நாம் ஒத்திவைப்பில் ஈடுபட்டால் அது நமக்கு நித்திய பாதிப்பை ஏற்படுத்தும். அதற்காக நாம் மிகப் பெரிய விலையை கொடுக்க வேண்டியதாயிருக்கும். வேதாகமத்தில் இதற்கு மிகச் சிறந்த உதாரணம் தேசாதிபதியாக இருந்த பேலிக்ஸ் என்பவன் தான். ஒருநாள் அவன் தன் மனைவியாகிய துருசில்லாளுடனே வந்து, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான் பவுல் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான் (அப் 24:24.25) வேறுவிதமாகச் சொன்னால் பேலிகஸ் மனந்திரும்பி தேவனுடைய காரியங்களில் ஈடுபட வாய்ப்பு வந்த போது அதை ஒத்திவைத்தான். அதற்குப் பின்பு

மறுபடியும் அந்த வாய்ப்பு அவனுக்கு வரவே இல்லை. அதன்பிறகு சில காலத்திற்குள்ளையே அவன் சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டான். இது நமக்கு காத்தருடைய காரியங்களில் ஒத்திவைப்பு கூடாது என்பதை படிப்பிக்கிறது. இப்போது நம் ஒத்திவைப்பு. கிறிஸ்தவ வாழ்க்கையில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று பார்ப்போம்.

**I. ஒத்திவைத்தல் பிசாசின் மாபெரும் ஆயுதமாகும்**

தேவன் மோசேயை தம்முடைய ஜனங்களை வழிநடத்தும்படி அழைத்த போது, அவர் பல சாக்குப்போக்குகளைச் சொல்லி தப்பித்துக் கொள்ள முயற்சித்தார். தேவன் அவைகளை ஏற்றுக்கொள்ளாமல் தம் ஜனங்களை வழிநடத்த வைத்தார் என்பதை நாம் அறிந்திருந்தாலும், இதை நாம் அப்படியே சபையில் பொருத்திப் பார்க்க முடியும். சபையில் சுவிசேஷத்தை பிறருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அங்கத்தினர்கள் அப்படிச் செய்யாமலிருப்பதற்குச் சொல்லும் சாக்குபோக்குகள் ஒத்திவைக்கும் செயல்களாகத் தான் இருக்கின்றன. சாத்தான் ஒத்திவைத்தலை தன் ஆயுதமாக எடுத்துப் பயன்படுத்தி நம் ஆவிக்குரிய வாழ்வில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தி விடுகிறான். அவன் சிறியோர் முதல் பெரியோர் வரை அதாவது நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஒத்திவைத்தலைப் புகுத்தி விடுகிறான்.

உதாரணமாக 12 வயது சிறுவன் கர்த்தருடைய காரியங்களில் ஈடு படாமலிருக்க அதை ஒத்திவைக்க நான் தேவனைப் பற்றி சிந்திக்க மிகவும் சிறியவனாயிருக்கிறேன் என்பான். 25 வயது வாலிபன் என் வாழ்க்கை உலகப்பிரகாரமான காரியங்களில் பரபரப்பாக இருக்கிறபடியால் தேவனைப் பற்றி சிந்திக்க எனக்கு நேரமில்லை என்பான்.

இப்படி எல்லா வயதினரும் தேவனுக்கடுத்த காரியங்களில் ஈடுபடாமலிருக்க அவர்கள் மத்தியில் சாத்தான் ஒத்தி வைத்தலைப் புகுத்தி விடுகிறான். பிரியமானவர்களே சிலர் இப்பூமிக்குரிய வாழ்க்கை சம்மந்தமான காரியங்கள் என்று வரும்போது அதை ஒத்திவைக்காமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பார்கள். உதாரணமாக, வேலைக்கு சரியான நேரத்தில் செல்வார்கள். பிள்ளைகளை சரியான நேரத்துக்கு அனுப்புவார்கள். குடும்ப நிகழ்ச்சிகளில் ஒன்றை கூட விட்டுவிடாமல் எல்லாவற்றிலும் பங்கேற்பார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும்போது அதை இப்போதே செய்யாவிட்டால் என்ன? நாளை நாளை என்று ஒத்திவைப்பில் ஈடுபட்டு கடைசிவரை அதைச் செய்து முடிக்காமலேயே காலத்தைக் கழித்து விடுகிறார்கள்.

**II. ஒத்திவைத்தலை மேற்கொள்ள ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடவேண்டும்.**

அன்பானவர்களே! தேவனுடைய காரியங்களை நாம் ஒத்திவைத்து பிறகு செய்யலாம் என்று நினைத்து செய்ய முடியாமல்

போவதால் இவ்வுலகத்திலும் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அதைவிட மேலாக வரவிருக்கும் உலகில் நாம் நித்திய ஜீவனை இழந்து போவோம், அது நமக்கு எவ்வளவு பெரிய பாதிப்பு: எவ்வளவு பெரிய இழப்பு: சரி, இதிலிருந்து நாம் எப்படி விடுபட முடியும்? நிச்சயமாக வழி உண்டு நாம் ஆவிக்குரிய சிந்தையுடையவர்களாயிருந்து ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும். மாம்சச் சிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் ' என்று [ரோமர் 8:6]ல் நாம் வாசிக்கிறோம். இப்படி ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுவதைத் தான் ஆவிக்குரிய உடற்பயிற்சி என்று சொல்கிறோம். இந்த உடற்பயிற்சியில் ஈடுபட நமக்கு நல்ல ஆவிக்குரிய போஷாக்கு அவசியப்படுகிறது. அனுதினமும் நாம் பல்வேறுப்பட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதேபோல், நாம் அனுதினமும் பலவிதமான சவால்களை சோதனைகளை எதிர்கொள்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட நாம் பெலனற்றுப் போகும் போது உலகத்தாரிடம் திரும்புகிறோம். அவர்கள் நம்மிடம் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப் போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள். இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள். பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே தராது, மாசும், கலப்படமும் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே மாசற்ற. கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. அவைகளை நாம் ஏராளமாக, தாராளமாக உட்கொள்ளும்போது அது கசப்பான நம் வாழ்வை இனிப்பாக்குகிறது. இப்பூமிக்குரிய ஆகாரத்தை நாம் தொடர்ச்சியாக உட்கொண்டு எவ்வித உடற்பயிற்சியும் செய்யாதிருந்தால் அது நம் உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதேபோல் நாம் ஆவிக்குரிய போஷக்கை தொடர்ச்சியாக உட்கொண்டு விட்டு நம் வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமாக அதை அப்பியாசப்படுத்தவில்லையென்றால். அது நம் ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பிரியமானவர்களே! நம் வாழ்க்கை கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறபடியால் [யாக்கோபு 4:14] வாழ்கின்ற கொஞ்ச நாட்களில் தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்து தேவனுடைய அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்வோம். நாம் தேவனுடைய காரியங்களை ஒத்திவைத்தால் தேவன் நமக்குத் தருகிற ஆசீர்வாதங்களை ஒத்தி வைத்துவிடுவார். எனவே. ஒத்தி வைத்தல் என்னும் பாவத்தில் விழுந்துவிடாதபடிக்கு நம்மை நாம் காத்துக்கொள்வோம்.

# பாவத்தினை மேற்கொள்ளுதல்

---------------------------------

## P.C. பிலேமோன் ராஜா

பொல்லாங்களுக்குள் கிடக்கின்ற இந்த உலகம் [1 யோவான் 5:19], பாவத்தினால் நிறைந்திருக் கின்றது. ஆதியாகமம் ஆறாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கின்றோம். பாவத்தினால் நிறைந்த உலகை கர்த்தர் கொடுமையினால் நிறைந்திருக்கிறது என்கின்றார் [ஆதியாகமம் 6:11.13]. அதே போன்ற நிலையில்தான் இந்த உலகம் தற்போதும் உள்ளது. ஆகையால், பரிசுத்தமாக வாழ வேண்டிய நாம். எவ்வாறு பாவுத்தினை மேற்கொள்வது என்பதனை பற்றி, இந்த மாதம் தியானம் செய்வோம்.

**1. பாவத்தைப் பாவமாகப் பார்ப்போம்**

எசேக்கியேல் 22:26. 'அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அறியாயஞ்செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள்: பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்தமுள்ளதற்கும் அசுத்தமில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து, என் ஓய்வு நாட்களுக்குத் தங்கள் கண்களை மூடிக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் நடுவிலே நான் கனம் பண்ணப்படுகிறேன்.'

பாவத்தினை நாம் வெற்றிக்கொள்ள, பாவத்தினை பாவமாகவே பார்க்க வேண்டும். பாவம் நியாயமாகவும், சரியாகவும், பரவாயில்லை எனவும் பலவிதமாக இந்த உலகில் பார்க்கப்படுகின்றது. மற்றும் பேசப்படுகின்றது. பாவத்திற்கு கலர் கலரான சாயங்களை பூசி, அதனை நியாயப்படுத்தி ஏற்றுக்கொள்கின்றனர். பாவம் எப்போதும் பாவமாகவே இருக்கின்றபடியினால், அதனை பற்றிய நமது பார்வையும் அப்படியே இருக்க வேண்டும்.

சவுல் அரசன் பாவத்தினை பாவமாக பார்க்கவில்லை. அதனால் அவன் தனது அரசாட்சியை இழந்தான். கர்த்தருக்கும் அவனுக்குமான உறவையும் இழந்தான். 1 சாமுவேல் 13:13,14 சாமுவேல் சவுலைப் பார்த்து ; புத்தியீனமாய்ச் செய்தீர்; உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையைக் கைக்கொள்ளாமற்போனீர்; மற்றப்படி கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் ஸ்திரப்படுத்துவார். இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல்

தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான்.'

## 2. பாவத்தைக் குறித்து துக்கம் அடைவோம்

2 கொரிந்தியர் 7:9-11 'இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு, மனஸ்தாப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ் சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்தி வைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உணடாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்.

பாவத்தினை நாம் வெற்றிக்கொள்ள, பாவத்தினை குறித்து துக்கமடைய வேண்டும். பாவம் என்பது வேதனையான ஒன்று. ஆகையால் பாவம் செய்வதினை குறித்து நாம் துக்கப்பட வேண்டும். செய்த பாவம் நமக்குள் உறுத்தலையும் வருத்தத்தினையும் உண்டாக்க வேண்டும். அப்படி இல்லையெனில், அந்த பாவத்திற்கு நம் இருதயம் பழகிவிட்டது என்றே பொருள். அல்லது அந்த பாவச்செயல் நம் இருதயத்தினை கடினமாக்கிவிட்டது. அப்படி ஏற்படுகின்ற துக்கம் வெறுமனே வருந்துவதாக மாத்திரமல்லாமல், நம்மை திருத்தும்படியாகவும் இருக்க வேண்டும்.

## 3. பாவத்தைக் குறித்து வெட்கப்படுவோம்

தானியேல் 9:6.7 ஆண்டவரே, நீதி உமக்கே உரியது; உமக்கு விரோதமாகச் செய்த துரோகத்தினிமித்தம் உம்மாலே சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிற யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும் சகல இஸ்ரவேலருமாகிய நாங்கள் இந்நாளில் இருக்கிறபடியே, வெட்கம் எங்களுக்கே உரியது. ஆண்டவரே, உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தபடியால், நாங்களும் எங்கள் ராஜாக்களும் எங்கள் பிரபுக்களும் எங்கள் பிதாக்களும் வெட்கத்துக்குரியவர்களானோம்.

பாவத்தினை மேற்கொண்டு, பாவமில்லா வாழ்க்கை வாழ அடுத்து நாம் செய்ய வேண்டியது, பாவத்தினை குறித்து வெட்கப்படுவதாகும். பாவம் என்பது வெட்க கேடானது. ஆகையால் செய்த பாவத்தினை குறித்து நாம் நாணமடைய வேண்டும். இன்றைய நாட்களில் பாவம் செய்வதும், அதனை பற்றி பேசுவதும் மேன்மையாக எண்ணப்படுகின்றது என்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். உதாரணமாக, மிகவும்

வெட்கக்கேடான பாவங்களும் ஒன்றாகிய குடிபழக்கம், மேன்மையானதாகவும், அதனை செய்கின்றவர்கள் மதிப்பானவர்களாகவும் நினைக்கப்படுகின்ற ஒரு பிம்பம் இந்த சமூகத்தில் கட்டப்படுவது என்பது எவ்வளவு வெட்கக்கேடான ஒன்று. குடிக்கின்றவர்கள் தங்களை அறிவாளிகள் மாதிரி காட்டிக்கொண்டாலும், பேசினாலும், கர்த்தருடைய வார்த்தையாகிய பைபிள் அவர்களை ஞானமற்றவர்கள் என்கின்றது [நீதிமொழி 20:1]. ஆம் வெட்கப்பட வேண்டிய ஒன்றை குறித்து, பெருமையாக பேசுவது ஞானமுள்ளவர்களின் செயல் அல்லவே.

### 4. பாவத்தை வெறுப்போம்

நீதிமொழி 6:16-19 ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார். ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் ஆகிய இவைகளே.'

பாவத்தினை மேற்கொண்டு, பாவமில்லா வாழ்க்கை வாழ அடுத்து நாம் செய்ய வேண்டியது, பாவத்தினை முற்றிலுமாக வெறுக்க வேண்டும். நம்மை படைத்த கர்த்தர், பாவத்தினை வெறுக்கின்றார். பாவம் அவருக்கு அருவருப்பானதாக இருக்கின்றது. அவரால் படைக்கப்பட்ட நமக்கும் பாவம் அருவருப்பாக இருக்க வேண்டும். நாமும் பாவத்தினை வெறுக்கின்றவர்களாக இருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல், அவைகளை வெறுப்பதாக கூறுகின்றார். 2 கொரிந்தியர் 4:29 -ஆறு வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்.

அதனால், பைபிள் நம்மை பாவத்தினை வெறுக்க சொல்கின்றது. ஆகையினால், நாம் பாவத்தினை வெறுத்து தள்ளுவோம். யூதா 1:23 மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்.

### 5. பாலத்தைவிட்டு விலகியோடுவோம்

2. தீர்மாத்தேயு 2:22 அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும்

பாவத்தினை மேற்கொண்டு, பாவமில்லா வாழ்க்கை வாழ அடுத்து நாம் செய்ய வேண்டியது. பாவத்தினைவிட்டு விலகியோட வேண்டும். பைபிள், பாவத்தினை பற்றி பேசும்போது, பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடுங்கள் [2 தீமோ 2:22]. விக்கிர ஆராதனைக்கு

விலகியோடுங்கள் (1 யோவான் 5:21). வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள் (1 கொரி 6:18). என ஓடச்சொல்கின்றது. எபிரெய ஆசிரியர், நம்மை சுற்றி நெருங்கி நிற்கின்ற பாவத்தினை தள்ளிவிட்டு ஓடுங்கள் என்கின்றார். எபிரெயர் 12:1 ஆகையால் மேகல்போன்ற இந்தனை திரமான சாட்சிகள் நல்லைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நல்லைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவநல் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற உடத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்.

பாவத்திற்கு விலகி ஓடின யோசேப்பை இன்றளவும் நல்ல முன்மாதிரியாக இருக்கின்றார் (ஆதியாகமம் 39:0–12). பாவத்தினை நோக்கி ஓடின. அதாவது பாவம் செய்ய ஓடின கேயாசி (2 ராஜாக்கள் 5:20) மோசமான அடையாளமாக இருக்கின்றார். நாம் எப்படி இருக்கின்றோம்?

## ஏன் அநேகர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை

**அநேகர் தேவனுடைய வார்த்தையை சாத்தான் தங்கள் இருதயங்களிலிருந்து பறித்துகொள்ள அனுமதிப்பதனால் (மத்தேயு 13:19).**

**அநேகர் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புவதினால் ( யோவான் 12:43 ).**

**அநேகர் கர்த்தரைவிட குடும்பத்தை அதிகமாக நேசிக்கிறதினால் ( மத்தேயு 10: 37 ).**

**அநேகர் தங்கள் இரட்சிப்பைப்பற்றி கவலையில்லாமல் இருப்பதினால் ( எபிரெயர் 2:4).**

# நான் உமது அடியேன்

## I Am Your Servant

### B. அர்ஜூனன்

பரிசுத்த வேதாகமத்தில் தன்னை முழுவதுமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்த மூன்று நபர்களைக்குறித்து இந்நாளின் செய்திவேளையில் தியானிக்கவுள்ளோம். முதலாவது தாவீதைப் பார்க்கலாம்: உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும்: நான் உமது அடியேன்‘ என்கிறான் [சாங். 143:12], தாவீது ஒரு ராஜாவாக இருந்தும் தேவனுடைய சமுகத்தில் நான் உமது அடியேன் என்று தாழ்த்துகிறதை நாம் காண்கிறோம்.

உயர்வான பதவியில் இருக்கிறவர்களுக்கு நமக்கு மேலாக வேறு யார் இருக்கிறார்கள் என்ற ஆணவம் இருக்கும். ஆனால், தாவீதோ தன் எஜமானாகிய கர்த்தருக்கு தன்னை ஒரு அடிமையைப்போல ஒப்புக்கொடுத்திருந்தான். ‘தாவீது தன் செய்கைகளிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்; கர்த்தர் அவனோடே கூட இருந்தார்‘ [1சாமு.18:14] சகலத்தையும் உண்டாக்கின தேவன் நம்மோடு கூட இருந்தால் எப்படியிருக்கும் என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். தாவீதின் வெற்றிக்கும் அவன் புத்திமானாய் நடப்பதற்கும் முழுமையான காரணம் அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிருந்தார். அவனுடைய வேண்டுதல்: ‘உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும். நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக‘ என்று ஜெபித்தான் [சங். 143:10].

ஜெபிக்கிறவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முதலாவது தேவசமுகத்தில் வைப்பார்கள். தாவீதின் ஜெபம் அப்படியல்ல: உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் என வேண்டிக் கொண்டான். தேவனுக்குப் பிரியமானதைச் செய்யும்படியாக நாம் இப் பூமியில் உண்டாக்கப்பட்டோம் என்பதை அறிவீர்களா? பரலோகத்தில் இருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்கள்தான் பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். மற்றபடி அவரை நோக்கி, கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிட்டாலும் அவருடைய சித்தம் செய்யாமல் தேவராஜ்யத்தைக் காணமுடியாது. மேலும் தாவீது சொல்லும்போது: ‘கர்த்தாவே, உமது வசனத்தின்படி உமது அடியேனை நன்றாய் நடத்தினீர்‘ என்கிறான் [சங்.119:65]. தாவீது தேவனால் வழிநடத்தப்பட்டான். அவன் தன்னை முழுவதுமாக கர்த்தருக்கு அர்ப்பணித்தபடியால் அவனை அவருடைய வசனத்தின்படி நடத்தினார். அவருடைய ஆடுகளாகவும் அவருடைய மேய்ச்சலின் மந்தையாகவும் இருப்போமானால் திருப்தியுள்ளவர்களாக இருப்போம்.

தாவீது தன் வாழ்க்கையில் கர்த்தரை முன்வைத்தான். பெலிஸ்தினை நோக்கி, நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்: நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்' என்றான் [I சாமு.17:45], கோலியாத்தை கண்டு பட்டாளமே நடுங்கியது. ஆனால் தாவீதோ கர்த்தருடைய நாமத்தினாலே சென்று அவனை வீழ்த்தினான். இது இஸ்ரவேலில் மாபெரும் வெற்றியாயிருந்தது.

இரண்டாவது, சாமுவேலைப்பற்றி தியானிக்கலாம். சாமுவேல் தேவனுடைய சமுகத்தில் வளர்க்கப்பட்டவன். அவன் வளர்ந்து வரும்வேளையில் 'கர்த்தர் வந்து நின்று. முன்போல: சாமுவேலே என்று கூப்பிட்டார்: அதற்குச் சாமுவேல்: சொல்லும், அடியேன் கேட்கிறேன் என்றான்' [சாமு.3:10]. சாமுவேல் முதலாவது ஆசாரியனாகிய ஏலி தான் கூப்பிடுகிறார் என்று நினைத்தான். ஏலி கர்த்தர் சாமுவேலைக்கூப் பிடுகிறார் என்று அறிந்து இனி கூப்பிட்டால் இவ்விதமாக சொல் என்று சொல்லியிருந்தான், அந்தப்படியாக சொன்னான், சிறுபிராயத்திலும் சாமுவேல் ஆசாரியனுக்குக் கீழ்ப்படிந்து நடந்திருக்கிறதை நாம் காணமுடிகிறது. தன்னுடைய இளம் வயதில் கர்த்தரையும் கர்த்தருடைய ஜனங்களையும் பற்றிக்கொண்டவன் சாமுவேல், 'சாமுவேல் வளர்ந்தான்; கர்த்தர் அவனுடனேகூட இருந்தார்: அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்துபோக விடவில்லை [1சாமு.3:19].

தாவீதோடு கர்த்தர் இருந்ததைப்போல சாமுவேலோடும் இருந்தார். 'சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசிதான் என்று தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது' என 1சாமு.3:20-ல் படிக்கிறோம். கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் சில ஊழியர்களைக்குறித்து பக்கத்து தெருவில் போய்கேட்டால் கூட அவரைப்பற்றி தெரியவில்லை. ஆனால் சாமுவேலைப்பற்றி அந்நாட்டிலே தாண்முதல் பெயர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்குள்ளும் அவன் நன்கு அறியப்பட்டவராயிருந்தான். அப்படியானால் அவன் எந்த அளவு அநேக இடங்களுக்குச் சென்று கர்த்தருடைய ஊழியத்தைச் செய்திருப்பான் என நாம் அறியமுடிகிறது. இன்று இவ்விதமான ஊழியர்கள் எழும்பவேண்டும். அப்பொழுது நம் தேசம் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையும்,

சாமுவேல் கர்த்தரோடு மிகவும் நெருக்கமானவன். ஒரு முறை கர்த்தர் 'நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது: அவன் என்னைவிட்டுத் திரும்பி. என் வார்த்தைகளை நிறைவேற்றா மற்போனான் என்றார்; அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்' என காண்கிறோம் [சாமு.15:11]. இங்கே நீங்கள் தான் அவனை ராஜாவாக்கினீர்கள் என்று

கர்த்தரை நோக்கி அவன் சொல்லவில்லை. ஏனெனில் அவனை முதல் ராஜாவாக கர்த்தருடைய அனுமதியின்பேரில் அபிஷேகம் பண்ணினவனே இந்த சாமுவேல் தான். ஆகையால் கர்த்தருடைய மனஸ்தாபத்திலே அவனும் பங்குகொண்டு இராமுழுதுவம் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான். இந்தவிதமாக தேவனுடைய சித்தத்தை முதலாவது நாம் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றார்போல வாழவேண்டும். ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி என்னோடு கூட விழித்திருந்து ஜெபியுங்கள் என்றார் எத்தனைபேர் அவரோடு விழித்திருந்து ஜெபித்தார்கள். இன்றும் அப்படித்தான் இருக்கிறோம். தேவனோடு இசைந்தவர்களாக அவருடைய ஊழியத்தைச் செய்யவேண்டும். சாமுவேல் அந்தவிதமான ஒரு தீர்க்கதரிசியாக இருந்து செயல்பட்டான். ஆகையால் தேவனாகிய கர்த்தர் அவனோடு இருந்தார் என காண்கிறோம்.

முதல் ராஜாவாகிய சவுல் அப்படி என்ன காரியம் செய்தான் என நீங்கள் நினைக்கத்தோன்றும். கர்த்தருடைய சொல்லை கேளாமல் கொள்ளையின்மேல் பறந்து. கர்த்தருடைய சமூகத்தில் பொல்லாப்பானதைச் செய்தான். ஆகையால் சாமுவேல்: 'கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்துக்கும். முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகா ராதனைக்கும் சரியாய் இருக்கிறது: நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினால், அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான் (சாமு.15:22,23)

அநேகர் கர்த்தருடைய சமூகத்தில் புறம்பாக்கப்படுகிறார்கள் என்றால் இப்படிப்பட்டவைகளைச் செய்கிறபடியால் அவர்கள் புறம்பாக்கப்படுகிறார்கள். கர்த்தருக்குப்பிரியமானது இன்னதென்று சோதித்து அறியுங்கள். சாமுவேல் கர்த்தருக்குப்பிரியமானதை இளம்பிராயத்திலிருந்து செய்து வந்த ஒரு அருமையான தீர்க்கதரிசி, சவுல் மற்றும் தாவீது போன்றோரை ராஜாவாக அபிஷேகம் செய்தவன். பலிகளையும் காணிக்கைகளையும் கர்த்தர் விரும்பவில்லை. அவைகளை கர்த்தரிடமே வாங்கி அவருக்கே கொடுக்கிறோம். அவர் கீழ்ப்படிதலைத்தான் அதிகமாக எதிர்பார்க்கிறார். இதை சவுலுக்கு உணர்த்தினார் சாமுவேல் அநேகர் சபைக்காக நாங்கள் அதைச் செய்கிறோம். இதைச் செய்கிறோம் என்பார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் ஒழுங்காக ஆராதனைக்கு வரமாட்டார்கள், அதை சரி செய்வதற்காக ஊழியக்காரனை நோக்கி நாங்கள் சபைக்காக அதைச் செய்யலாம் என்று இருக்கிறோம் என்று சொல்லுவார்கள். இதைக் கேட்ட சபை ஊழியர் அந்த பணத்திற்கு மயங்கிவிடுவான். எல்லோரும் அப்படியல்ல. சாமுவேலைப்போல கடிந்து கொண்டு போதிக்கிற

ஊழியர்களும் இருக்கிறார்கள். மேலும் சாமுவேல் சொல்லும்போது ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம் என்கிறான். ஆம். கர்த்தருடைய வசனத்திற்கு முதலாவது செவி கொடுக்க வேண்டும். யாருக்கோ எவருக்கோ சொல்லப்பட்டதைப் போலவும் கண்டும் காணாதவர்களாகவும் இருக்கக்கூடாது. கவனமாக கர்த்தருடைய வார்த்தைக்குச் செவி கொடுத்து அதற்கு கீழ்ப்படிய தேவன் எதிர்பார்க்கிறார். பில்லிசூனிய பாவத்தைக்குறித்து கேள்விப்படுகிறோம்.

பில்லிசூனியம் செய்யும்படியாக அப்படிப்பட்ட நபர்களை சிலர் நாடுகிறார்கள், அது மாபெரிய பாவமாக இருக்கிறது. அதற்கு சரியாக இரண்டகம் பண்ணுதல் இருக்கிறது. அதைப்போல முரட்டாம்பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது என்கிறான். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற அநேகர் உலகஅளவில் பார்க்கும்போது விக்கிரகாராதனை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இது தேவனுடைய பார்வையில் அருவருப்பான காரியமாகவும், தேவன் விக்கிரகாராதனை செய்கிறவர்களை தண்டியாமல் விடார் என்றும் காண்கிறோம். தேவன் வெறுக்கிற காரியத்தை அநுதின வாழ்வில் செய்துகொண்டு கர்த்தருக்கு பிரியமாய் வாழமுடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஒரு நாளும் முடியாது. சவுல் இந்த விதமான காரியங்களை செய்தபடியால் அவனை ராஜாவாக இராதபடி புறம்பாக்கிப்போட்டார். தேவன் உங்களையும் புறம்பாக்கிப்போடாதிருக்க அவைகளை விட்டுவிலகி தேவனுக்குப் பிரியமானதை செய்யுங்கள். சாமுவேலோடும். தாவீதோடும் கூட இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார்.

மூன்றாவது மரியாள். இவளும் தாவீது சாமுவேலைப்போல கர்த்தருக்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தவள். ‘இதோ. நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்‘ [லூக் 1:38]. இயேசுவை தன் கர்ப்பத்தில் சுமப்பதற்கு தன்னை முழுமையுமாக ஒப்புக்கொடுத்தவள். ஐயோ என்னை ஜனங்கள் என்ன நினைப்பார்கள். ஒரு கன்னி கர்ப்பவதியாகி ஒரு பிள்ளையைப் பெற்றாள் அவளை இந்த சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமா? போன்ற கேள்விகளை மற்றவர்களாக இருந்தால் கேட்டிருப்பார்கள். ஆனால் மரியாளோ அவ்விதமாக கேட்கவில்லை: தேவதூதனை சந்தித்தபோது இதோ. நான் ஆண்டவருக்கு அடிமை என்றாள்.

அநேக பெண்களுக்கு கிடைக்ககூடாத பாக்கியத்தை அந்நாட்களில் வாழ்ந்த இந்த மரியாள் பெற்றாள். இதனால் அவள் கிருபை பெற்றவளானாள். ‘அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ், கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்‘ [லூக் 1:28], கர்த்தர் மரியாளோடு கூட இருந்தார். கர்த்தரை மாம்சத்தில் சுமக்கிற ஒரு

தாயாகவும் இருந்தாள். மேலும் அவள் சொல்லும்போது: ‘அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்; இதோ. இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்‘ என்றாள் [லூக். 1:48].

ஆம். இன்றுவரை அவளை அநேகர் பாக்கியவதி என்று சொல்லுகிறார்கள். அந்த பாக்கியத்திற்கு ஏற்றவளாக தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார் என்றாள். அவள் தன்னை முழுவதுமாக தேவசமுகத்தில் அடிமையாக ஒப்புக்கொடுத்திருந்தாள். தன்னைத்தான் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி கர்த்தரால் உயர்த்தப்பட்டாள். கர்த்தரைப் பெற்று எடுத்த தாயாக மரியாள் இருந்தபோதும், அவள் கர்த்தருடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்தவளாகவும், அவருடைய உபதேசத்தின்படி நடக்கிற மற்றவர்களைப்போலவும் இருந்தாள், கானாவூர் கலியாண வீட்டில் திராட்சரசம் குறைவு பட்டபோது, அவளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அங்கே அவள் என் மகன் என் வார்த்தையின்படி செய்வான் என்றோ அல்லது நான் சொன்னால் தட்டமாட்டான் என்றோ தான் அவரை பெற்ற தாய் என்றோ உரிமை பாராட்டியதாக வசனத்தில் இல்லை. மாறாக ‘வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள் என்றாள்‘ [யோவா. 2:5], இது அவளுடைய கீழ்படிதலையும், அடிமையாக ஒப்புக்கொடுத்தலையும் காட்டுகிறது. நான் உமது அடியேன் என்று சொல்ல நீங்கள் செய்யவேண்டியது என்ன?

தாவீதைப்போலவும், சாமுவேலைப்போலவும், மரியாளைப் போலவும் ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கின்றோம்.


## வாழ்க்கை புத்தகம்

மூன்று தொகுப்புகளைக் கொண்டது.

**முடிந்தது, நடப்பது, வரப்போவது**

- ✓ முடிந்தது – எழுதிவைக்கப்பட்டாயிற்று
- ✓ நடப்பது – ஒவ்வொரு நாளும் நாம் எழுதிக் கொண்டிருப்பது.
- ✓ சிறந்ததும், கடைசியுமான தொகுப்பு காண முடியாதபடி பூட்டப் பட்டிருக்கிறது; அதன் சாவியை தேவன் வைத்துள்ளார்.

## என் இரட்சிப்புக்கு நான் என்ன விலை கொடுக்க வேண்டும்?

## What did my salvation cost?

*Betty burton choate*

என் நித்திய ரட்சிப்புக்கு அவசியப்படும் ஒட்டுமொத்த தியாகத்தை நான் எண்ணிப் பார்க்கும்போது, கண்ணீருடன் முழங்கால் படியிடுகிறேன். ஏனென்றால், இரட்சிப்பின் பிரமாண்டத்தையும், அதன் பின்னால் மறைந்திருக்கும் அன்பையும் நான் எண்ணிப் பார்க்கும் பொழுது, கண்ணீர் விடாமல் என்னால் இருக்க முடியாது.

பொதுவாக, தியாகத்தைப் பற்றி அல்லது பலியைப் பற்றிகேள்வி கேட்கப்படும் போது நம் மனது சிஷவையினிடத்திற்குத்தான் செல்கிறது. அது இயற்கை தான்,ஏனென்றால் மனிதர்கள் மிக அதிகமாக பயப்படுவது மரணத்தை பற்றித்தான்.

வெளிப்படுத்தின விசேஷம்13:8 ல் நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம் வெளிப்படுத்தல் 13 : 8 உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள் . ஆதியாகமம் 1:1 ல் ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று பார்க்கிறோம். மூல பாஷையாகிய எபிரேய பாஷையிலே தேவன் என்பதற்கு **Elohim** என்னும் பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது தேவன் என்பதற்கான பன்மைப்பதமாகும் . எபிரேய பாஷையில் **EL** என்பதுதான் தேவன் என்பதற்கான ஒருமைப்பதமாகும். தேவத்துவத்தில் மூவர் இருக்கிறார்கள் என்பதற்கு நமக்கு ஏராளமான வசனங்கள் உள்ளன உதாரணமாக சேனைகளின் கர்த்தர் [1 சாமுவேல் 17:45] ; வார்த்தை [யோவான் 1:1–4]; ஆவியானவர் [ஆதியாகமம் 1:2]. ஆனால் இந்த மூவரும் எல்லா விதத்திலும் சமமாக ஒன்றாக இருக்கிறார்கள்.

சிருஷ்டிப்பின் போது தேவத்துவத்தில் உள்ள மூவரும் சகல காலங்களையும் அறிந்திருந்தபடியால் தங்கள் சாயலில் உண்டாக்கப்படும் மனிதன் வருங்காலத்தில் நன்மை தீமையை அறியும் ஆற்றல் உள்ளவனாக இருந்தாலும் கூட, அழிவில்லா ஆத்துமாவை உடையவனாக இருந்தாலும் கூட பாவம் செய்வான் என்பதை அறிந்திருந்தார்கள். மனிதன் பாவம் செய்வதன் காரணமாக

தேவ சமூகத்திலிருந்து வெளியேற்றப்படும் போது என்ன செய்யப்பட வேண்டும் என்பதையும் தேவத்துவத்தில் இடம்பெற்றுள்ள மூவரும் அறிந்திருந்தார்கள். மனிதனை இரட்சிப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டு விட்டது. பழைய ஏற்பாடு முழுவதும் பார்க்கும் போது சேனைகளின் கர்த்தர் அதிகமாக பிதா என்று அழைக்கப்படவில்லை.

தேவத்துவத்தில் இரண்டாம் நபர் யாத்திராகமம் மூன்றாம் அதிகாரத்தில் தம்மை இருக்கிறவராகவே இருக்கிறேன் என்று அடையாளப்படுத்துகிறார். இரு என்பவர் மனிதர்களோடு இடைபடும் போது அதிகாரத்துடன் பேசியிருக்ணுறார். இவர் கர்த்தருடைய தூதனானவர் என்று அழைக்கப்படுகிறார் (யாத் 3:2).

இவர் பழைய ஏற்பாடு முழுவதும் பார்க்கும் போது சேனைகளின் கர்த்தருக்கும் மனித இனத்துக்கும் இடையே ஒரு மத்தியஸ்தராக செயல்பட்டு இருக்கிறார். மேலும் இவர் இஸ்ரவேலர்களோடு வனாந்திர யாத்திரையில் கூட இருந்திருக்கிறார் (1 கொரிந்தியர் 10:4). வேத வாக்கியங்களில் நாம் கர்த்தருடைய தூதனானவர் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொன்ன வார்த்தைகளை வாசிக்க முடியும்

தேவத்துவத்தில் மூன்றாம் நபரான பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டின் நாட்களில் அதிலும் குறிப்பாக சவாலான காலகட்டங்களில் பொருளை பெலப்படுத்தும் படி சில மனிதர்களுக்கு கொடுக்கப்பட்டார் (எண்ணாகமம் 11:17).

ஆகவே, மனிதன் திவான் என்னும் எதிர்பார்ப்பில் பத்தின் உறவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அந்த வார்த்தை மாம்சமான போது மாற்றங்கள் வெளிப்படையாக தெரிந்தன (யோவான்1:14). அப்போதுதான் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனானார், மேலும் கிறிஸ்து முதற் பேரானவர் என்னும் உறவின் மூலமாக கீழ்படிதில் உள்ள மனித இனத்தை நம் பிதாவின் குமாரர்களும் குமாரத்திகளுமாக ஆக்கினார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த பிறகு புதிய ஏற்பாட்டில் அதிகமாக தேவன் பிதா என்றுஅழைக்கப்படுவதை நீங்கள் கவனித்து இருக்கிறீர்களா?

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்பணியை நிறைவேற்றும்படி இவ்வுலகத்திற்கு வந்தாரோ அவைகள் முடிந்த பிறகும்கூட தாம் பேசின வார்த்தைகள் தம்முடையவைகள் அல்லவென்றும் அவைகள் எல்லாம் தேவன் தமக்கு தந்த வார்த்தைகள் என்றும் வெளிப்படையாக அறிவித்தார்.

அதுமாத்திரமல்லாமல், அற்புதங்களும் தம்முடைய வல்லமையால் செய்யப்படாமல் பரிசுத்த ஆவியின் வல்லமையால் தான் செய்யப்பட்டன என்றும் அறிவித்தார்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் ஒரு மனிதனாக இருந்தபடியால் தேவனை முற்றிலுமாக சார்ந்திருந்து அப்போஸ்தலர்கள் எப்படி அற்புத அடையாளங்களைச் செய்தார்களோ அதேபோல் தான் அற்புத அடையாளங்களையும் செய்தார்.

இதன் பொருள் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் தேவனாய் இருக்கவில்லையா? நிச்சயமாக இல்லை. எப்படி மனிதர்களாகிய நாம் எவ்வளவுதான் கட்டுப்படுத்தினாலும் கூட நாம் மனிதர்களாகத்தான் இருப்போம். இயேசு கிறிஸ்து அன்றும் இன்றும் என்றும் தேவத்துவத்தில் ஒருவராகிய வார்த்தையாகத்தான் இருப்பார். இயேசு கிறிஸ்து எல்லா விதத்திலும் தம்முடைய சகோதரர்களை போல் இருக்கத்தக்கதாக தமக்குண்டான எல்லா உரிமைகளையும் வல்லமைகளையும் விட்டுக் கொடுத்தார்

அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற் கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது (எபிரேயர் 2:17).

பொதுவாக, சிலுவையில் அறையப்பட்ட ஒருவருடைய உடலை உடற்கூறு ஆய்வு செய்து பார்த்தால் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் பட்டபாடுகள் அளவிட முடியாதது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை கற்பனை செய்து பார்க்கும் போது அவர் சிலுவையின் வேதனையை எண்ணி மிகுந்த கலக்கத்துடன்தான் பிதாவுக்கு சித்தமானால் அந்தப் பாடுகள் தம்மைவிட்டு நீங்கி போகட்டும் என்று மன்றாடியிருக்கிறார் என்று ஒரு முடிவுக்கு வருகிறோம். ஆனால், இயேசு கிறிஸ்து அடிக்கப்படுவதற்கும் தம்முடைய கரங்கள் ஆணிகளால் கடாவப்படுவதற்கும் தம்மை ஒப்புக்கொடுத்த போது அவர் முழு கட்டுப்பாட்டில் இருந்து கொண்டுதான் பிதாவின் சித்தத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்தார் என்பதை நம்மால் காண முடியும்.

மரணம் அவருக்கு என்னவாக இருந்தது? பாவம் இல்லாத வார்த்தையாக இயேசு எதற்காக இந்த உலகத்திற்கு வந்தாரோ அவை எல்லாம் அவர் நிறைவேற்றி விட்டார். அதன் பின்பு அவரை சுதந்திரமாக இருந்தாரா? இல்லை அவர் தம்முடைய சகோதர சகோதரிகளுக்காக தம்முடைய ஜீவனை பலியாக

ஆயத்தமாக்கினாரா? அவர் அந்த சிலுவை பாடுகளுக்கு பயந்தாரா என்று உங்களுக்குள்ளேயே கேள்வி எழுப்பிக் கொள்ளுங்கள். இந்தக் கோர சிலுவையில் என்ன நடந்தது? அந்தக் கோரச் சிலுவையில் தான் அவருடைய பாவங்களுக்காக அல்ல நம்முடைய பாவங்களுக்காக அதாவது மனித இனத்தின் பாவங்களுக்காக அவர் மரித்தார். அந்த கோரச் சிலுவையில் வைத்து தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் தேவனே! என் தேவனே, என்னை ஏன் கைவிட்டீர்? என்று கதறினார் (மத்தேயு 27:46). இயேசு கிறிஸ்து அந்த சிலுவை பாரத்தையும், நம்முடைய பாவ பாரத்தையும் சேர்த்து சுமந்தார் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்த கோரச் சிலுவையில் வைத்துதான் இயேசு கிறிஸ்துவால் 12 லேகியோனுக்கு அதிகமான தூதர்களை அழைக்க முடியவில்லை, அந்த கெத்சமனேதோட்டத்தில் வைத்து நம் ஆண்டவர் பேதுருவிடம் இவ்விதமாய் சொன்னார் ‘ நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா?

(மத்தேயு 26:53). அந்தக் கோரச் சிலுவையில் வைத்துதான் என் பாவங்களுக்கான கிரயம் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால் செலுத்தப்பட்டது.

பெரும்பாலான மக்கள் கிறிஸ்து பரலோகத்திற்கு திரும்பினப் பிறகு அவர் மனித இனத்தோடு கொண்டிருந்த உறவு முடிவுக்கு வந்து விட்டது என்று எண்ணுகிறார்கள். ஆனால் வேத வாக்கியங்கள் அவ்விதமாய்ச் செல்லவில்லை 1 கொரிந்தியர் 15:20 இயேசு கிறிஸ்து மனித இனத்தோடு கொண்டிருக்கும் தொடர்ச்சியான உறவை பற்றிப் பேசுகிறது

அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன். நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை.

நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே. நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே.

நாம் கர்த்தருக்கு எரிச்சலை மூட்டலாமா? அவரிலும் நாம் பலவான்களா? (1 கொரிந்தியர் 10:21-22).பிலிப்பியர் (2:8-11) வசனங்கள் நம் இரட்சகர் மரணபரியந்தம் தேவனுக்கு கீழ்ப்படிந்ததன் காரணமாக தேவன் நம் இரட்சகரை உயர்த்தி எல்லா நாமத்துக்கும்

மேலான நாமத்தை கொடுத்திருக்கிறார். இப்போது நம் ரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் வீற்றிருக்கிறார். ஆனால், அவர் எப்படி விவரிக்கப்படுகிறார்?

தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே (1 தீமோ 2:5). நம் ரட்சகர் தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் நம் சகோதரராகவும் திரும்பியிருக்கிறார். அவர் தம்முடைய சரீரத்தில் மரணத்தை ஜெயித்தது போல நாமும் மரித்தப்பிறகு உயிர்த்தெழுவோம் என்னும் உத்திரவாதத்தை அளித்திருக்கிறது.

மரணமே ஜெயிக்கப்படும்போது 1 கொரிந்தியர் 15:28 இவ்விதமாய்ச் சொல்கிறது சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (ரோமர் 8:16,17) இந்த நித்திய உறவை இன்னும் விவரமாக விவரிக்கிறது. நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே, கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும் (ரோமர் 8:16). மேலும்,வெளிப்படுத்தின விசேஷம் 3:21 இவ்விதமாய்ச் சொல்லுகிறது.

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன் (வெளி 3:21).

மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதிகள் தேவத்துவத்தின் உறவைப் பற்றி என்ன சொல்கின்றன? நாம் அதிகமாக தேவனுடைய குமாரர்களாக குமாரத்திகளாக இருக்க வேண்டுமென்றால் முதற்பேரானவராகிய இயேசு கிறிஸ்து நித்தியமாக நம் சகோதரராக இருக்க வேண்டும். மனித இனம் உண்டாக்கப்படுவதற்கு முன்பாகவே நம் ஆத்துமாக்கள் தேவனிடமிருந்து என்றென்றும் இருப்பதற்கான கிரயம் உறுதி ஆகிவிட்டது அந்தக் கிரயத்தை செலுத்த வார்த்தையாகிய இயேசு கிறிஸ்து தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

நான் நித்தய ஜீவனை பெற்றுக் கொள்வதற்காக என் ரட்சகராகிய இயேசு கிறிஸ்து இந்த மாபெரும் தியாகத்தை செய்திருக்கிறார். நான் நித்திய நித்தியமாக தேவனுடைய பிள்ளையாக வாழ்வதற்கு நான்

என்ன தியாகம் செய்வதற்கு விருப்பம் உள்ளவனாய் இருக்கிறேன்?

நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2:24).

**அந்த தழும்புகள் எல்லாம் நம்மால் தான் நமக்காகத்தான்.**

சமுதாயத்தில் காரியங்களை மோசமாக மாற்றுகிற பிரச்சனை எப்போதுமே இருந்து வருகிறது. தேவனுடைய ஜனங்கள் கூட அப்படி செய்திருக்கிறார்கள். உதாரணமாக, எரேமியாவின் நாட்களில் ஜனங்கள் குழந்தைகளை கூட பலியாக கொடுத்திருக்கிறார்கள் என்று நாம் வாசிக்கிறோம். கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வருவதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பாக ஏசாயாவின் நாட்களில் ஏசாயா இவ்விதமாய்ச் சொன்னார் 'தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!'(ஏசாயா 5:20). தேவனுடைய ஒழுக்க நெறிகள் மறக்கப்படும் போது, மனித இனம் எவ்வளவு மோசமான நிலைக்கு தள்ளப்படும் என்பதை சில வேளைகளில் நாம் சிந்திக்க தவறுகிறோம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தீமையை நன்மையென்றும்,நன்மையை தீமை என்றும் மக்கள் அழைக்கும் காலகட்டங்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ?

## தேவன்

# தேவன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறார் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறார்

## God is in control, The control and in full control

*Marilyn Lastrape*

இன்றைய நாட்களில் பெரும்பாலானோர் தேவன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறார் என்று முந்தைய நாட்களில் அநேகர் சொல்வதை போல் கேட்க முடிவதில்லை. இக்கட்டுரை அந்த மாறாத உண்மையை அறிவிக்கும்படியாக அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. மீட்பின் திட்டம் தேவனுடையதாய் இருக்கிறபடியால் அவரே அதை நடத்துகிறபடியால் தேவனுடைய கிரியைகளை நாம் சும்மா நின்று வேடிக்கை பார்ப்பதுதான் நம்முடைய வேலையாய் இருக்கிறது. நாம் இவ்வுலகில் பிறப்பதற்கு முன்பாகவே தேவன் கட்டுப்பாட்டில்த்தான் இருந்தார், நாம் எல்லோரும் இவ்வுலகை விட்டு கடந்து போனாலும் கூட அவர் இவ்வுலகை தம்முடைய கட்டுப்பாட்டில் தான் வைத்திருப்பார்.

**சங்கீதம் 33:10-11** - கர்த்தர் ஜாதிகளின் ஆலோசனையை விருதாவாக்கி, ஜனங்களுடைய நினைவுகளை அவமாக்குகிறார். கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்.

**சங்கீதம் 46:10** - நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள், ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன்.

**சங்கீதம் 74:16,17** - பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது, தேவரீர் ஒளியையும் சூரியனையும் படைத்தீர். பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டம்பண்ணினீர், கோடைகாலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினீர்.

**சங்கீதம் 86:9,10** - ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள். – தேவரீர் மகத்துவமுள்ளவரும் அதிசயங்களைச் செய்கிறவருமாயிருக்கிறீர், நீர் ஒருவரே தேவன்.

**சங்கீதம் 115:1**- எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்.

**ஏசாயா 5:26** - அவர் தூரத்திலுள்ள ஜாதியாருக்கு ஒரு கொடியை ஏற்றி, அவர்களைப் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து பயில்காட்டி அழைப்பார், அப்பொழுது அவர்கள் தீவிரமும் வேகமுமாய் வருவார்கள்'

**ஏசாயா 40:21,22** - நீங்கள் அறியீர்களா? நீங்கள் கேள்விப்படவில்லையா? ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்பட வில்லையா? பூமி அஸ்திபாரப்பட்டது முதல் உணராதிருக்கிறீர்களா? அவர் பூமி உருண்டையின்மேல் வீற்றிருக்கிறவர், அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப்போல இருக்கிறார்கள், அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி, அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார் முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள், நானே தேவன், வேறொருவரும் இல்லை, நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன், என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி, உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக்கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனைத் தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன், அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன், அதைத் திட்டம்பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்.

**ஏசாயா 48:13** - என் கரமே பூமியை அஸ்திபாரப்படுத்தி, என் வலதுகை வானங்களை அளவிட்டது, நான் அவைகளுக்குக் கட்டளையிட, அவைகள் அனைத்தும் நிற்கும்'

**ஏசாயா 57:15** - நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கின வர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.

எரேமியா 9:23,24 – ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம். மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்

என்று கர்த்தர் சொல்லுகிறார், இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவன் ஒட்டுமொத்த பிரபஞ்சத்தையும் கட்டுபாட்டுக்குள் வைத்திருக்கிறார். மேலும் அவர் என்றென்றும் மாறாத நித்திய சத்தியத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். யோபு 41:11 ல் யோபு உடன் பேசும் போது நாம் இவ்விதமாய் காண்கிறோம்' தனக்குப் பதில்கொடுக்கப்படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவைகள்.

## *நீங்கள் பரமப்பிதாவை உடையவர்களாக இருக்கிறார்களா?*

தேவனைப்பற்றி அநேக பொதுவான கருத்துக்கள் உள்ளன. சிலர் தேவனை சக்தி என்று கூறுகின்றார்கள். இந்த சக்தியிலிருந்துதான். எல்லாம் தோன்றியது என்று கூறுகிறார்கள். இன்னும் சிலர் உயிரற்ற விக்கிரகங்களை தேவன் என்று கூறுகின்றனர். இன்னும் சிலர் மனிதனையே தேவன் என்று கூறுகிறார்கள்.

'தேவன் ஆவியாயிருக்கிறார்' என்று வேதாகமம் போதிக்கிறது (யோவான் 4:24). ஆனால், அவர் மனிதன் மீது அக்கறை செலுத்த முடியாத ஒரு விசையோ, ஒரு இயந்திரமோ அல்ல. 'தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்' என்று வேதம் விளக்குகிறது (சங் 103:13).

'நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்..நான் உங்களுக்கு பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்கு குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்' என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணி இருக்கிறார். (11 கொரி 6:16-18)

'நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே. பிதாவானவர் நமக்கு பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்' (1 யோவான் 3:1). மனிதர்களாகிய நாம் தேவனுடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய பிள்ளைகளாக இருக்க முடியும்.

**தேவனுடைய வார்த்தை**

# நிலைத்திருக்கும் வார்த்தை

## The enduring word

*Rodney Nulph*

இவ்வுலகில் எந்த ஒரு பொருளும் நீடித்து, நிலைத்திருப்பதில்லை. நாம் வாங்கும் பொருள்களில் பெரும்பாலானவைகள் தூக்கி எறியப்படத்தக்கவைகளாக, நாம் நினைப்பதை விட துரிதமாக தூக்கி எறியப்படத்தக்கவைகளாகவும்தான் இருக்கின்றன. சிறுபிள்ளைகளின் விளையாட்டு பொருள்களில் இருந்து பெரிய வாகனங்கள் வரை ஒன்றுமே நீடித்திருப்பதுமில்லை நிலைத்திருப்பதுமில்லை. இருந்த போதிலும், வேதாகமம் தேவனிடத்திலிருந்துதான் வந்தது என்பதற்கான ஆதாரங்களில் ஒன்று அதனுடைய நிலைத்திருக்கும் தன்மையாகும்.

வேதாகமம் காலங்களைக் கடந்தும் இன்றும் நிலைத்திருக்கிறது. வேத வாக்கியங்களை என்றென்றைக்கும் நிலைத்து நிற்கிறது என்று குறிப்பிடுகிறார் [1 பேதுரு 1:23]. தேவனுடைய அற்புதமான புத்தகம் பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் நிலைத்து நிற்கிறது. ஆரம்ப நாட்களில் வேத வாக்கியங்கள் மிருகங்களின் தோல்கள் மீதும், பேப்பரஸ் காகிதத்தின் மீதும் எழுதப்பட்டன. ஆனால், அவைகள் எல்லாம் அழிந்து போக கூடியவைகளாக இருந்தன. அவைகள் அழிந்து போகும் தன்மை உடையவவைகளாக இருந்தாலும் கூட தேவ செய்தி காலங்களைக் கடந்தும் இன்றும் நிலைத்து நிற்கிறது. இன்று நம்முடைய கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் வேதாகமம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வேதபாரகர்களின் கைகளினால் எழுதப்பட்டிருந்தாலும் கூட, வேத வாக்கியங்கள் இன்றும் பிழையற்றதாக காணப்படுகின்றன. ஆதி மனிதர்களிடத்தில் வளங்கள் குறைவாக இருந்தபோதிலும் கூட, வேத வாக்கியங்கள் எவ்வித பாதிப்புக்கும் உட்படுத்தப்படாமல் இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. பழங்காலத்தில் எழுதப்பட்ட எந்த புத்தகத்திற்கும் வேதாகமத்தில் இருப்பது போல ஆதாரங்கள் இல்லை, ஜூலியஸ் சீசரின்


படைப்புகளில் சில பிரதிகள் மாத்திரமே இப்போது உள்ளன. ஆனால், வேத வாக்கியங்களை தாங்கிய தோல் சுருள்கள் பல நூற்றாண்டுகளைக் கடந்தும் இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. அரிஸ்டாட்டில்,பிளாட்டோ போன்ற பழங்கால எழுத்தாளர்களின்

படைப்புகளில் ஒரு சில பிரதிகள் மாத்திரமே இப்போது உள்ளன, ஆனால், காலங்களைக் கடந்த வேதாகமம் இன்றும் கோடிக்கணக்கான பிரதிகளாக அச்சடிக்கப்பட்டு வருகின்றன. மனிதர்களுடைய படைப்புகள் கரைந்து போனாலும் கூட தேவனுடைய அற்புதமான படைப்பாகிய வேதாகமம் காலங்களைக் கடந்தும் இன்றும் நிலைத்து நிற்கிறது.

வேதாகமம் பலவிதமான தாக்குதல்களைத் தாண்டி வந்திருக்கிறது. மனிதனுடைய சுபாவம் ஒரு போதும் மாறுவதில்லை. கால காலமாக மனித இனம் தேவனுடைய வார்த்தை இந்த பூமியில் இராதபடி அதை முற்றிலுமாக வேரறுக்க முயற்சித்திருக்கிறது. யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் ஒரு சூரி கத்தியினாலே தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கிய புத்தகச் சுருளை அறுத்து அதை தீயிலே எரித்துப்போட்டான் (எரேமியா 36:20-26). இருந்தபோதிலும், தேவன் எரேமியாவிடம் வேறொரு புத்தகச்சுருளில் முந்தைய புத்தகச்சுருளிலிருந்த வார்த்தைகளை எழுதும் படி வழிநடத்தினார் . ஆச்சரியப்படும் விதமாக அந்த யோயாக்கீம் ராஜா மரித்து அடக்கம் பண்ண பட்டான் ஆனால் அவன் எரித்து போட்ட தேவனுடைய வார்த்தையின் இன்றும் நிலைத்து நிற்கிறது.

(எரேமியா 22:18,19). கி.பி மூன்றாம் நூற்றாண்டில் **Diocletian** என்னும் ரோம சக்கரவர்த்தி சபையை துன்பப்படுத்தி, இயேசுவின் நாமத்தை இந்த பூமியிலிருந்து முற்றிலும் ஒழித்து விட்டதாக சொல்லிக்கொண்டான். சுமார் 30 வருடங்கள் கழித்து, மற்றொரு ரோம சக்கரவர்த்தி தேவனுடைய வார்த்தையை அச்சிட்டு ரோம சாம்ராஜ்யம் முழுவதுமாக விநியோகித்தான். இதில் ஆச்சரியமான தகவல் என்னவென்றால் அந்தச் சக்கரவர்த்தி ரோம சாம்ராஜ்யத்தின் நிதியை கொண்டே அப்படிச் செய்தான் என்பதுதான். வால்டயர் என்னும் பிரெஞ்சு தத்துவ ஞானி நூறு வருடங்களுக்குள் வேதாகமம் முற்றிலுமாக மறக்கப்படும் என்று பெருமையுடன் முன்னறிவித்தான். ஆனால் தத்துவ ஞானி இறந்து சில வருடங்களுக்குள்ளாகவே ஜெனிவா வேதாகமச் சங்கம் அந்த வால்டயரின் அச்சகம் மற்றும் வீட்டையே தேவனுடைய வார்த்தையை அச்சடிப்பதற்கு பயன்படுத்தியது. இன்றைக்கு அந்த வால்டயர் எங்கே? ஆனால், இன்றைக்கு வேதாகமம் உலகம் முழுவதும் நிறைந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் காரர்கள் வேதாகமத்தை முற்றிலுமாக ஒழிக்க முயற்சித்தார்கள் ஆனால்,அந்த முயற்சியில் அவர்கள் முற்றிலுமாக தோற்றுப் போனார்கள். வேதாகமம் எண்ணற்ற முறையில் எதிர்க்கப்பட்டிருந்தாலும் கூட இன்றும் சத்தியமாகிய தேவனுடைய

வார்த்தை நிலைத்து நிற்கிறது. எனவே தான் சங்கீதக்காரனாகிய தாவீது இவ்விதமாய்ச் சொன்னார் கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது (சங்கீதம் 119:89).



வேதாகமம் எல்லா சோதனைகளையும் கடந்து நிலைத்து நிற்கிறது. வேதாகமம் பொய் என்பதை நிரூபிக்க பலர் அதை பரிசோதித்துப் பார்த்தார்கள் ,பகுத்தாராய்ந்து பார்த்தார்கள். ஆனால், அந்த முயற்சிகள் எல்லாம் பயனற்றதாக போய்விட்டன. சில நேர்மையற்ற மனிதர்கள் வேதாகமம் நம்பத் தகுந்ததல்லவென்றும், சார்ந்திருக்கத்தக்கதல்லவென்றும் எவ்வித ஆதாரங்களுமின்றி குற்றம் சாட்டுவார்கள். உண்மையில், சிலர் மோசே வாழ்ந்த காலகட்டத்தில் எழுத்துக்கள் இல்லாதிருந்தபடியால் மோசே பஞ்சாகமத்தை எழுதியிருக்க முடியாது என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், தொல்பொருள் ஆராய்ச்சியில் மோசேயின் நாட்களில் எழுத்துக்கள் இருந்தன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிலர் வேதாகமம் விவரிக்கும் வரலாற்று உண்மைகளுக்கு ஆதாரம் இல்லை என்றும் அதன் காரணமாக வேதாகமத்தின் நம்பகத்தன்மை சந்தேகத்துக்குரியது என்றும் கூறினார்கள். உதாரணமாக ஏத்தியர்களின் தேசம், தாவீதின் அரசாட்சி,பொந்திய பிலாத்துவின் ஆளுமைத்துவம் போன்றவைகள் பலருடைய சந்தேகக்கண்களில் விழுந்தன. ஆனால்,காலம் கடந்த பிறகும் கூட தொல்பொருள் ஆராய்ச்சியில் அவைகளெல்லாம் உண்மைகள் என கண்டறியப்பட்டன, இங்கே மறுபடியும் தேவனுடைய வார்த்தை உண்மை என நிரூபிக்கப்பட்டி ருக்கிறது. அழிந்து போகும் மனிதனுடைய எல்லா சோதனைகளையும் கடந்து தேவனுடைய வார்த்தை இன்றும் நிலைத்து நிற்கிறது.

நாம் பரிசுத்த வாக்கியங்களின் நம்பகத் தன்மையைச் சார்ந்திருக்க முடியும் உலகில் உள்ள பொருட்கள் கடந்து போகும் அவைகள் என்றும் நிலைத்திருப்பதில்லை. ஆனால், தேவனுடைய வார்த்தையோ என்றென்றும் நிலைத்து நிற்கும் 'மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது. புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே (1 பேதுரு 1:24,25).

## என்றால்

***கிறிஸ்து வாசல் என்றால்,*** மற்றோருக்கு கதவை திறக்க, மூட நீ தான் அந்த வாசலை காப்பவன். அவர் உலகத்தின் ஒளி என்றால், பூமியின் கடையாந்திரமும் நீ தான் அந்த ஒளியை எடுத்துச் செல்பவன்.

***அவர் திராட்சை செடி*** என்றால், கனி தரும் கொடி நீ தான்.

***அவர் ஜீவ அப்பம்*** என்றால் அதை பிட்டு 4 (பசியுற்றோருக்கு) வழங்குபவன் நீ.

***அவரே சத்தியம் என்றால்,*** சத்தியத்தை விளக்கி, அதை மற்றோருக்கு வழங்குபவன் நீ.

***அவர் பிரகாசமுள்ள விடி வெள்ளி என்றால்*** மனுக்குலம் அவரைக் கண்டு என்றும் வாழ, உலகத்திலிருந்து அவர் அழகை மறைக்கும் மேகங்களை அப்புறப்படுத்த வேண்டியவன் நீ.

***அவர் மகிமையுள்ள சத்தியம் என்றால்*** பிதாவின் பிரதான ரட்சிப்பின் திட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு பாகம் நீ.

# வேத வாக்கியங்கள் சம்மந்தமாக சில நடைமுறை அறிவுரைகள்

# Some practical instruction concerning scriptures

*Wayne barrier*



***வே***த வாக்கியங்கள் சம்மந்தமாக தீமோத்தேயுவுக்கும், நமக்கும் அப்போஸ்தலனாகிய பவுலின் அறிவுரைகள் நடைமுறையானதும், சுருக்கமானதுமாகும். இன்று மத உலகில் பிரிவினைக் கூட்டங்கள் இருப்பதால் அதாவது இன்றைய நாட்களில் கிறிஸ்தவ உலகில் பல பிரிவினைகள் இருப்பதால் எல்லாவற்றுக்கும் வேதாகம வழிகாட்டி அவசியமாய் இருக்கிறது. நாம் முதலாவது, (2 தீமோத்தேயு 2 :14-17) வசனங்களை வாசிப்போம்'இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டி, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல், கேட்கிறவர்களைக் கவிழ்த்துபோடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு, கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லு. நீ வெட்கபடாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.

சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு. அவைகளால் (கள்ளப் போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள். அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்; இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்; (2 தீமோத்தேயு 2:14-17). பவுலின் இந்த அறிவுரைகள் எல்லாம் புரிந்து கொள்வதற்கு எளிதானதும் நேரடியாகவும் உள்ளது. இங்கே பிரச்சனை என்னவென்றால், வேத வாக்கியங்களை பகுத்து போதிப்பதற்கு

அவைகளைக் கவனமாக படிக்க வேண்டிய அவசியம் இருக்கிறபடியால் பின்பற்றுவதற்கும் எளிதானதாக இல்லை. விசுவாசிகள் பெரும்பாலும் வேத வாக்கியங்களை புரிந்து கொள்வதிலும், அதில் தேர்ச்சி அடையவும் தங்கள் நேரத்தை செலவழிப்பதும் இல்லை, எந்த முயற்சியும் எடுக்க விரும்புவதுமில்லை.

அடுத்ததாக, வேத வாக்கியங்களின் உயர்ந்த தரம் மற்றும் அதிகாரம் சம்மந்தமாக பவுலின் நேரடியான வாக்கியங்களை கவனிப்போம்.

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள். நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு. அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, (2 தீமோத்தேயு 3:12–16).

மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதி எளிமையாக இருந்தாலும் கூட வல்லமையுள்ளதாகும். தேவனுக்கு கீழ்ப்படியவும் பிரியமாய் இருக்கவும் அவசியமான தகவல்களை வேத வாக்கியங்கள் உள்ளடக்கியிருக்கிறது என்பதை நம்மால் முழுமையாக நம்ப முடியும். வேத வாக்கியங்களைப் போல முக்கியமானதும் ஒன்றும் இல்லை வேத வாக்கியங்களைப் போல நம்பர் தகுந்தவைகளும் எதுவும் இல்லை. நாம் தேவனுக்குள்ளும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் விசுவாச வாழ்க்கை வாழ வேதத்தில் உள்ள 66 புத்தகங்களும் எப்படி இசைவாக இருக்கிறது என்பதைக் குறித்து அறிந்திருக்கிறீர்களா?

இரட்சிப்பு

## நான் முன்பு இருந்த மனிதனாக இப்போது இல்லை

## I'm not the man I used to be

*Raymond Elliot*




கிறிஸ்தவ உலகில் பாடப்படும் ஒரு புகழ் பெற்ற பாடல் உண்டு அது உலகத்தின் பாவத்திற்காக மரித்த இயேசு கிறிஸ்துவை ஒருவர் பார்க்கும்போது அவருடைய பழைய வாழ்க்கை முற்றிலுமாக மாறிவிட்டது என்பதை வலியுறுத்துவதற்காக அந்தப் பாடல் பாடப்படுவதுண்டு. ஒருவருடைய பழைய ஜீவியம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் கூட, ஒருவர் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனாக விசுவாசித்து பழைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது, அந்த நபருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன, மறக்கப்படுகின்றன [அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38;22:16; எபிரேயர் 8:12].

மனித இனம் இரக்க குணம் உடையதுமல்ல, மன்னிக்கும் குணம் உடையதுமல்ல. சமீபத்தில் கட்டுரை ஒன்றை வாசித்தேன், அதில் போயிங் நிறுவனத்தின் தகவல் தொடர்பு தலைவராக இருந்த ஒருவர் 1987இல் நடந்த யுத்தத்தின்போது அவர் பெண்களை விமர்சித்து கட்டுரை எழுதியதின் காரணமாக தன்னுடைய பணியிலிருந்து ராஜினாமா செய்யும்படி நிர்பந்திக்கப்பட்டார். அதாவது அவர் சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக கப்பற்படையில் யுத்த வீரனாக இருந்தபோது பெண்களை விமர்சித்தது இன்றும் அவரை துரத்திக் கொண்டிருக்கிறது என்று நான் அறிந்து கொண்டேன். போயிங் நிறுவனத்தின் தகவல் தொடர்பு தலைவரான இந்த நபர் 30 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது பெண்களுக்கு எதிரான விமர்சனம் எதுவும் தன்னிடமில்லை என்று அவர் விளக்கம் அளித்தாலும்கூட ,அவர் தன்னுடைய பணியில் இருந்து வெளியேறும்படி நிர்பந்திக்கப்பட்டிருக்கிறார். நம் நாட்டில் நிலவும் மிதமிஞ்சு நிலைகளுக்கு நான் சொல்லும் இந்த சம்பவம் ஒரு மிகச் சிறந்த

நம்முடைய பரம தகப்பனும் இந்த போயிங் நிறுவன தகவல் தொடர்பு தலைவரை ராஜினாமா செய்ய நிர்பந்தித்த நபர்களைப் போல நம்மையும் மன்னிக்காமல் இருந்தால் நிலைமை எப்படி இருக்கும்? தேவனுடைய வார்த்தைகளுக்கு அல்லது அவருடைய சித்தத்திற்கு இசைவில்லாமல் அல்லது செய்த மனிதர்களின் பெயர்கள் கீழ்கண்டவாறு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மனிதர்கள் தெய்வ சித்தத்திற்கு இசைவாக நடக்காதபோதும்கூட தேவன் அவர்களை மன்னித்து தம்முடைய ராஜ்யத்தில் பயன்படுத்தினார்.

விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம் பூரணராய் இருக்கவில்லை. வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்மிருக்கிற இரண்டு சம்பவங்களில் அவர் தன்னுடைய உயிரைப் பாதுகாக்க ஆட்சியாளர்களை ஏமாற்றியிருக்கிறார். ஆபிரகாம் எகிப்துக்கு போனபோது தன் மனைவியாகிய சாராள் சௌந்தர்யம் உடையவளாயிருந்தபடியால் அவர் சாராளைப் பார்த்து ஆகையால், உன்னிமித்தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னாலே என் உயிர் பிழைக்கும்படிக்கும், நீ உன்னை என் சகோதரி என்று சொல் என்றான் [ஆதியாகமம் 12:13]. இதன் காரணமாக பார்வோனும் அவனோடு இருந்தவர்களும் சாராள் ஆபிரகாமின் சகோதரி தான் மனைவி அல்ல என்று நம்பினார்கள். ஆபிரகாமின் வார்த்தைகள் நலமாக இருந்தாலும் கூட முழு அது உண்மை அல்ல. அதன் பின்னர் ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளோடு கேராருக்குச் சென்றார். ஆபிரகாம் அங்கு இருந்தவர்களிடமும் சாராளை தன் சகோதரி என்று சொன்னார், அதன் காரணமாக ராஜாவாகிய அபிமெலேக்கு ஆளனுப்பி சாராளை அழைப்பித்தான். அப்போது அங்கே தேவன் இடைப்பட்ட படியால்தான் சாராளைத் தொடவில்லை [ஆதியாகமம் 20]. தாவீது பல தடைகளை கடந்து இஸ்ரவேலின் ராஜாவானார். தேவன் அவரை அதிகாரத்தினாலும் பூமிக்குரிய வஸ்துக்களினாலும் அபரிதமாக ஆசீர்வதித்தார். இருந்த போதிலும் தாவீது ஸ்திரீயோடு விபச்சாரம் செய்து அவளுடைய கணவனை கொலைச் செய்தார் [2 சாமுவேல் 11]. அப்போஸ்தலமாகிய பேதுரு கர்த்தரை மூன்று தரம் மறுதலித்தார் [மத்தேயு 26:69-75]. அதேபோல் அப்போஸ்தலனாகிய பவுலும் மனமாற்றத்திற்கு முன்பாக கர்த்தருடைய சபையை துன்பப்படுத்தினார்[ அப்போஸ்தலர் 9]. அதன் காரணமாகவே பவுல் தன்னை பாவிகளுள் பிரதான பாவி நான் என்று குறிப்பிடுகிறார் [

ஆபிரகாம் தேவன் மீதான விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் முதிர்ச்சி அடைந்தார் அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது [ரோமர்4:3,5]. தாவீது ராஜாவும் பாவங்களை குறித்து மனஸ்தாபப்பட்டு,

மனந்திரும்பினார் [சங்கீதம் 32:51]. அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசு கிறிஸ்துவை மறுதலித்ததை குறித்து மிகவும் வருத்தப்பட்டு, மனங்கசந்து அழுதார் [மத்தேயு 26:75]. பவுல் இயேசுவில் விசுவாசம் வைத்து, பாவங்களிருந்து மனந்திரும்பி ,பாவங்கள் கழுவப்படும் படி ஞானஸ்நானம் பெற்றார் [அப் 9:9–11; 22:16].

மேற்சொல்லப்பட்ட தேவ மனிதர்கள் மனம் திரும்பிய பிறகு முன்பு இருந்த மனிதர்களாக அவர்கள் இருக்கவில்லை. தேவனும் அவர்களுடைய கடந்த கால பாவங்களை தம்முடைய மனதில் வைக்காமல், அவைகளை மன்னிக்கவும்,மறக்கவும் செய்தார். நம்முடைய ஜீவியங்களில் தேவனக்கு பிரியமில்லாத காரியங்களை சொல்லிவிட்டு, செய்துவிட்டு, பிற்பாடு மன்னிக்கும்படியாக தேவனிடம் மன்றாடியிருப்போம். நம் பரம தகப்பனுடைய எல்லை இல்லா இரக்கங்களுக்காக நாம் அவருக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவன் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை மன்னிப்பதாக நமக்கு நிச்சயம் அளித்திருக்கிறார். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் [1 யோவான் 1:9]. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்‘[சங்கீதம் 103:12]. ‘நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன், உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன் [ஏசாயா 43:25].

## விழுந்து போவதற்கான சில காரணங்கள்

| | | |
|---|---|---|
| சாத்தான் | - | லூக்கா 22:31, |
| கள்ளப் போதகர்கள் | - | அப்போஸ்தலர் 20:29,30, |
| வசனத்தைப் புரட்டுதல் | - | II தீமோத் 4:3-4. |
| உபத்திரவம், துன்பம் | - | மத்தேயு 13:31. |
| கீழ்ப்படியாமை | - | எபிரெயர் 3:18,19 |
| உலக ஆசை | - | தீமோத்தேயு 4:10, |
| மாம்ச வாழ்க்கை | - | ரோமர் 8:13 |

இரட்சிப்பு

## பரலோகத்தில் பேரக் குழந்தைகள் இல்லை

## No Grandchildren in Heaven

*Rebecca Rushmore*

பரலோகில் பேரக்குழந்தைகள் இல்லை. முதல் பார்வையில் இவ்வாக்கியம் ஒரு கேலி கூத்தானதாகவும் வேதாகமத்திற்கு எதிரானதாகவும் தோன்றும். நம்முடைய பெற்றோர்கள் மூலமாக நாம் பிறந்திருக்கிறோம் நம் பெற்றோர்களுக்கு பெற்றோர்கள் இருந்தார்கள். எனவே எப்படிப் பார்த்தாலும் நாம் யாரோ ஒருவருக்கு பேரக்குழந்தைகளாகத்தான் இருக்கிறோம். சரீரப்பிரகாரமாக நான் பேசுகிறேன், உண்மையுள்ள வாழ்க்கையை வாழ்ந்தால் பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு நாம் அனுமதிக்கப்படுகிறோம். ஆனால், ஆவிக்குரியப்பிரகாரமாக நாம் அப்படிச் சொல்ல முடியாது.



ரோமர் 8:16 மற்றும் கலாத்தியர் 3:26 வசனங்கள் கிறிஸ்தவர்கள் பிள்ளைகளாய் இருக்கிறார்கள் என்பதை சொல்கின்றன. தொடர்ந்து நாம் கலாத்தியர் 3:27–ல் இவ்விதமாய் வாசிக்கிறோம் ‘ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (கலாத்தியர் 3:27). நாம் ஞானஸ்நானம் பெற்று தேவனுக்காக உண்மையான ஜீவியத்தை ஜீவிக்கும் போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் கிறிஸ்தவராக மாறும் போது அந்த நபர் தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளையாகிறார். இத்தகைய நபர் தேவனுடைய பார்வையில் யாரோ ஒருவருடைய பேரக் குழந்தை அல்ல மாறாக தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார். இது பரலோகத்திலே பேரக்குழந்தைகள் என்று யாரும் அழைக்கப்பட மாட்டார்கள் என்பதை உறுதிச் செய்கிறது. உண்மையைச் சொல்லப் போனால் உலகமும் கிறிஸ்தவர்களை எந்த ஒரு இடத்திலும் தேவனுடைய பேரக்குழந்தைகள் என்று குறிப்பிடவே இல்லை. மாறாக, தேவனுடைய பிள்ளைகள் என்று தான் குறிப்பிடுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**இப்போது ஆவிக்குரிய பேர குழந்தைகளும் இல்லை என்பது ஏன் முக்கியத்துவம் ஊவாய்ந்ததாக கருதப்படுகிறது?**

நாம் மேலே வாசித்த ரோமர் எட்டாம் அதிகாரம் தொடர்ந்து இவ்விதமாய்ச் சொல்கிறது. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே கலாத்தியர் 3:27]. தேவனுடைய பிள்ளைகளாக நம்முடைய நேரம் வரும்போது பரலோகத்தை நிச்சயமாய் நாம் சுதந்தரிப்போம். நம்முடைய சுதந்திரமானது நாம் தேவனால் தத்தெடுக்கப்பட்டிருக்கும் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாகும் கலாத்தியர் 4:5-7]. நாம் நம்முடைய சுதந்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்க வேண்டும் ;நம்முடைய பெற்றோர்கள் தேவனுடைய பிள்ளைகளாய் இருப்பது என்பது ஒரு பொருட்டே அல்ல. நம்முடைய சுதந்திரம் நம் பெற்றோர்களை அடிப்படையாகக் கொண்டதல்ல. தேவன் ஒவ்வொருவரையும் தனித்தனியாகத் தான் நியாயம் தீர்ப்பார் ,ஒவ்வொருவரும் தேவனுக்கு தனித்தனியாகத்தான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் [ரோமர் 14:12; 2 கொரிந்தியர் 5:10;1 யோவான் 3:10]. நாம் சுதந்தரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் தேவனுடைய பிள்ளைகளாகத்தான் இருக்க வேண்டுமே தவிர பேரக்குழந்தைகளாய் அல்ல.

**தேவன் மீதான விசுவாசம் நம்முடைய தாய் இருக்க வேண்டும்.**

நாம் பரலோகம் போவதற்கு நம் பெற்றோர்களின் விசுவாசத்தை சார்ந்திருக்க முடியாது வேதாகமத்தில் சிலர் அவர்களுடைய மதத்தை விட்டு விட்டு மெய்யான தேவனை பின்பற்றியதற்கு சில உதாரணங்கள் உண்டு. காலேப்பையும் ராகாபையும் பற்றி எண்ணிப் பாருங்கள். மோசே கானான் தேசத்திற்குள் 12 வேவுகாரரை அனுப்பிய போது இரண்டு பேர் மாத்திரமே நாம் போய் அந்த தேசத்தை மேற்கொள்ள முடியும் என்று சுகசெய்தியைச் சொன்னார்கள். அந்த வேவுக்காரரில் ஒருவர் தான் காலேப் [எண்ணாகமம் 13]. இந்த காலைப்பைப் பற்றி நாம் சற்று ஆழமாக ஆராய்ந்துப் பார்த்தால் இவர் யாக்கோபின் சந்ததி அல்ல என்பது வெளிப்படுகிறது அதாவது ஏசாவின் வம்சா வழியில் வந்தவர் என்பது வெளிப்படுகிறது. இவர் தன் பெற்றோர்களுடைய வழிபாட்டு முறையை விட்டுவிட்டு இஸ்ரவேலர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டதாக தெரிகிறது. இவருடைய விசுவாசத்திற்கு தேவன் வெகுவாக பலனளித்தார் [யோசுவா 14].

யோசுவா இரண்டாம் அதிகாரத்தில் ராகாப் என்னும் பேர் கொண்ட ஒரு தைரியமான பெண்ணை பார்க்கிறோம். இஸ்ரவேலில் இருந்து வேவுப் பார்க்க வந்த மனிதர்களை தன் வீட்டில் ஒளித்து வைத்தபடியால் தேவனால் பலனளிக்கப்பட்டாள். இந்த தைரியமான பெண் தேவனுடைய மகத்துவத்தை அறிந்தபடியால் தன் பெற்றோருடைய வழிபாட்டு முறையை விட்டுவிட்டு இஸ்ரவேலர்களோடு குடியிருந்தாள் (யோசுவா 6:25). எபிரேய ஆசிரியர் இவளுடைய விசுவாசத்தை மெச்சுகிறார் (எபிரேயர் 11:31).

ரூத் பவுல் மற்றும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தத்தை பின்பற்றும் படி தங்கள் முன்னோர்களுடைய வழிபாட்டு முறையிலிருந்து பிரிந்து வந்தார்கள். ரூத் மோவா தேசத்திலிருந்து தன் வீட்டை விட்டுவிட்டு இஸ்ரவேலில் இருந்த தன் மாமியாரிடம் போய் அங்கே வசித்தாள். தாவீது ராஜாவும் இயேசு கிறிஸ்துவும் கூட இந்த பெண்ணின் வம்சாவழியிலிருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போஸ்தலனாகிய பவுல் யூத மதத்தில் தனக்கு இருந்த எல்லா மேன்மையையும் விட்டு விட்டு அவைகளை எல்லாம் குப்பை என்றெண்ணி கிறிஸ்துவின் சுவிசேஷகரனார் (பிலிப்பியர் 3:4-8). அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் மனமாற்றமடைந்து முதன் முதலில் சபையில் சேர்க்கப்பட்டவர்களைப் பற்றி வாசிக்கிறோம். அவர்கள் எல்லோரும் பஸ்கா பண்டிகையை ஆசரித்தவர்கள் தான், இருந்த போதிலும் கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தை பின்பற்றுவதற்காக தங்கள் பழைய போதனையை விட்டார்கள். அவர்கள் எல்லோரும் ஒரு நாள் தங்களுக்காக பரலோகில் வைக்கப்பட்டிருக்கிற சுதந்திரத்தை பெற்றுக் கொள்ளும் படி தங்கள் முற்பிதாக்களின் வழிபாட்டு முறைகளை விட்டுவிட்டார்கள். பவுலும் அவரோடு இருந்த முதல் நூற்றாண்டு யூதர்களும் யூத மதத்தை விட்டு விட்டு அதற்கு மாற்றமான சுவிசேஷத்தைத் தழுவினார்கள்.

இன்றைய நாட்களில் அநேகர் இப்படித்தான் செய்ய வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தங்கள் பெற்றோர்களின் மத நம்பிக்கையை ஜாக்கிரதையாக ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். பெற்றோர்களின் மத நம்பிக்கை வேதாகமத்தோடு பொருந்தவில்லை என்று சொன்னால் அந்த நம்பிக்கையை விட்டுவிட்டு கிறிஸ்துவை பின்பற்றுவது அவசியமாய் இருக்கிறது.

சில பிள்ளைகளின் பெற்றோர்கள் தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்ட விசுவாசத்தை உடையவர்களாக இருப்பார்கள். எனவே அந்தப் பிள்ளைகள் வீட்டில் கிறிஸ்தவ முறையில் வளர்க்கப்படும் சிலாக்கியத்தை பெற்றிருப்பார்கள். இதன்

பொருள் இந்தக் குழந்தைகள் தங்கள் சுதந்திரத்தை உறுதி செய்து கொள்ள எந்த வேலையும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று படாது. கிறிஸ்தவ பெற்றோர்களின் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களின் விசுவாசத்தை தங்களுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோர்கள் ஒற்றை ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்காக பிள்ளைகளும் அதையே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதே நேரத்தில் , கிறிஸ்தவ பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகள் தேவனை பற்றி சரியான காரியங்களை அறிந்து கொள்ள உதவும் படியான பொறுப்பு உண்டு. பெற்றோர்கள் இதை பல விதங்களில் செய்ய முடியும்.

முக்கியமாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தையை போதிப்பதன் மூலமாக உதவிச்செய்ய முடியும். பிள்ளைகள் தங்கள் பெற்றோர்கள் தேவனில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிவது மாத்திரம் போதுமானதல்ல. பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வேதாகமத்தை தங்கள் வீட்டில் வைத்தும் போதிக்க வேண்டும். வேத பாட வகுப்பு மற்றும் ஆராதனைக்கு அவர்களை அழைத்துச் செல்வதன் மூலமாக தேவனுடைய வார்த்தையை கேட்கச் செய்ய வேண்டும். அதே நேரத்தில், பெற்றோர்கள் வேதாகம உண்மைகளை மாத்திரம் தங்கள் பிள்ளைகளுக்கு போதித்தால் அது போதுமானதல்ல. பெற்றோர் பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ ஜீவியத்தை பற்றி போதித்தால் மாத்திரம் போதுமானதல்ல அவர்கள் எதை போதிக்கிறார்களோ அதை நடைமுறைப்படுத்திக்காட்ட வேண்டும்.

## கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் உண்மை

★ **நாம் உயிர்த்தெழுந்த இரட்சகரை சேவிக்கிறோம் என்பதற்கு சான்றாக, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பினுடைய கல்லறை எவ்வித சந்தேகங்களுக்கும் இடமின்றி வெறுமையாக இருக்கிறது !**

★ **கிறிஸ்துவைப் பற்றிய பொய்யான சாட்சி பகர்வது நம் ஆத்துமாவை காரிருளின் பாதையில் வழிநடத்தி மிகவும் மோசமான அந்தகாரத்திற்குள்ளாக அழைத்துச் சென்றுவிடும்.**

★ **அவருடைய உயிர்த்தெழுதல் சபையின் அஸ்திபாரமாக இருக்கிறபடியால் அதை விசுவாசிப்பவர்களுக்கு அந்த நம்பிக்கை கிறிஸ்துவால் உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

# வசன ஆராய்ச்சி

(1 கொரிந்தியர் 15:50–16:4)

*Jerry Bates*

1. எவைகள் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது? (வசனம்50).
2. எப்போது மறுரூபமாக்கப்படுவார்கள்?(வசனம் 52).
3. .......................... தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்( வசனம் 52).
4. நம்முடைய சரீரங்களுக்கு என்ன நடக்கும்? (வசனம் 53)
5. மரணமே உன் .................. எங்கே? பாதாளமே உன் .................... எங்கே?( வசனம் 55).
6. மரணத்தின் கூர் எங்கே? (வசனம் 56).
7. பாவத்தின் பெலன் என்ன?
8. நாம் மரணத்தின் மீதும் பாவத்தின் மீதும் எப்படி வெற்றி சிறக்க முடியும் வசனம்58)?
9. நாம் ஜெயம் கொள்வோம் என்பதை அறிந்திருக்கிற படியால் எது நம்மை ஊக்கப்படுத்த வேண்டும் (வசனம்58)?
10. நாம் வாரத்தின் முதல் நாளிலே என்ன செய்ய வேண்டும் என்று பவுல் சொல்கிறார்? (வசனம்16:2)
11. எந்த அளவினால் நாம் கொடுக்க வேண்டும்? (வசனம்16:2).
12. அந்த காணிக்கையை கொண்டு என்ன செய்யப்பட வேண்டும்? (வசனம்16:3)
13. அந்த காணிக்கை எருசலேமுக்கு எப்படி கொண்டு போக வேண்டியது தான் இருந்தது?( வசனம் 16:3)
14. பவுல் தர்ம பணத்தை குறித்து எந்த நாட்டு சபைகளுக்கு திட்டம் தீட்டினார்? (வசனம் 16:1).

சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. 1 கொரிந்தியர் 15:50 – இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். 1 கொரிந்தியர் 15:51– எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம். 1 கொரிந்தியர் 15:52 – அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். 1 கொரிந்தியர் 15:53 – அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். 1 கொரிந்தியர் 15:54 – மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? 1 கொரிந்தியர் 15:55 – மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். 1 கொரிந்தியர் 15:56 – நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 1 கொரிந்தியர் 15:57 – ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களுமாயிருப்பீர்களாக. 1 கொரிந்தியர் 15:58 – பரிசுத்தவான்களுக்குக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். 1 கொரிந்தியர் 16:1 – நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்ண்தல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்துவைக்கக்கடவன். 1 கொரிந்தியர் 16:2 – நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும் படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களை கொடுத்து, அவர்களை அனுப்புவேன். 1 கொரிந்தியர் 16:3 – நானும் போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம் 1 கொரிந்தியர் 16:4.

வாழ்வதற்கான உபதேசம்

## எதிரிகளின் விழுதலில் களிகூருதல்

## Rejoicing at adversity

*D.Gene west*



நம் அன்றாட வாழ்வில் ஒருவருடைய எதிராளிக்கு ஏதாவது துன்பம் வரும்போது அல்லது ஏதாவது பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளும் போது மற்றவர்கள் அந்த நபரை பார்த்து என்ன ஆட்டம் போட்டான் அவனுக்கு இதுவும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டுமென்று சந்தோஷத்தில் துள்ளிக்குதிப்பதை நாம் பார்த்திருப்போம். பிறரால் பாதிக்கப்பட்டவர்கள் தீங்கிழைத்தவர்களுக்கு துன்பம் ஏற்படும் போது அதை குறித்து மகிழ்ச்சி அடைவதும், திருப்தி அடைவதும் சகஜம் தான் என்று நம்மால் யூகிக்க முடியும். நமக்கு தீங்கிழைத்தவர்களுக்கு தீங்கு நேரிடும் போது, அதைக்குறித்து மகிழ்ச்சி அடைவது துரதிஷ்டவசமாக மனித சுபாவமாக இருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், நீதியுள்ள வாழ்க்கை வாழ முயற்சிப்பவர்கள் கூட இத்தகைய காரியங்களில் ஈடுபடுவதாகும். இத்தகைய காரியங்களில் கிறிஸ்தவர்கள் ஈடுபடுவது தேவனால் தடைச்செய்யப்பட்ட பழி வாங்குதலில் ஈடுபடுவதற்குச் சமமாகும்‘பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.

அன்றியும், உன் சத்துருபசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு, நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். [ரோமர் 12: 19,20]. நம் சத்துருக்கள் விழும் போது நாம் கைகொட்டி சிரிப்பது என்பது மறைமுகமாக அவர்களை பழி வாங்குவதற்கு சமமாகும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையாகவே அச்சமாக உள்ளது.

மேற்சொல்லப்பட்ட காரியங்களில் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டுவிட்டு,சத்துருக்களை நாங்கள் ஒன்றும் பழிவாங்கவில்லையே அந்த நபர் செய்த செயல்களளுக்குத்தக்க பலன் கிடைத்தது என்று தங்கள் மனசாட்சியை சாந்தபடுத்துகிறார்கள். எல்லோருக்கும் நாம் செய்வது சரியா தவறா என்பது நன்றாக தெரியும். இங்கே வெளிப்படையான உண்மை என்னவென்றால் இத்தகைய மனப்பான்மை பாவமுள்ளதும் பரமப் பிதாவின் பார்வையிலே பிரிய மற்றதுமாகும். நம் சத்துருக்களுக்கு நேர்ந்த பரிதாபகரமான சூழ்நிலையைப் பார்த்து நாம் மகிழ்ச்சியடையாமல் அவர்களுக்காக நாம் துக்கப்பட வேண்டும், நம் சத்துக்களை சிநேகிக்க வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறாரே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்,அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (மத்தேயு 5:44,45). தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நமக்கு தீங்கிழைத் தவர்களுடைய கஷ்டத்தின் போது சந்தோஷப்படாமல்,மாறாக அவர்களுக்காக துக்கப்பட வேண்டியது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆனால் இப்படிச் செய்வது கேலிக்கூத்தானது பரிகாசத்திற்குரியது என்று மனித சுபாவம் சொல்கிறது. ஆனால், தெய்வ பக்தியோ நாம் மனித சுபாவத்தை தாண்டி கிறிஸ்துவின் சிந்தையை உடையவர்களாய் இருக்கிறோம் என்று சொல்கிறது (பிலிப்பியர் 2:5-8).

சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பாக, சாலமோன் ஞானி தேவ ஆவியினால் ஏவப்பட்டு நீதிமொழிகள் 24:17-18 வசனங்களில் இவ்விதமாய் எழுதியிருக்கிறார் ‘உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே: அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக. கர்த்தர் அதைக் காண்பார், அது அவர் பார்வைக்கு பொல்லாப்பாயிருக்கும். அப்பொழுது அவனிடத்திநின்று அவர் தமது கோபத்தை நீக்கி விடுவார். (நீதிமொழிகள் 24:17,18). மனித சுபாவத்திற்கு முற்றிலும் எதிரான, மாய்மாலம் துளி அளவும் இல்லாமல் நிறைவேற்ற கடினமான இந்தக் கட்டளையை சாலமோன் ஞானி தன்குமாரனுக்கு ஏன் கொடுக்க வேண்டும்? நான்கு காரணங்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. முதலாவது, நாம் எவ்வகையான தீமையிலும் நம்முடைய சத்துருக்களுக்கு தீமை ஏற்பட்டாலும் கூட, அதில் நாம் சந்தோஷப்பட கூடாது என்பது தேவனுடைய சித்தமமாக இருக்கிறது.

இரண்டாவது பரலோகத்தில் இருக்கிற நம் பிதாவின் குமாரர்களும் குமாரத்திளுமாய் இருப்பதற்கான வழியை இது திறக்கிறது. மூன்றாவது, இது சரீரப் பிரகாரமாகவும் ,உணர்வுபூர்வமாகவும், நிச்சயமாக ஆவிக்குரிய பிரகாரமாக ஆரோக்கியமானதாகும். இது கிறிஸ்தவர்கள் உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள் என்பதை காட்டுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்துகிறது. நான்காவது, ஒருவர் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக இருப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது அதாவது ஒருவர் தீமையை நன்மையால் வெல்லும் போது அவர் கிறிஸ்துவுக்கு ஒப்பாக இருக்கிறார் [ரோமர் 12:21].

## விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாய் இருக்கும்படி இவைகளை நாடுங்கள்!

| | |
|---|---|
| உபதேசத்தில் ஆரோக்கியம் | தீத்து 2:1 |
| விசுவாசத்தில் ஆரோக்கியம் | தீத்து 1:14 |
| கிரியையில் ஆரோக்கியம் | தீத்து 3:1 |
| ஒருமைப்பாட்டில் ஆரோக்கியம் | யோவான் 17 |
| ஆளுகை அமைப்பில் ஆரோக்கியம் | எபேசியர் 4:11 |
| ஆராதனையில் ஆரோக்கியம் | யோவான் 4:24 |
| கொடுத்தலில் ஆரோக்கியம் | II கொரி 9:7,8 |
| ஜாக்கிரதையில் ஆரோக்கியம் | II கொரி 9:2 |
| தலைமைத்துவத்தில் ஆரோக்கியம் | அப் 20:28-31 |

**நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு.** [தீத்து 2:1]

# இறுதி நியாயத்தீர்ப்பு

## The final judgement

*T pierce Brown*

மத்தேயு 7:1 ல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ‘நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். (மத்தேயு 7:1) என்று சொன்ன வாக்கியத்தை வைத்து நாம் ஒருவரையும் குற்றவாளிகள் என்று தீர்க்கக் கூடாது என்று தாராளமாக உபதேசம் உலகெங்கும் உபதேசிக்கப்பட்டு வருகிறது. ஒருவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமலேயே நித்தியமாக இரட்சிக்கப்பட முடியும் என்று வேதாகமம் நம்பிக்கையை தருவதாக உபதேசிக்கப்படும் தவறான உபதேசத்திற்கு ஆதரவாக எதையும் எழுத எனக்கு விருப்பமில்லை. (2 தெசலோனிக்கேயர் 1:7-10) வசனங்களை நாம் பார்ப்போம். அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது. ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.

நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும் (2 தெசலோனிக்கேயர் 2:1:7-10). இந்த வசனம் தேவனை அறியாதவர்களுக்கும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினை செலுத்தும் படிக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று தெள்ளத் தெளிவாகச் சொல்கிறது. இதை நாம் ஒரு இடத்தில் வலியுறுத்தி சொல்வது என்பது அவர்களை குற்றவாளிகளாக தீர்க்கலாகாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இருந்தபோதிலும், பழமைவாத சிந்தனைகளை கொண்ட நம் சகோதரர்கள் கூட இதை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பது நமக்கு அதிக வேதனையை தருகிறது. நியாயத் தீர்ப்பு எப்படி அருக்குமோ இப்படி இருக்குமோ என்று நாம் யூகங்களில் மூழ்கி விடாமல் தேவன் அந்த நியாய

தீர்ப்பை தம்முடைய குமாரனிடத்தில் தான் ஒப்பு கொடுத்திருக்கிறார் உங்களிடத்திலோ அல்லது என்னிடத்திலோ அல்ல என்பதை நாம் புரிந்து செயல்பட வேண்டும். கிறிஸ்தவர்களிடையே கூட சிலர் தேவன் மனித இனத்தின் மீது அன்பு கொண்டபடியால் நியாயத்தீர்ப்பை வைத்து தேவன் மனிதர்களை எரிநரகத்திற்கு அனுப்ப மாட்டார் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நியாயத் தீர்ப்பு என்று ஒன்று உண்டு என்பதை வேத வாக்கியங்கள் தெளிவு படுத்துகின்றன அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்.

(அப்போஸ்தலர் 17:30-31). மத்தேயு25:25ல் தனக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளை நிலத்தில் புதைத்து வைத்த ஒரு மனிதனைப் பற்றி நாம் பார்க்கிறோம். அவனுடைய எஜமான் அவனைப் பார்த்து சொன்ன வார்த்தைகளை நாம் கவனிப்போம். அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றம் அறிந்திருந்தாயே. அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது, அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக் கொள்ளுவேனே, என்று சொல்லி, அவனிடத்திலிருக்கிற தாலந்தை எடுத்து, பத்துத் தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான், இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான் (மத்தேயு 25:26-30).

நியாயத் தீர்ப்பு என்று வரும்போது நியாயாசனம் எப்படி இருக்கும்? நியாயாதிபதியாகிய கிறிஸ்து எப்படி இருப்பார்? அந்த நியாயத் தீர்ப்பு நாளை நம்முடைய கண்களால் பார்த்து அனுபவிக்க முடியுமா? இவ்வுலகிலிருந்தது அங்கே என்ன வித்தியாசமாக இருக்கும்? எது மாற்றப்படும்? போன்ற அநேக கேள்விகள் பலருக்கு எழும்பும். நியாயத் தீர்ப்பில் பூமிக்குரிய பொக்கிஷங்கள் எதுவும் இருக்காது (2 பேதுரு 3:10).

பூமியில் உள்ள மக்கள் சதா பொக்கிஷங்களை குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். நம் கர்த்தர் பூமிக்குரிய வஸ்துகளை அழிவுள்ளவைகள்

என்று அழைக்கிறார் ( 2 பேதுரு 1:18). இவ்வுலகில் ஜனங்கள் தங்களுக்கு சௌகரியம், சமாதானம், சந்தோஷம் கிடைக்க வேண்டும் என்பதற்காக சரீரப் பிரகாரமான வஸ்துக்களை தேடி அலைகிறார்கள். நாம் பூமிக்குரிய வஸ்துக்களை எப்படி கையாண்டோம் என்பதை குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். நாம் தேவனை வஞ்சித்தோமா? என்ற கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்று மாத்திரம் பதிலளிக்க வேண்டும்( மல்கியா3:8). ஆனால், எந்த ஒரு மனிதனாலும் இந்த உலகில் சேர்த்து வைத்த சம்பத்துக்களை மரியாதையும், மதிப்பும் மிக்க நியாயாசனத்தினிடத்தில் கொண்டு வரவே முடியாது. நியாயத் தீர்ப்பில் தவறான விசாரணை எதுவும் நடைபெறாது (அப் 17:31).

நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம் (ரோமர்14:10) நியாயாசனத்திற்கு முன்பாக நின்று நம்முடைய கிரியைகளை குறித்து தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். சத்தியத்தின் படி நியாயம் தீர்க்கிற, நீதியாய் நியாயந் தீர்க்கிற பட்சப் பாதமே இல்லாத பரலோகத்தில் உள்ள ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டவைகளின் படியே இயேசு கிறிஸ்து நீதியாய் நியாந்தீர்ப்பார் அப்போஸ்தலர் 17:31;1 பேதுரு4:5; வெளிப்படுத்தின விசேஷம் 2:12; நியாயத்தீர்ப்பின் போது சட்டப்படி யாரும் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க முடியாது. சட்டப் புத்தகம் மூடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டப் பின் சட்டத்தில் ஏதாவது ஓட்டையை கண்டுபிடித்து, அல்லது விசாரணையில் ஏதாவது தவறை கண்டுபிடித்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. நியாயத்தீர்ப்பின்போது எந்த இரகசியமும் இருக்காது( ரோமர் 2:16).

தேவன் ஒவ்வொரு மனிதனுடைய இரகசிய பாவங்களையும் அறிந்திருக்கிறார்( சங்கீதம் 90:8) அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் (பிரசங்கி 12:14). தேவன் தூரத்திற்கும் தேவனாய் இருக்கிறார். (எரேமியா 23:23). அவரே மறைபொருளனைத்தையும் வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார் (தானியேல் 2:22). தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களை குறித்து நியாயத்தீர்ப்பு வழங்குவார் அந்நாளிலே இது விளங்கும் (ரோமர் 2:16). அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமுமாயிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (எபிரேயர் 4:13). நியாய தீர்ப்பின் போது அழைப்பு பாடல் எதுவும் இருக்காது.

எக்காளம் ஊதப்படும் போது சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் படி யாரையும் சம்மதிக்கப் பண்ணும் படி எந்த பிரசங்கமும் பிரசங்கிக்கப்பட மாட்டாது அனலும் இல்லாத குளிரும் இல்லாத கிறிஸ்தவர்களை தக்க

வைத்துக் கொள்ள அவர்களிடம் யாரும் மன்றாடப் போவதில்லை. சபைகளில் பாடல்களை வழிநடத்துபவர்கள் இறுதியில் பாடல் ஒன்றை பாடி பாவிகளை மனம் திரும்ப அழைப்பது போன்ற ஒரு காட்சி அங்கு இருக்காது. தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நாளிலே ஏராளமான இருதயங்கள் உருகிப் போகும். கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தம் இல்லாதவர்கள் மிகவும் கலங்குவார்கள், அநேகமாக பலர் இரண்டாம் வாய்ப்புக்காக கதறுவார்கள். ஆனால், கடைசி வாய்ப்பு கிடைக்கவே கிடைக்காது. நீதியான நியாய தீர்ப்பை ஒவ்வொருவருக்கும் வழங்க நிதியுள்ள நியாயாதிபதி அங்கே இருப்பார் எல்லோரும் அங்கே கணக்கொப்புவிக்க வேண்டும். நித்திய தீர்ப்பு என்பது கிறிஸ்துவின் தியாகத்தை ஏற்றுக் கொள்வது அல்லது அதை நிராகரிப்பது ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அமையும். நியாயத்தீர்ப்பில் மன்னிப்பு அல்லது அங்கிருந்து விடுதலை என்பது சாத்தியமே இல்லாத என்பதை நாம் உணர்ந்து உலகில் வாழ வேண்டும். அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, [எபிரேயர் 9:27].

## வேதாகமத்தை அணுகும் 5 முறைகள்

1. *வேதாகமத்திலுள்ள சங்கதிகளை அறிய தொடர்ச்சியாக படியுங்கள்.*
2. *வேதாகமத்தை காலங்களாகப் பிரித்து படிக்க வேண்டும்.*
3. *தெளிவான விளக்கத்துக்காக, மாதிரி எடுத்துக்காட்டுடன் வேதாகமத்தை படிக்க வேண்டும்.*
4. *உற்சாகம் பெற வேதாகமத்தை பயபக்தியுடன் படிக்க வேண்டும்.*
5. *கொள்கை உறுதியுடன் இருக்க, வேதாகமத்தை உபதேச அடிபடபடையில் படிக்க வேண்டும்.*

வாழ்வதற்கான உபதேசம்

# பெண்கள் ஏன் சபையில் ஊழியம் செய்ய முடியாது?

# Why Can't woman serve in church?

*Jack Wilkie*

சபை வாழ்க்கையில், பிரதானமாக ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனைக்குதான் அதிக கவனம் கொடுக்கப்படுகிறது. அப்போது வேத வகுப்பின் மூலமாகவும், பிரசங்கத்தின் மூலமாகவும், அதிகமான வேதாகம கல்வி அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் சிறு கூடுகையாக கூடி. நம்முடைய ஐக்கியத்தை வெளிப்படுத்தும் நேரத்தைத் தவிர பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆராதனை வேளையில் தான் நாம் ஒருவருக்கொருவர் ஐக்கியப்படுகிறோம். அதன் காரணமாக, நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லும் வாய்ப்பும், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் வாய்ப்பும் ஞாயிற்றுக்கிழமைகளில்தான் கிடைக்கிறது [எபிரேயர் 3:13 ; கலாத்தியர்6:2].

அதைப்போல், நாம் புதிய ஆத்துமாக்களுக்கு அழைப்பு விடுத்து, அவர்கள் ஆராதனையையும், ஐக்கியத்தையும் சபையில் அனுபவித்தார்களா என்று விசாரிப்பது போன்ற காரியங்களும், பெரும்பாலான ஊழிய முயற்சிகளும் ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில், ஆராதனை வேளையில்தான் அதிலும் குறிப்பாக நடக்கின்றன என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம்.

சபையின் செயல்பாடுகள் என்று வரும்போது சபை கட்டடத்துக்குள் நடைபெறும் ஊழியங்கள் தான், அதிலும் குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் நடைபெறும் ஊழியங்கள் தான் அதிக முக்கியத்துவத்தை பெறுகின்றன. ஆனால், ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின்போது பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே உள்ளது என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். ஆனால், பெரும்பாலானோர் சபையில் பெண்கள் ஊழியம் செய்யும்படியாக தேவனால் அனுமதிக்கப்படவில்லை என்று சொல்வார்கள். நான் நேர்மை உள்ளவனாக இருந்தால் ஓரளவிற்கு அவர்கள் சொல்வதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். பெண்களின் சமத்துவத்தைக் குறித்து அதிகமாக பேசப்படும் இந்த நாட்களில் சபையில் அவர்களுடைய பங்களிப்பு அதிகமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலும், சபை கட்டிடத்தை தாண்டியும் அவருடைய பங்களிப்பு தொடர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

சபையின் 90 சதவீத பணிகள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதால் அந்த நாளில் பெண்கள் ஆண்கள் மீது ஆதிக்கம் செலுத்தத்தான் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லையே தவிர, அவர்கள் சபையில் எந்த வேலையையும் செய்யக்கூடாது என்றோ, சபையில் பெண்களுக்கு எந்தப் பங்களிப்பும் இல்லை என்றோ வேதாகமம் எங்குமே சொல்லவில்லை. நிச்சயமாக பெண்கள் சபையில் இரண்டாம் தர அங்கத்தினர்கள் அல்ல. சபையில் பெண்கள் ஆண்களுக்கு பிரசங்கிப்பதையும், ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதையும் தவிர மற்ற எல்லா வேலைகளையும் செய்ய அவர்கள் தேவனால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வேதாகமம் மிரியாம், அன்னாள் மற்றும் மரியாள் போன்ற மிகச்சிறந்த உதாரணங்கள் மூலமாக ஜெபிக்கின்ற பெண்களை குறித்தும், ஜெபத்தின் வல்லமையை குறித்தும் பதிவு செய்திருக்கிறது. நற்செய்தி நூல்கள் முழுவதும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி அவருக்கு ஊழியம் செய்த பெண்கள் அவருடைய ஊழியத்தில் முக்கியப் பங்கு வகித்திருக்கிறார்கள். அவர்கள் 12 அப்போஸ்தலர்களில் ஒருவராக தெரிந்து கொள்ளப்படா விட்டாலும்கூட மிகச் சிறந்த ஊழியத்தை செய்திருக்கிறார்கள்.

ஆவிக்குரிய மனதை உடைய முதிர் வயது உள்ள பெண்கள் தங்கள் ஞானத்தை வாலிப கிறிஸ்தவ பெண்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்படியாக கட்டளையிடப்பட்டு இருக்கிறார்கள் (தீத்து 2:4). சபையில் இளம் பெண்கள் வயதான பெண்களிடமிருந்து ஞானத்தை பெற்றுக் கொள்ள நாட்டம் செலுத்த வேண்டும். முதிர் வயதுள்ள பெண்களின் போதனை சபையில் இன்று மிகவும் அவசியப்படுகிறது.

நம்முடைய சபையின் ஆவிக்குரிய பெண்கள் துடிப்புடன் இருந்து சபை அங்கத்தினர்களின் ஜீவியங்களில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த. நாம் இந்த ஆவிக்குரிய பெண்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் அவசியமானதாகும். இணைய காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் பலவிதமான காரியங்களை கூகுளில் தேடுகிறோம். புதிய நண்பர்களை பேஸ்புக் மூலமாக இணைத்துக் கொள்கிறோம். அதேபோல ஆவிக்குரிய பிரகாரமாக உற்சாகமடைவதற்கு இணையத்தில் ஆலோசகர்களை தேடுகிறோம். எனவே, சபையில் உள்ள முதிர் வயது உள்ள ஆவிக்குரிய பெண்கள் வாலிபப் பெண்களுக்கு தேவனுடைய காரியங்களை போதிக்கத்தக்க நாம் அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும். வேதாகமத்தின்

அடிப்படையில் பெண்களால் மூப்பர்களாக முடியாது. இருந்தபோதிலும், அவர்களால் ஆத்துமாக்களை வழிநடத்தி அவர்களுக்காக அக்கறைப்பட முடியும்.

நீங்கள் தேவனுக்கு பல வருடங்கள் சேவை புரிந்த ஸ்திரீயாக இருந்தால், சபையில் ஒன்று அல்லது இரண்டு இளம் பெண்களை நீங்கள் கண்டுபிடித்து, அவர்களுக்காக ஜெபித்து, அவர்களோடு வேத வாக்கியங்களைப் படித்து, அவர்களை உற்சாகப்படுத்துங்கள். நீங்கள் ஓர் இளம் பெண்ணாக இருந்தால், உங்கள் பிராந்திய சபையில் உள்ள, முதிர் வயதுள்ள ஆவிக்குரிய ஒரு பெண்ணை கண்டுபிடித்து, அவரோடு ஆவிக்குரிய உறவை வைத்துக் கொண்டு நல்ல ஆவிக்குரிய ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு. தேவனுக்குப் பிரியமான வாழ்க்கையை வாழுங்கள். ஆரம்பத்தில் இது இரண்டு பேருக்கும் அசௌகரியமாக இருந்தாலும்கூட, நாம் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்து ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தும்போது அந்த உறவு தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்ற ஒன்றாக இருக்கும்.

மேற்சொல்லப்பட்ட காரியங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வாக இருக்கும் என்று சொல்லி நம்பும் அளவுக்கு நான் ஒரு பேதையும் அல்ல. பெண்களை சபைக்கடுத்த காரியங்களில் ஈடுபடுத்த நான் சொன்ன ஆலோசனைகளை நிறைவேற்ற பல ஆண்டுகள் எடுக்கும். ஆனால், சபையாக நாம் பெண்களின் ஞானத்தையும், திறமைகளையும் தேவனுக்காக உபயோகப்படுத்த தவறினால் நாம் தேவனுக்கு சரியாக ஊழியம் செய்யவில்லை என்றுதான் அர்த்தம். தேவனுடைய ராஜ்யத்தில் தேவ பயமுள்ள, உண்மையுள்ள, ஜெபிக்கும் பெண்கள் மிகப்பெரிய சொத்துக்களாக இருக்கிறார்கள். †

## ஆராய்ந்து பாருங்கள்

- **அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப். 17:11).**
- **வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்யஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே (யோவான் 5:39).**

## முக்கியமான வசனங்கள் மீதான துரிதமான வர்ணனை

(யாக்கோபு 5:13-18)

உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன். ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.

உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.

அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

மறுபடியும் ஜெபம் பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது (யாக்கோபு 5:13–18).

நிச்சயமாகவே, நமது ஜெபங்கள் சம்மந்தமாகவும், அதற்கான விடைகள் தேவனிடத்திலிருந்து வருவது சம்மந்தமாகவும் நாம் எப்போதும் ஒரு காரியத்தை நினைவில் கொள்ள வேண்டும். அது என்னவென்றால், நாம் இப்போது வாசித்த வசனப் பகுதி அதாவது (யாக்கோபு 5:13–18) வசனப் பகுதி அப்போஸ்தலர்களின் காலம் அதாவது அற்புதங்களின் காலத்தில் எழுதப்பட்டவைகளாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையில் நடக்கும் நன்மையான காரியங்களைப் பார்த்து என்ன ஓர் அற்புதம்! தேவன் என் வாழ்வில் அற்புதம் செய்து விட்டார் என்று ஆச்சரியத்துடன் ஜனங்கள் பேசும் வார்த்தைகளை நாம் கேட்டுக் கொண்டுத்தான் இருக்கிறோம். ஆனால், உண்மையில் நாம் வாழும் இன்றைய நாட்களில் தேவன் அற்புத அடையாளங்களைச் செய்வதில்லை.

ஏன் இந்த நாட்களில் அற்புத அடையாளங்கள் நடப்பதில்லை? வேதாகம வரலாறு முழுவதுமாக

நாம் பார்க்கும் போது அற்புத அடையாளங்கள் இரண்டு காரணங்களுக்காகவே நிகழ்த்தப்பட்டிருக்கின்றன வார்த்தையைப் பேசுகிறவர் தேவனிடத்திலிருந்து தான் வந்தவர் என்பதை நிரூபிப்பதற்காக அதாவது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர்கள்,இன்னும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் சிலர் தாங்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக தேவன் அவர்களுக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையை கொடுத்திருந்தார். (2) அவர்களுடைய செய்திகள் தேவனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டவைகள் என்பதை நிரூபிப்பதற்காக..

இன்றைய நாட்களில் தேவன் புதிதாக செய்திகளையோ அல்லது செய்தியை சுமந்து வருபவர்களையோ அனுப்புவதில்லை. அதன் காரணமாக இன்றைய நாட்களில் அற்புத அடையாளங்கள் செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. இதன் பொருள் தேவன் தம்முடைய பிள்ளைகளின் தேவைகளை தொடர்ந்து கண்காணிக்காமல் இருக்கிறார் அல்லது அறியாமல் இருக்கிறார் என்று படாது. தேவன் நிச்சயமாகவே நம்முடைய ஜெபங்களுக்கு பதில் அளிக்கிறார். ஆனால், அதை அவர் எப்படிச் செய்கிறார்? தேவனுடைய பராமரிப்பின் மூலமாகவும், சில சந்தர்ப்பங்களில் இயற்கை விதிகளின் மூலமாகவும் நம்முடைய தேவைகள் தேவனால் சந்திக்கப்படுகின்றன. நம்முடைய ஜீவியங்களில் எவைகள் அவசியப்படுகின்றன என்பதை உணர்ந்து தேவன் இயற்கையாகவே சில நன்மைகளை நமக்குக்கொண்டு வருகிறார். நாம் விசுவாசித்து நடப்பதால் முன்னோக்கிப் பார்க்கிறோம், ஆனால் சற்று நாம் பின்னோக்கிப் பார்த்தால் தேவன் நம்முடைய அநேக ஜெபங்களுக்கு பதில் அளித்திருக்கிறார் என்பதையும் தேவன் நம்முடைய ஜீவியங்களில் சகலவற்றையும் நன்மைக்கேதுவாக நடத்தியிருக்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

### பவுலின் நிருபங்களில் காணப்படுகின்ற நம்பிக்கை

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு' (பிலி 4:13)

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்.. இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது. (ரோமர்1:16)

என்னைப் பலப்படுத்துகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன். (1 தீமோ 1:12)

செயலில் கிறிஸ்தவம்

## தனியாள் சுவிசேஷம் சம்மந்தமான அறிவுரை.

## Personal Evangelism Tip: Have a simple plan

*Tom Baxley*

**த**னி நபர் ஊழியம் என்று வரும்போது யோவான் 16:12 மிக முக்கியமான வசனங்களுள் ஒன்றாக கருதப்படுகிறது. அங்கே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் இவ்விதமாய்ச் சொன்னார். இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்

(யோவான் 16:12). இந்த வசனப் பகுதியில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தை விட்டு கடந்து செல்லப் போகிறபடியால் தம்முடைய ஸ்தானத்தில் தேற்றரவாளன் வருவார் என்று சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். இருந்தபோதிலும் இங்கே முக்கிய கருத்து என்னவென்றால் என்னவெல்லாம் நடக்கும் என்பதை குறித்து இயேசு கிறிஸ்துவுக்கு தம்முடைய சீடர்களிடம் அநேக காரியங்கள் பேச வேண்டியதாக இருந்தது. ஆனால், அவர்கள் அதற்கு ஆயத்தமாக இல்லை என்பதையும் நம் இயேசு அறிந்திருந்தார். ஆகவே இயேசு கிறிஸ்து தமது சீடர்களை பாரப்படுத்தவோ, பயமுறுத்தவோ விரும்பவில்லை.

சுவிசேஷ ஊழியம் என்று வரும்போது, நாம் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் போதிக்க வேண்டும் என்று நினைக்கிறோம், அது மிகப்பெரிய தவறாகும். நாம் போதிக்கும் போது, ஒரு திட்டம் இருக்க வேண்டும், அந்தத் திட்டம் எளிமையானதாக இருக்க வேண்டும். சபை செயல்பாடுகள், இல்லம்,ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பங்குகள், கடைசி காலங்கள், சபை வரலாறு போன்றவைகளைப் பற்றி போதிப்பதற்கு நமக்கு கால அவகாசம் உண்டு அவர்களை நாம் காத்திருந்துச் செய்ய முடியும். எனவே இப்பொழுது நாம் மிக முக்கியமான காரியங்களின் மீது முதலாவது கவனம் செலுத்துவோம். அதாவது நாம் வேதாகமத்தின் அதிகாரம் மற்றும் கீழ்ப்படிதல் பற்றிய காரியங்களை முதலில் நாம் அவர்களுக்கு போதிக்க வேண்டும். நோவா நாகமான் போன்ற வேதாகம கதாபாத்திரங்களை எடுத்து இரட்சிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் தேவன் சொல்லுகிற படி செய்தால்தான் நாம் இரட்சிக்கப்பட முடியும் என்பதை அவர்களுக்கு

காட்ட வேண்டும். அதற்குப் பிறகு புதிய ஏற்பாட்டில் நாம் இரட்சிக்கப்பட தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை அவர்களுக்கு காட்ட வேண்டும்.

ஒரே வேத பாட வகுப்பில் தேவனுடைய ஆலோசனையில் எந்த உண்மையையும் மறைக்காமல் போதிப்பது என்பது முடியாத காரியமாகும். இருந்தபோதிலும், பின்னர் மனமாற்றம் அடைவதற்கு வாய்ப்பு உள்ளவர்களிடம் வேதாகம உபதேசங்களின் அடிப்படை காரியங்களை போதிப்பது என்பது அவசியமாய் இருக்கிறது. உதாரணமாக, தேவத்துவத்தில் மூவர், ஒரே சபை, கிறிஸ்தவ ஆராதனை, கிறிஸ்தவ ஜீவியம் போன்றவைகளை நிச்சயமாய் நாம் மற்றவர்களிடம் அறிவிக்க வேண்டும். அதே நேரத்தில், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர்களுக்கு அவர்கள் எந்த பாவத்தில் இருக்கிறார்களோ அதிலிருந்து மனம் திரும்பும் படி அவர்களுக்கு பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்த வேண்டும் (அப் 2:36-38).

## தேவ அன்பு

மனிதனுடைய குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற தேவநீதியை தவிர மனிதனுடன், தேவன் வைத்திருக்கும், எல்லா உறவு முறையிலும், அவருடைய அன்பைப் பெற பாத்திரமில்லாதவனுக்கும் தேவன் சந்தோஷத்தையும், வாழ்வையும் இரக்கத்தையும், அளிக்கிறார்.

வேதாகமம் ஒரு நீண்ட காதல் (அன்பு) கதை. தேவனுடைய அன்பு கடிதத்தில், தம் உள்ளத்தை திறந்து நம்மீது கொண்டுள்ள மிகச்சிறந்த பாசத்தை வெளிப்படுத்துகிறார். அவர் அன்பு நமக்கு எவைகளை எல்லாம் செய்ய வைத்தது, அது எப்படிப்பட்ட அன்பு என்பதை இந்த புத்தகத்தின் பக்கங்களை வாசிக்கும் போது அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம், கிறிஸ்தவனுடைய இருதயத்திற்கும் அன்பிற்கும், மற்ற தேவர்கள் என்று சொல்லப்படுபவர்களை பின்பற்றுவோர் இருதயத்தில் இருக்கும் அன்புக்கும் உள்ள வித்தியாசமே இதுதான். கிறிஸ்துவின் அன்பு செயல்படுகின்ற அன்பு. தன்னைக் காட்டிலும் மேலாக மற்றவனிடத்தில் அக்கறை காட்ட வேண்டும் என்பதை வலியிறுத்தும் அன்பு.

செயலில் கிறிஸ்தவம்

## வேலை செய்வதற்கு மனது

## A mind to work

*Rebecca Rushmore*



எஸ்றா மற்றும் நெகமியா புத்தகங்கள் பாபிலோனுக்கு சிறை பிடிக்கப்பட்டு போனவர்களில் மீதமானவர்கள் திரும்பி வந்து எருசலேம் பட்டணத்தையும் அங்கிருந்த தேவ ஆலயத்தையும் மறுபடியும் கட்டுவதைப் பற்றியும் பேசுகிறது . முதலில் தேவாலயம் கட்டப்பட்டது, பல வருடங்களுக்குப் பிறகு, எருசலேம் பட்டணத்தின் அலங்கங்கள் இடிந்து பாழாய்க் கிடந்தன (நெகேமியா 1:3; 2:3). நெகேமியா ராஜாவிடமிருந்து இருந்து அனுமதியை பெற்றுக் கொண்டு எருசலேமுக்குத்திரும்பினார். அவர் எருசலேம் பட்டணத்து அலங்கங்களை கட்ட ஜனங்களை ஊக்கப்படுத்தினார்.

அலங்கமெல்லாம் பாதி மட்டும் இணைந்து உயர்ந்தது. ஜனங்கள் வேலை செய்கிறதற்கு ஆவலாய் இருந்தபடியால் அங்கே வேலை நன்றாய் நடந்ததாக நெகேமியா குறிப்பிடுகிறார்‘ நாங்கள் அலங்கத்தைக் கட்டிவந்தோம். அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்து உயர்ந்தது. ஜனங்கள் வேலைசெய்கிறதற்கு ஆவலாயிருந்தார்கள் (நெகேமியா 4:6)

**இயேசு கிறிஸ்துவுக்கு வேலை செய்கிறதற்கு மனதிருந்தது.**

ஜனங்கள் எருசலேம் பட்டணத்தின் அலங்கங்களை திரும்பக் கட்ட மனதாய் இருந்தது போல நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் வேலை செய்வதற்கு மனதாய் இருந்தார். சுவிசேஷ புத்தகங்கள் இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் முதல் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதல் வரை அவர் செய்த கிரியைகளை பதிவு செய்கின்றன (மத் 3:13-17;27:38-28:20; அப் 1:3-11). நம்மாண்டவராகிய இயேசு கிறிஸ்து மூன்று வருட காலம் சுற்றித்திரிந்து மனம் திரும்புதலுக்கான அவசியத்தை பற்றி போதித்து, வரவிருக்கும் ராஜ்யத்தை குறித்து யாரெல்லாம் கேட்க விரும்பினார்களோ அவர்களை ஆயத்தப்படுத்தும் வேலையை செய்து கொண்டிருந்தார். அவர்தம்முடைய சீஷர்களிடம் இவ்விதமாய் சொன்னார்.

தம்முடைய சீஷர்களை நோக்கி: ‘அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். [மத்தேயு 9:37-38]. மேலும், [லூக்கா 10:2; யோவான் 4:35] போன்ற வசனங்களில் இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்கள் ராஜ்யத்தில் வேலை செய்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பியிருக்கிறார். அதாவது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் இருந்தபோது இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் எந்த மே செய்தாரோ அதே வேலையை அவருடைய சீஷர்களும் செய்ய வேண்டும் என்று விரும்பினார் இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்

**ஆதிதிருச்சபைக்கு வேலை செய்கிறதற்கு மனதிருந்தது.**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், எருசலேமின் அலங்கத்தை மறுபடியும் கட்டி எழுப்புவதற்கு அந்த ஜனங்களுக்கும் எப்படி வேலை செய்வதற்கு மனதிருந்ததோ அதேபோல ஆதித்திருச்சபைக்கும் வேலை செய்வதற்கு மனதிருந்தது. சபை ஆரம்பிக்கப்பட்ட பிறகு ஆதி கிறிஸ்தவர்கள் என்ன செய்தார்கள் என்பதை [அப் 2:42] பதிவு செய்கிறது அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் [அப் 2:42]. சில வசனங்களுக்குப் பிறகு நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம் தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார் [அப் 2:47]. இரட்சிப்பு தேவனுடைய வார்த்தையை கேட்பதினாலும் [ரோமர் 10:17], ஞானஸ்நானத்தில் கீழ்படிவதினாலும் [அப் 22:16] உண்டாகிறபடியால் எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு போதிப்பதற்கு அவர்கள் இணைந்து வேலை செய்தார்கள். சபை தொடர்ந்து வளர்ந்து கொண்டே இருந்தது [அப்.6:1]. பின்னர் துரிதமாகவே உபத்திரவம் கிறிஸ்தவர்களை சிதறடித்தது. எருசலேமில் உண்டான உபத்திரவத்தின் நிமித்தம் சிதறடிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தை பிரசிங்கத்தார்கள் [அப் 8:4].

2 தீமோத்தேயு மற்றும் பிலேமோன் நிருபத்தின் கடைசி வசனங்கள் கர்த்தருக்காக பரபரப்பாக வேலை செய்த கிறிஸ்தவர்களுக்கு நன்றி செலுத்தும் விதமாக அமைந்திருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வேலை செய்வதற்கு மனதிருந்தது.

பவுல் கர்த்தருக்காக வேலை செய்தவர்களை பாராட்டினது மாத்திரமல்லாமல் அவரும் வேலை செய்வதற்கு தனக்கு மனதிருந்ததை

வெளிப்படுத்தினார். அவருடைய முதல் ஊழியப் பயணம் அப்போஸ்தலர் 13–14 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. பவுலின் இரண்டாம் ஊழியப் பயணம் அப்போஸ்தலர் 15:36–18:22 வசனப் பகுதியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது . சபைகளுடன் இணைந்து அவர் செய்த மூன்றாவது ஊழிய பயணத்தை பற்றி அப்போஸ்தலர் 18:23; 19:1–21:15 வசனப் பகுதிகளில் நாம் வாசிக்க முடியும். மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை போதிக்கிற வேலையை பவுல் சோர்வடையாமல் தொடர்ந்து செய்தார், சூழ்நிலைகள் எதிராக இருந்த போதிலும் கூட அவர் அந்த வேலையை கைவிடவே இல்லை.2 கொரிந்தியர் 11:22–28 வசனங்களில் பவுல் கர்த்தருக்காக வேலை செய்ததற்காக என்ன பாடுகள் எல்லாம் அனுபவித்தார் என்பதை பற்றி ஒருவர் வாசிக்க முடியும். கடைசி நாட்களை நெருங்கும் போது தான் கர்த்தருக்காகப்பட்ட கஷ்டங்கள், பாடுகள் ,ஒன்றும் வீணாகப் போகவில்லை என்பதை அறிவிக்கிறார்' ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.

நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2தீமோத்தேயு 4:6–8).

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு வேலை செய்கிறதற்கு மனதிருக்க வேண்டும்.

பவுலின் எழுத்துக்கள் ஆதித்திருச்சபை வேலை செய்கிறதற்கு ஆயத்தமாக இருந்தது என்பதை காட்டுகின்றன.(பிலிப்பியர் 2:25–30) ல் பவுல் எப்பாபிரோதீத்து என்பவரை பற்றி எழுதியிருக்கிறார் இந்த நபர் பவுலுடன் இணைந்து ஊழியம் செய்தவர். (கொலோசெயர் 1:3–8)பட்டணத்து சபை கனி கொடுத்தது . ரோமாபுரி சபையின் விசுவாசம் உலகெங்கும் பிரசித்தமானது( ரோமர் 1:8).பவுல் தெசலோனிக்கேய பட்டணத்துக்கு எழுதிய முதல் நிருபம் இந்த சபை விசுவாசிகளின் விசுவாச கிரியை மற்றும் அன்பின் பிரயாசம் போன்றவைர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடங்குகிறது (1:2–3). ரோமர் 1 கொரிந்தியர் , எபேசியர், பிலிப்பியர்,கொலோசெயர்

நாம் ஏற்கனவே பார்த்த சில உதாரணங்களைப் போல இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு வேலை செய்கிறதற்கு மனதிருக்க வேண்டும். மத்தேயு 28:18–20 இவ்விதமாய்ச் சொல்கிறது அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால்,

நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்

(மத்தேயு 28:18-20). இந்த கட்டளை நேரடியாக அப்போஸ்தலர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட (2 தீமோத்தேயு 2:2) போன்ற வசனங்களை நாம் வாசிக்கும்போது இக்கட்டளை இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்பது புரிகிறது. மத்தேயு 28 ல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்போஸ்தர்களிடமும், நம்மிடமும் மற்றவர்களை ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படியத்தக்க வகையில் அவர்களுக்கு போதிக்க வேண்டும் எந்த கட்டளையிடுகிறார். இயேசுவின் கட்டளை அங்கேயே நின்று விடவில்லை. ஞானஸ்நானத்திற்குப் பிறகும் நாம் கிறிஸ்து கட்டளையிட்ட எல்லாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசிக்க வேண்டும் என்று சொல்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல்1 கொரிந்தியர் 3 ல் அந்த சபையார் பெலன் இல்லாதவர்களானதால் அவர்களுக்கு போஜனம் கொடாமல் பாலை குடிக்க கொடுத்ததாகச் சொல்கிறார் அதாவது ஆழமான சத்தியங்களுக்கு பதிலாக அடிப்படை போதனைகளை அவர்களுக்கு போதித்ததாக பவுல் சொல்லுகிறார்.

மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன். இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக் குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?

ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா? (1 கொரிந்தியர் 3:1-4). எபிரேய ஆசிரியரும் கூட தாம் அந்த நிருபத்தை யாருக்கு எழுதினாரோ அவர்களிடம் இதே கருத்தை எதிரொலிக்கிறார் ‘காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள்.

பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும் (எபிரேயர் 5:12-14).

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களின் முதல் வேலை தேவனுடைய வார்த்தையை படிப்பது தான், அதைத் தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு போதிக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் தாங்கள் வேலை செய்கிறதற்கு மனதாயிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதற்கு அநேக வழிகள் உண்டு. அதற்கு ஓர் உண்மை உள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிப்பது ஒரு நல்ல தொடக்கமாகும்( 1 தீமோத்தேயு 4:12; யாக்கோபு 1:27; வெளிப்படுத்தின விசேஷம் 2:10). ஒவ்வொரு பிராந்திய சபையிலும் வேலை செய்வதற்கு மனதுள்ள அங்கத்தினர்கள் அவசியப்படுகிறார்கள். சபையின் ஆளுகை அமைப்பு தேவ சித்தத்தின்படி ஏற்பட தகுதி உள்ள மூப்பர்களும் விசுவாசம் உள்ள மனைவிகளும் அவசியப்படுகிறார்கள்

(அப்போஸ்தலர் 14:23; 1 தீமோத்தேயு 3:1-7; தீத்து 1:5-9). பல சபைகளில் ஆண்களுக்கும் வாலிபர்களுக்கும் போதிப்பதற்கு தகுதியான சகோதரர்கள் இல்லாத காரணத்தினாலும்,பெண்களுக்கும் ,குழந்தைகளுக்கும் போதிப்பதற்கு தகுதியான சகோதரிகள் இல்லாதது மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தனிமையில் இருப்பவர்களுக்கு உணவு கொண்டு போகும் வேலையாக இருந்தாலும் சரி, வியாதியஸ்தர்களை போய் சந்தித்தாலும் சரி, கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியாக இருந்தாலும் சரி, இத்தகைய வேலைகளில் நாம் ஈடுபடும்போது அது கர்த்தருக்காக நாம் வேலை செய்ய மனதாய் இருக்கிறோம் என்பதைத் தான் காட்டுகிறது.

எருசலேம் பட்டணத்தின் அலங்கங்களை கட்டுவது என்னும் மாபெரும் பணியை செய்து முடிக்க நெகேமியாவும் ஜனங்களும் ஒன்றிணைந்து வேலை செய்தார்கள். இயேசு கிறிஸ்துவும், ஆதி திருச்சபையும், அப்போஸ்தலனாகிய பவுலும் வேலை செய்வதற்கு தங்களுக்கு மனதிருந்ததை வெளிப்படுத்தினார்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வேலை செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். பவுலும் கூட கிறிஸ்தவர்கள் தான் கிறிஸ்துவை பின்பற்றினது போல தன்னைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார் (1கொரிந்தியர் 11:1;1 பேதுரு2:21). இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு வேலை செய்ய மனதிருந்தால் தேவனுடைய வார்த்தை உலகெங்கும் பரவும், சபை அபரிதமான வளர்ச்சியை அடையும் (1 கொரிந்தியர் 3:6).

# ஆராதனையின் இருதயம்

## The heart of worship

*Gary C Hampton*

**ப**ரிசுத்தவான்கள் ஒன்று கூடுவது என்பது ஆராதனையின் ஓர் அவசியமான அம்சமாகும். ஆராதனை என்பது பிதாவை துதிக்கும்படியாக தேவனுடைய குடும்பம் ஒன்று கூடும் ஒரு நேரமாகும். ஓர் ஆராதனை தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் அது ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டும் (யோவான் 4:24).

நம் இருதயங்கள் பரிசுத்தத்தால் நிறைந்திருக்க வேண்டும். சங்கீதக்காரன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தில் கைகளில் சுத்தமுள்ளவனும் ,இருதயத்தில் மாசில்லாதவனும்தான் பிரவேசிக்க முடியும் என்று சொல்கிறார் (சங்கீதம் 24:3,4) 'யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?

கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே (சங்கீதம் 24:3,4). தேவன் யாக்கோபை பெத்தேலுக்கு போகக் கட்டளையிட்ட போது அது யாக்கோபை இவ்விதமாய் சொல்ல வைத்தது ***அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரையும் தன்னோடேகூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களிடத்தில் இருக்கிற அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்*** (ஆதியாகமம் 35:2). சங்கீதக்காரனாகிய தாவீதும் தன் பாவத்தை உணர்ந்த போது தேவனிடத்தில் சுத்த இருதயத்தை தன்னிலே சிருஷ்டிக்கும்படியாக மன்றாடுகிறார் (சங்கீதம் 51:10).

நம் இருதயங்கள் தாழ்மையில் பணிய வேண்டும். ஒரு பாடகர் இவ்விகிதமாய் அறிவித்தார் 'நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து. உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்ளுவேன் (சங்கீதம் 5:7).

அப்போஸ்தலனாகிய பேதுருவும் சிதறிப்போன கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது 'தேவனுக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள் என்று கட்டளையிட்டார்அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் [1 பேதுரு 5:5]. தேவனுடைய பரிசுத்த தன்மையை உணர்ந்த ஆபகூக் இவ்விதமாய்ச் சொன்னார் கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது [ஆபகூக் 2:20].

நம்முடைய இருதயங்களிலிருந்து தேவனை துதித்துப் பாட வேண்டும். நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன். [சங்கீதம் 7:17]. மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் தேவன் எகிப்தின் சேனையை அந்த செங்கடலில் மூழ்கடித்த பிறகு மகிழ்ச்சியால் துதித்துப் பாடினார்கள். மிரியாமும் அவளோடிருந்த பெண்களும் சர்வ வல்லவரை துதித்துப் பாடினார்கள் [யாத்திராகமம் 15:1-2, 21]. யாராவது நம்மிடம் வந்து கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று சொன்னால் நாம் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் [சங்கீதம் 122:1]. நம்முடைய இருதயங்களில் இருந்து தேவனை துதித்து பாடுவது என்பது நமக்கு கிடைக்கும் ஓர்அற்புதமான வாய்ப்பாகும். ✝

**உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.**

**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும்**

ஆராதனை

# புதிய ஏற்பாட்டு கொடுத்தலும் பழைய ஏற்பாட்டு தசமபாகமும்

# New testament Giving versus old Testament Tithing

*Brian R. Kenyon*

ஒரு பிரசங்கியாரிடம் நீங்கள் ஏன் தசம பாகத்தைப் பற்றி பிரசிங்கிக்க வில்லை என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அந்த பிரசங்கியார் நாம் தசம பாகத்தைப் பற்றி பிரசிங்கத்தால் அது காணிக்கையை கடுமையாக குறைத்து விடும் என்று பதிலளித்தார். அந்த பதில் பலருடைய புருவங்களை உயர்த்தியது. இங்கே அவருடைய கருத்து என்னவென்றால் இந்த பிரசிங்கியார் பிரசிங்கத்த சபையிலே அங்கத்தினர்கள் தங்கள் வருமானத்தில் பத்து சதவீதத்திற்கும் மேலாக கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான். ஆனால், பெரும்பாலான சபைகள் இந்த பட்டியலுக்குள் வருவதில்லை. சிலர் கிறிஸ்துவின் சபைகளில் அங்கத்தினார்கள் தங்கள் மொத்த வருமானத்தில் 5-7 சதவீதம் கொடுக்கிறார்கள் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள் . வேறு சிலரோ அவ்வளவெல்லாம் இல்லை சரியாகச் சொல்ல வேண்டுமென்றால் 2-3 சதவீதம் தான் கொடுக்கிறார்கள் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். சில அங்கத்தினர்கள் இவ்வளவு குறைவாக கர்த்தருக்கு காணிக்கை கொடுப்பதால் தான் கர்த்தருடைய வேலையை விரிவாகச் செய்ய போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாதபடியால் பல சபைகள் சிரமப்படுவதை நாம் பார்க்க முடிகிறது. சபை அங்கத்தினர்கள் தங்கள் வருமானத்தில் பத்து சதவீதம் கொடுத்தால் கூட கர்த்தருடைய சபைகளில் காணிக்கை குறைந்தபட்சம் இரட்டிப்பாகும். இத்தகைய சூழ்நிலையில் தான் ஒரு கேள்வி நம் மனதில் எழுகிறது. அந்தக் கேள்வி தசம பாகத்தை பற்றித்தான். எனவே பழைய ஏற்பாட்டு தசமபாகத்தையும் ,புதிய ஏற்பாட்டு கொடுத்தலையும் ஒப்பிட்டுப் பார்ப்பது நமக்கு பிரயோஜனம் உள்ளதாயிருக்கும்.

## பழைய ஏற்பாட்டு தசமப்பாக முறை

தசமபாகம் முறை சீனாய் மலையில் மோசேக்கு பிரமாணங்கள் கொடுக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பாகவே இருந்து வந்திருக்கிறது. பழங்கால வரலாற்றில் பல தேசங்கள் சொத்து,விளைச்சல் ,மற்றும் பணப்பரிவர்த்தனையில் தசமப்பாக முறைகளை பின்பற்றி இருக்கின்றன. விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம் மெல்கிசெதேக்கு தசம பாகம் கொடுத்ததை நாம் ஆதியாகமம் 14:17-20 வசனங்களில் வாசிக்க முடியும். யாக்கோபும் கூட தேவரீர்

எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்கு தசமபாகம் செலுத்துவேன் என்று பொருத்தனை பண்ணிக் கொண்டதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (ஆதியாகமம் 28:20-22). மோசேயின் பிரமாணம் முழுவதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் இஸ்ரவேலர்கள் கிட்டத்தட்ட முப்பது சதவீதம் தசம பாகம் கொடுத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. மூன்று வித்தியாசமான தசமபாகங்கள் இருந்திருக்கின்றன. முதலாவது, சுதந்திரம் கொடுக்கப்படாத தேவர்களை ஆதரிக்கும் படியாக இஸ்ரவேலர்களால் கொடுக்கப்பட வேண்டிய தசமப்பாகம் என்னாகும்18:20-32; இரண்டாவது, கர்த்தருக்கு பரிசுத்தமான நிலத்தில் இருந்து கொடுக்கப்பட வேண்டிய தசமபாகம் (லேவியராகமம் 27:30-33). மூன்றாவது, வருஷந்தோறும் இஸ்ரவேலர்கள் விதைக்கிற விதைப்பினாலே வயலின் வழியையும் எல்லா பலனிலும் தசமப் பாகத்தை கொடுக்க வேண்டும் (உபாகமம் 14:22-29).

யூத வரலாற்று ஆசிரியரான josephus என்பவர் யூதர்கள் தசமபாகம் கொடுத்த விதத்தைப் பற்றி தன்னுடைய புத்தகத்தில் விரிவாக எழுதியிருக்கிறார். வேத எழுத்துக்களை நாம் ஆராய்ந்து பார்க்கும் பொழுது தேவனுடைய ஜனங்கள் தேவனுக்கு தசமபாகம் கொடுத்திருந்தாலும் கூட அது தசம பாகத்தை குறைந்தபட்சம் இரண்டு விதங்களில் தவறாக பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் காண முடியும். அவர்கள் தசம பாகம் கொடுத்தார்கள். ஆனால், நீதி நியாயம் இரக்கம் போன்றவைகளைப் பற்றி எந்த அக்கறையும் இன்றி கொடுத்தார்கள். (ஆமோஸ் 4:4). தசம பாகமானது தேவன் மீதான அன்பு மற்றும் சக சகோதரர்கள் மீதான அன்பு நிமித்தமாக கொடுக்கப்பட வேண்டும் உபாகமம் 14:23,26 28-29. ஆனால், தசம பாகம் தவறான நோக்கத்தில் கொடுக்கப்படுமானால் அது கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கும், இரண்டாவது கர்த்தருடைய ஜனங்கள் தசம பாகம் கொடுக்க வேண்டிய அளவுக்கு கொடுக்காமல் கைகளை இறுக்கமாக வைத்துக் கொள்ளும் போது அது தேவனிடமிருந்து திருடினதாக கருதப்படும் அல்லது தேவனை வஞ்சித்ததாக கருதப்படும் (மல்கியா 3:8-10). தேவனுடைய ஜனங்கள் தேவனுக்கு கொடுக்க வேண்டிய காரியத்தில் தொடர்ந்து அவரை வஞ்சித்தால் அது அவருக்கு அருவருப்பாயிருக்கும் அது மாத்திரமல்லாமல் ஆசீர்வாதங்களை அவர் நம்மிடமிருந்து திரும்பப் பெறுவதற்கு அது சூழ்நிலைகளை அமைத்து விடும். நியாயப்பிரமாணத்தின் கீழ் தசம பாகம் இஸ்ரவேலர்களுக்கு கீழ்காணும் வாய்ப்புகளை கொடுத்தது தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட வைகளிலிருந்து ஒரு சிறு பகுதியை மறுபடியும் தேவனுக்கு கொடுக்கிறோம் என்பதை அறிவிப்பதற்கு உபாகமம் ( 8:18;26:10-15);(2) திக்கற்றவர்களுக்கும் ,பரதேசிகளுக்கும் கொடுப்பதன் மூலமாக தேவனுடைய ஆசிர்வாதங்களை நினைவு கூருவதற்கு

(உபாகமம் 14:28,29). விலை கொடுத்து தேவனுக்கு தியாகப்பூர்வமாக சேவை செய்வதற்கு (உபாகமம் 14.22).

## புதிய ஏற்பாட்டு கொடுத்தல்

நாம் இப்போது மோசேயின் பிரமாணமாகிய தசமபாகம் உட்பட எந்த ஒரு பிரமாணத்தின் கீழும் இல்லை (ஆதியாகமம் 3:24,25;கொலோசெயர் 2:14). இருந்தபோதிலும், நாம் தசம பாகம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதற்காகவே நாம் உற்சாகமாக கொடுக்க வேண்டிய பொறுப்பை தட்டிக் கழிக்க முடியாது. நாம் உதாரணத்துவோமாய் கொடுக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு கட்டளையிடுகிறது (ரோமர் 12:8; 2 கொரிந்தியர் 8:2;9:11-13). புதிய ஏற்பாட்டு உதாரணங்கள் நாம் 10 சதவீதத்திற்கும் மேல் கொடுக்க வேண்டும் என்பதைக்காட்டுகின்றன. அந்த ஏழை விதவை தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த எல்லாவற்றையும் காணிக்கையாக போட்டபடியால் அவள் நன்றாய் கொடுத்ததாக இயேசு கிறிஸ்து அந்த விதவையை மெச்சுகிறார் (மாற்கு 12:44). இயேசு கிறிஸ்து அந்த பணக்கார வாலிபனிடம் நித்திய ஜீவனை சுதந்தரிக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னதை கவனியுங்கள் (லூக்கா 18:22) இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு, உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும், பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார் (லூக்கா 18:22). எருசலேம் சபை தங்களுக்கு உண்டானவைகள் எல்லாமே தங்களுடையவைகள் அல்ல என்பதை உணர்ந்து, நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவர்களின் கிரயத்தை கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள்.விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை, சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள், அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. (அப்போஸ்தலர் 4:32-35). மக்கதோனிய நாட்டு சபையார் மிகுந்த உபத்திரவத்திலும் கொடிய தரித்திரத்தில் இருந்த போதிலும் கூட ,உதாரத்துவமாய்க் கொடுத்திருப்பது கொடுத்தலுக்கான மிகச் சிறந்த உதாரணமாகும்( 2 கொரிந்தியர் 8:1-5). நாம் பார்த்துக் கொண்டிருக்கின்ற உதாரணங்கள் எல்லாம் கர்த்தருக்காக

கொடுத்தவர்களின் மாபெரும் தியாகத்தை பிரதிபலிக்கிறது. அப்படி என்றால் இன்றைய நாட்களில் வாழும் நாம் அதைவிட எப்படி குறைவாக கொடுக்க முடியும்?

## இன்றைய வசன அடிப்படையிலலான கொடுத்தல்

நம் கொடுத்தலை ஆளுகை செய்ய வேண்டிய சில விதிகளை கவனித்து விட்டு நாம் இந்தப் பாடத்தை குறித்த ஒரு முடிவுக்கு வருவோம். முதலாவது, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர் மீதான நம் அன்பின் உண்மையை சோதிக்கும் பொருட்டு இத்தனை சதவீதம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பாக சொல்லவில்லை (2 கொரிந்தியர் 8:8). இரண்டாவது, தேவன் நாம் விசனமாயும் அல்ல கட்டாயமாகவும் அல்ல உற்சாகமாயய் அவருக்கு காணிக்கை கொடுக்க வேண்டும் என்று தான் விரும்புகிறார்( 2 கொரிந்தியர் 9:7). ஆம் காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதற்காக கொடுக்கிறோமோ அல்லது உற்சாகமாய் கொடுக்கிறோமா?. மூன்றாவது, தேவனால் ஏற்றுக்கொள்ளத்தக்க காணிக்கையானது கொடுப்பவரின் பங்கில் தியாகத்தை அவசியப்படுத்துகிறது (2கொரிந்தியர் 8:5). இதற்கு மிகச் சிறந்த உதாரணம் சங்கீதக்காரனாகிய தாவீது தான் .'ராஜா அர்வனாவைப் பார்த்து: அப்படியல்ல. நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தாமல், அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேன் என்று சொல்லி, தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் நிறை வெள்ளிக்குக் கொண்டான் (2 சாமுவேல் 24:24). நம் தேவனுக்கு தியாகப் பூர்வமாய் கொடுக்கிறோமோ அல்லது மீதமானவைகளை கொடுக்கிறோமா. நான்காவது, நம் வரவுக்குத்தக்கதாக நாம் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம் ( 1 கொரிந்தியர் 16:2). பொருளாதார ரீதியாக நம் வருமானம் உயரும்போது நம் காணிக்கையை உயர்த்துகிறோமா? ஐந்தாவது, நாம் உதாரணத்துவமாய் கொடுக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார் ( 2 கொரிந்தியர் 9:11). இன்றைய நாட்களில் நாம் கொடுப்பதை தேவன் உதாரத்துவமாய் கருதுகிறாரா அல்லது காணிக்கை காரியத்தில் நாம் அவரை வஞ்சிக்கிறோமா? கொடுத்தல் என்பது நம் ஆத்து மரட்சிப்புக்கும் பிராந்திய சபைக்கும பிரயோஜனமாய் இருக்கிறபடியால் புதிய ஏற்பாடு எப்படி நமக்கு கட்டளையிடுகிறதோ அதன்படி கொடுப்போமாக!

# நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்கள்

சிமிர்னா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: முந்தினவரும் பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர் சொல்லுகிறதாவது, உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே, இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிற தைக் காதுள்ளவன் கேட்கக்கடவன், ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது. [வெளி 2:8-11].



அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்.

அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன், அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள், நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.

*[வெளிப்படுத்தின விசேஷம் 20 : 4,5].*

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1 **கொரிந்தியர்** 15:51). எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம் (1 **கொரிந்தியர்** 15:52). அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். (1 **கொரிந்தியர்** 15:53) அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். (1**கொரிந்தியர்** 15:54) மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? (1 **கொரிந்தியர்** 15:55) மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். (1 **கொரிந்தியர்** 15:56) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். (1 **கொரிந்தியர்** 15:57) ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களுமாயிருப்பீர்களாக. (1**கொரிந்தியர்** 15:58) பரிசுத்தவான்களுக்குக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். (1 **கொரிந்தியர்** 16:1) நான் வந்திருக்கும்போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்துவைக்கக்கடவன். (1**கொரிந்தியர்** 16:2) நான் வரும்போது உங்கள் உபகாரத்தை எருசலேமுக்குக் கொண்டுபோகும் படிக்கு, நீங்கள் தகுதியுள்ளவர்களாகக் குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களிடத்தில் நிருபங்களை கொடுத்து, அவர்களை அனுப்புவேன். (1 **கொரிந்தியர்** 16:3) நானும் போகத்தக்கதானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம் (1 **கொரிந்தியர்** 16:4).

**இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார் (1 பேதுரு 2; 21).**

சபை

## சபையின் தெய்வீக ஆரம்பம்

## The divine origin of the church

*Ed Melott*

சபை என்பது எல்லை இல்லா ஞானத்தை கொண்ட தேவனுடைய மனதில் ஆரம்பமான ஒன்றாகும். குறைந்த அறிவுடைய மனிதனால் இந்த அமைப்பை உண்டாக்கியிருக்கவே முடியாது. அதனால் தான் எரேமியா இவ்விதமாய்ச் சொன்னார் ‘கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

(எரேமியா 10:23). நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாதத் தருகில் சுமார் மூன்றரை ஆண்டுகள் அமர்ந்திருந்த பிறகும் கூட கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களுக்கு சபையின் தெய்வீக ஆரம்பத்தைப்பற்றிய சரியான புரிந்து கொள்ளுதல் இல்லாதிருந்தது. அதனால்தான் நம் கர்த்தரிடம் இவ்விதமாய் அவர்கள் கேட்டார்கள் அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி; ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.

(அப்போஸ்தலர் 1:6). அதற்கு நம் கர்த்தர் இவ்விதமாய் பதிலளித்தார். அதற்கு அவர்; பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:7,8). மேலும், அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சபை அல்லது ராஜ்யத்தின் மகிமையான ஆரம்பத்தைப் பற்றி நாம் பார்க்கிறோம். அது மாத்திரமல்ல, (மத்தேயு 16:18,19) வசனங்களை நாம் பார்க்கும் போது இவ்விதமாய் நாம் பார்க்கிறோம் ***மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன்,‘ நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.***

***பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன், பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.*** இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு வந்த பெந்தேகோஸ்தே நாளில் முதன்முதலாக சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அந்தநாளிலேயே ஏறக்குறைய 3000 பேர் கர்த்தருக்கு கீழ்படிந்தார்கள்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளான ஏசாயா தானியேல் மற்றும் யோவேல் போன்றோர் இந்த நாளை குறித்து முன்னறிவித்தி ருக்கிறார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தம்முடைய சபை அல்லது ராஜ்யத்தை கட்டுவதாக வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். மேலும், அவர் தம்முடைய அப்போஸ்தலரிடம் இங்கே நிற்பவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்ஜியம் பலத்தோடு வருவதை காணும் முன் மரணத்தை ருசி பார்ப்பதில்லை என்று சொல்லியிருந்தார் (மாற்கு 9:1). அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்ற போது பெலனடைந்தார்கள். பரிசுத்த ஆவியாகிய தேற்றவாளன் எல்லாவற்றையும் அப்போஸ்தலர்களுக்கு போதித்து கிறிஸ்தவர்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டினார் (யோவான்4:26; 16:13).

அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்ட போது பற்பல பாஷைகளை பேசினார்கள். உலகத்தின் பல தேசங்களிலிருந்து வந்தவர்கள் அதைக் கேட்டு ரட்சிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 2).

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை அறிவித்து கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து அவருடைய ராஜ்யத்தை ஆலுகை செய்து கொண்டிருக்கிறார் என்பதை வேத வாக்கியங்கள் மூலமாக விளக்கிக் காட்டினார்கள். (அப்போஸ்தலர் 2:29-33) வசனங்களில் நாம் இதை வாசிக்க முடியும்.

இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே விலைக்கு வாங்கின சபை அவருடைய ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது. சரீரம் பல அங்கத்தினர்களை உள்ளடக்கியதாகும். ஒவ்வொருவருடைய கரங்களிலும் இழந்து போனதை தேடவும் பயன்படுத்தப்படும் சுவிசேஷம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான சபைகள் இழந்து போனவர்களை தேட ஏதோ ஒரு யுத்தியை பயன்படுத்துகிறார்கள். தொலைக்காட்சி, சுவிசேஷக் கூட்டங்கள்

போன்றவைகள் அதில் உள்ளடக்கம். தேவன் சபையை ஊழியம் செய்கிற ஒன்றாக இருக்கும்படி வடிவமைத்திருக்கிறபடியால் இழந்து போனவர்களை சந்திக்கும்படியான ஒவ்வொரு வாய்ப்பும் சரியாக பயன்படுத்தப்பட வேண்டும்.

கர்த்தருடைய மரணத்திற்குப் பிறகு பெந்தேகோஸ்தே நாளிலே எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்ட கர்த்தருடைய சபை (மத்தேயு 16:18) இவ்வுலகில் இருப்பதற்கும், நிலைத்திருப்பதற்கும் அவசியமான எல்லாவற்றையும் பெற்றிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்விதமாய் எழுதினார் ***நம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*** (2 பேதுரு 1:3,4). சபை அவருக்குள் பரிபூரணமாயிருக்கிறது (கொலோசெயர் 2:10). சபை உண்மையாகவே அதன் ஆரம்பத்தில் தெய்வீகத் தன்மையுடையதாய் இருக்கிறது.

# என் ஜெபம்

*நான் பெலனுக்காக ஜெபித்தேன்*
*தேவன் என்னைப் பெலப்படுத்தக் கடினமான*
*பாதைகளில் கடந்து போகும்படிச் செய்தார்.*

*நான் ஞானத்திற்காக ஜெபித்தேன்*
*தேவன் நான் தீர்வுகண்டு ஞானத்தில் தேறும்படி*
*பல பிரச்சனைகளைத் தந்தார்.*

*நான் செழிப்புக்காக ஜெபித்தேன்*
*தேவன் எனக்கு வேலைச் செய்வதற்கு தேவையான*
*மூளையையும், உடல் வலிமையையும் கொடுத்தார்.*

*நான் உதவிக்காக ஜெபித்தேன்*
*தேவன் எனக்கு வாய்ப்புக்களைத் தந்தார்*

**நான் கேட்டது எதுவுமே எனக்கு கிடைக்கவில்லை**
**இருந்தபோதிலும் எனக்குத் தேவையானதெல்லாம் கிடைத்தது.**

சபை

# சபையால் இன்னும் வளர முஜயும்

## The church can still grow

*Steve snider*

அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் சபை ஸ்தாபிக்கப்பட்டப் பிறகு, சபையில் ஏற்பட்ட அபரிதமான வளர்ச்சியை கண்டு ஆச்சரியப்படாமல் ஒருவரால் அந்த புத்தகத்தை வாசிக்கவே முடியாது அப்போஸ்தலர் [2:41,47;4 :4;5:14; 6:7]. இந்த வசனப்பகுதிகள் சபை ஆவிக்குரிய பிரகாரமாகவும், எண்ணிக்கை அடிப்படையிலும் வளர்கிறது என்பதை காட்டுகின்றன. சபையைப் பொருத்தவரை இரண்டுமே முக்கியமானது தான்! தேவன் தம்முடைய சபை விசுவாசத்தில் வளர வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை என்னற்ற வசனப்பகுதிகள் தெளிவுபடுத்துகின்றன [பிலிப்பியர் 1:9–11; கொலோசெயர் 1:9–10; 1 தெசலோனிக்கேயர் 4:9–12]. இங்கே உள்ள எண்ணிக்கை விலையேறப் பெற்ற ஆத்துமாக்களை அடையாளப் படுத்துகிறது, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது என்பதை நிச்சயமாக அறிந்திருக்கிறோம் [ 2 பேதுரு 3:9;1 தீமோத்தேயு 2:3,4]. இக்கட்டுரையின் நோக்கம் ஏதோ ஒரு குறிப்பிட்ட முறையை தூக்கிப் பிடிப்பதற்காக அல்ல ஆனால், சபை வளர வேண்டும் என்று நாம் உண்மையாக விரும்பினால், எந்தெந்த பகுதிகளின் மீது நாம் கவனம் வைக்க வேண்டும் என்பதைப் பற்றிய சில ஆலோசனைகளை வழங்குவதே நோக்கமாகும்.

முதலாவது சபை வளர முடியும் என்னும் மனப்பான்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இனிமேல் சபை வளர முடியாது என்னும் எண்ணத்தை நம் மனதில் விதைத்து ஏற்கனவே சாத்தான் மோசமான சேதத்தை நமக்குள் ஏற்படுத்தி விட்டானோ என்னும் அச்சம் எனக்குள் உள்ளது. சுவிசேஷ காரியங்களில் ஜனங்களுக்கு விருப்பமில்லை அதை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று ஏற்றுக்கொள்ள நம்மை நாம் அனுமதித்து விட்டோம் என்று தான் நான் நம்புகிறேன். சபை வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் உண்மையாகவே சபையால் வளர முடியும் என்னும் மனநிலையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். தேவனால் சபை மூலமாக இன்னும் ஆச்சரியமான காரியங்களை செய்ய முடியும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் இன்னும் ரோமர் 1:16 யை விசுவாசிக்கிறோமோ? மத்தேயு 11:28–30 யை நாம் இன்னும்

விசுவாசிக்கிறோமா? நம் வாழ்க்கை பிரச்சினைகளுக்கெல்லாம் இயேசு தான் தீர்வு என்று நாம் விசுவாசிக்கிறோமா? சுவிசேஷம் அறிவிக்கப்படாத காரணத்தால் ஜனங்கள் இழந்துபோயிருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோமா (ரோமர் 3:23; 6:23; யோவான் 14:6) . இழந்து போனவர்கள் மீது இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் எப்படி அக்கறையா இருந்தார்களோ அப்படிப்பட்ட மனநிலையை வளர்த்துக் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும் (லுக்கா 19:10; யோவான் 4:34; 9:4; அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:18-20).

இரண்டாவது நாம் சரியான செய்தியை கொண்டிருக்க வேண்டும். ஆதித்திருச்சபை எவ்விதமான செய்தியை அறிவித்தது என்று நோக்கும்போது அதிலிருந்து சில காரியங்களை கற்றுக் கொள்ள முடியும். அந்த செய்தி தேவனுடைய முழு ஆலோசனையையும் உள்ளடக்கிய ஒன்றாக இருந்தது. இதை எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் அறிவித்தார் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி, நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன் (அப்போஸ்தலர் 20:27). ஆதித்திருச்சபையின் செய்தியானது கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாகவும், ஜனங்களின் பாவங்களை கண்டித்து உணர்த்தக் கூடியதாகவும், மனந்திரும்புதலுக்கு அழைப்பு விடுக்க கூடியதாகவும், பின்பு அதற்கான தீர்வை கொடுக்கக் கூடியதாகவும் அமைந்திருந்தது. மேலும், நூற்றாண்டு செய்தி தவறான மதங்களுக்கு சவால் விடும் விதமாக அமைந்தது. அந்தச் செய்தி கிறிஸ்துவின் நிமித்தம் அநேகர் உங்களைச் தியாகம் செய்ய தூண்டக் கூடியதாகவும் அமைந்திருந்தது.

அது சமரசம் இல்லாத செய்தியாக இருந்தது. ஆதிதிருச்சபையின் செய்தி மதங்களோடு கைகோர்த்த ஒன்றாகவும் இருக்கவில்லை , எல்லா வாழ்க்கை முறையோடும் சமரசம் செய்த ஒன்றாகவும் இருக்கவில்லை . அது எல்லோரும் இரட்சிக்கப்படும் படியான செய்தியாக இருந்தது (அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:12) .

அது கிறிஸ்துவை மையப்படுத்தின செய்தியாக குறிப்பாக கிறிஸ்துவின் மரணம் அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதலை மையப்படுத்திய செய்தியாக அமைந்தது . அப்போஸ்தலருடைய நடபடிகள் (2:26; 3:14; 4:10; 5:29). ஜனங்களுக்கு நற்செய்தி அவசியமாயிருக்கிறது . இயேசு நம்மை நேசிக்கிற படியால் அவர் பரலோக மகிமையை நமக்காக விட்டுவிட்டு மரணத்தை ஜெயித்து இவ்வுலகில் நாம் சிறந்த வாழ்க்கை வாழவும் இனி வரும் உலகில் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளவும் அந்தக் கோர குருசில் தம்முடைய ஜீவனை விட்டார் என்பதை அவர்கள் அறிய வேண்டும்.

கடைசியாக ஆதித் திருச்சபையின் செய்தி அறிவிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் (அப்போஸ்தலர்8:4) . அவர்கள் தங்களிடத்தில் இருந்த நற்செய்தியை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் சுவிசேஷம் அறிவிப்பதை தங்கள் மேல் விழுந்த கடமையாக கருதினார்கள் (அப்போஸ்தலர் 4:19,20).

நாம் கடினமான காலகட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், இந்நாட்களில் ஜனங்களிடத்தில் சுவிசேஷத்தை கொண்டு செல்வது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல . இருந்தபோதிலும் ஊழியம் பெருக வேண்டும் என்னும் மனநிலையை நாம் வளர்த்துக் கொண்டால் கேட்கிறவர்களிடத்தில் எல்லாம் சுவிசேஷத்தை நாம் எடுத்துச் செல்ல முடியும், இன்னும் சபையால் மிகப்பெரிய வளர்ச்சியை அடைய முடியும் . சபை வளராது என்று சாத்தான் நம்மிடத்திலே அவிசுவாசத்தை விதைக்க அனுமதிக்காதபடி தேவன் நமக்கு உதவி செய்வாராக . நாம் வேதாகம உபதேசங்களை நடைமுறைப்படுத்தி தேவன் நம்மூலமாகவும் அவருடைய வார்த்தை மூலமாகவும் கிரியைச் செய்ய அனுமதிப்போம்.

## ஒரே முறை

இந்த உலகத்தை ஒரே முறை கடந்து செல்லப்போகிறேன். நான் செய்யத்தக்க ஒரு நன்மையிருக்குமானால் அல்லது நான் மற்றவரிடத்தில் காண்பிக்கதக்க தயை இருக்குமானால், அதை நான் இன்றே செய்வேன். அதை நான் அசட்டை செய்யவோ, தள்ளிப்போடவோ வேண்டாம். ஏனெனில் இந்த வழியில் நான் மீண்டும் செல்ல மாட்டேன்.

உன் இருதயத்தை வெறுப்பிலிருந்தும், உன் மனதை கவலையினின்றும் விடுவி. எளிமையாக வாழு, குறைவாக எதிர்பார். அதிகமாக கொடு, அடிக்கடி பாடு, எப்பொழுதும் ஜெபி. உன் வாழ்க்கையை அன்பால் நிரப்பு. சூரிய ஒளியை பரப்பு. (சுயத்தை) உன்னையே மற. மற்றவரை எண்ணிப்பார். உனக்கு நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதை நீ முதலில் செய்.

இவைகள் திருப்தி என்கிற தங்கச்சங்கிலியில் சேர்க்கப்பட்ட வளையங்கள்.

## கிறிஸ்தவ இல்லம்

# நம் விளையாட்டு வீரர்களை வளர்க்கிறோமா அல்லது கிறிஸ்தவர்களை வளர்க்கிறோமா?

# Are we Raising Athletes or Christians?

*Wes MC Adams*

நீங்கள் என்னையும், என் குடும்பத்தையும் தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தால் என் ஒன்பது வயது மகன் **Base ball** (அடிப் பந்தாட்டம்) விளையாட்டை விரும்புவான் என்பதை அநேகமாக அறிந்திருப்பீர்கள். அவன் தன் அபிமான அணிக்காக தொலைக் காட்சியை தொடர்ந்து பார்த்து, சந்தோஷத்தில் கூச்சலிடுவான் (சில வேளைகளில் மெத்தைகளில் படுத்துக் கொண்டு வானொலி மூலமாக வர்ணனையை கேட்டுக் கொண்டு இருப்பான்). அவன் தன் அபிமான அணிக்கு ஆதரவாக ஆர்ப்பரித்துக் கொண்டிருப்பான். அது மட்டுமல்ல அவன் அந்த பேஸ்பால் அல்லது அடிப்பந்தாட்டத்தைக் குறித்து பலமணி நேரம் பேசிக்கொண்டே இருப்பான். அவன் வீட்டில் கூட கையில் ஏதாவது பந்தில்லாமல் இருப்பானானால் அது அரிதான காட்சியிருக்கும். இருந்தபோதிலும், கிறிஸ்தவ குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டுத் திறமையும், விளையாட்டில் அதீத விருப்பமும் இருந்தாலும் கூட அவர்களை தீவிரமாய் கண்காணிக்க வேண்டுமென்று உறுதியாக நம்புகிறேன்.

**விளையாட்டு எனும் விக்கிரக ஆராதனை**

நம் வாழ்க்கையில் எதுவும் விக்கிரகமாக ஆக முடியும் என்று நான் நம்புகிறேன். தேவனைப் பற்றி ஒருவர் எப்படி ஆழமாக உணர்வாரோ அதேபோல் வேறொன்றிற்காக ஒருவர் ஆழமாக உணரும்போது அது விக்கிரக ஆராதனையாகி விடுகிறது. வேறு விதமாகச் சொன்னால், இந்த விக்கிரக ஆராதனையே ஒருவரை இப்பூமியில் வாழும்படியான ஆசையைத் தூண்டுகிறது. நாம் எப்படி விளையாட்டை விக்கிரக ஆராதனையாக்குகிறோம் என்பதை பார்ப்போம்.

- நாம் கட்டும் மிகப் பிரமாண்டமான விளையாட்டரங்கங்கள் பழங்கால கோயில்களிலிருந்து வித்தியாசப்படுகிறதா?
- நாம் விளையாட்டுப் போட்டிகளை பக்திப் பூர்வமாக பார்ப்பதில்லையா, கேட்பதில்லையா?
- நம் அபிமான அணி விளையாடுவதைக் காண்பது வாழ்க்கையில் எல்லாவற்றையும் விட முக்கியமாக நமக்கு இருக்கிறதா?
- நம் உணர்வுப்பூர்வமான நிலை நம் அபிமான அணியின் செயல்திறனைச் சார்ந்திருக்கிறதா?

பெரும்பாலானவர்கள் விளையாட்டுப் போட்டிகள் தங்களை வாழத்தகுதியானவர்களாக மாற்றுகிறது என்று நினைப்பது உண்மைதானே?

நான் என் மகன் **Base ball** விளையாட்டை ஒரு விக்கிரமாக கொண்டிருப்பதை விரும்பவில்லை. அதேபோல் **Base ball** விளை யாட்டை காண்கிறதற்காகவே உயிர்வாழ விரும்புவது போன்ற மன நிலையை அவன் பெற்றிருக்க நான் விரும்பவில்லை. அதேபோல் **Base ball** இல்லையென்றால் வாழ்க்கை முழுமை பெறாது என்னும் மனநிலையையும் அவன் பெற்றிருக்க நான் விரும்பவில்லை. மேலும், **Base ball** விளையாட்டு ஒரே இரவில் மறைந்து போனாலும் வாழ்க்கை யில் எல்லாம் நன்றாகத்தான் இருக்கும் என்பதை அவன் அறிய விரும்புகிறேன்.

இப்படி எல்லாம் நான் சொல்வதினால் என்னை யாரும் தவறாக எண்ண வேண்டாம். என் மகன் அந்த **Base ball** விளையாட்டை ஆசைதீர விளையாடட்டும் ஆனால், ஒரு நாளின் முடிவில் அது வெறும் விளையாட்டு தான், அது கடவுள் அல்ல என்பதை அவன் நினைவில் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**இயேசுவுக்கு முதன்மைத்துவம்**



நான் சிறுவனாக இருந்தபோது,என் தாய் நீ வாழ்க்கையில் ஒன்றைத்தான் முதன்மைப்படுத்த வேண்டுமென்று சொல்வதுண்டு. ஒருவருடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்றுதான் முதன்மை யாயிருக்க முடியும். ஏதோ ஒன்றுதான் எல்லா வற்றையும் விட முக்கியத்துவம் பெற முடியும். ஒரு தகப்பனாக நான் (**Base ball**) எங்கள் குடும்பத்தில் வேறெதும் முதன்மைத்துவம் பெறக்கூடாது என்று தீர்மானித்திருக்கிறேன்.

மத்தேயு 10:37-39 வசனங்களில் இயேசு கிறிஸ்து தம்மைப் பின் பற்றுபவர்களைப் பற்றி சொல்லும்போது இவ்விதமாகச் சொல்கிறார் **தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக் கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்கு பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்** என்று இயேசு நம்மிடம் பேசினால் அடிப்பந்தாட்டம் (**Base ball**) அல்லது கால்பந்தாட்டத்தை என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்று சொல்ல மாட்டாரா? இயேசுவும் அவருடைய ராஜ்யமும்தான் நம் வாழ்க்கையில் முதன்மைத்துவத்தை

கொண்டிருக்க வேண்டும். அதோடு ஒப்பிடுகையில் மற்றவை களையெல்லாம் குப்பைகளாகக் கருதப்பட வேண்டும்.

### மிக முக்கியமான உண்மை


ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் விளையாட்டு தங்கள் இல்லங்களில் விக்கிரகமாக மாறாதபடி தீர்மானம் எடுத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய இருதயங்களில், நம் பிள்ளைகளின் இருதயங்களில் இயேசு கிறிஸ்து இருக்க வேண்டிய சிங்காசனத்தில் ஒரு விளையாட்டு பொம்மையை இருக்க வைக்கக் கூடாது என்று நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு விளையாட்டு நம் வாழ்க்கையை ஆளுகை செய்ய, நம் கால அட்டவனையின் மீது ஆதிக்கம் செலுத்த, நம் உணர்வுப் பூர்வமான நிலையை தீர்மானிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. நாம் குடும்பமாக சேர்ந்து, **ஒரு விளையாட்டு எங்கள் இல்லத்தில் மிக முக்கியமான ஒன்றாக இருக்காது** என்று வாயைத் திறந்து அறிவிக்க வேண்டும்.

நாம் ஆச்சரியமூட்டும் வகையில் ஆர்வமுடன் அதிக நேரத்தையும், பணத்தையும், ஆற்றலையும் விளையாட்டுக் காரியங்களுக்கு செலவழிப்பதற்கு பதிலாக இயேசுகிறிஸ்துவின் காரியங்களுக்கு செலவழிக்கும்போது அது பிள்ளைகள் மீது நேர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். பிள்ளைகள் தங்கள் வீடுகளில் எவைகள் முக்கிய மானவைகள் என்பதை தாங்களாவே புரிந்து கொள்வார்கள். அவர்கள் வீட்டில் எதற்கு முதன்மைத்துவம் கொடுக்கப்பட வேண்டும். என்பதை பெற்றோர்களுடைய பேச்சை வைத்தும், குறிப்பாலும் அறிந்து கொள்வார்கள். விளையாட்டும், இன்னும் வேறு காரியங்களும் ஆராதனை, வேத பாட வகுப்பு, சுவிசேஷ ஊழியம் போன்றவற்றை விட முக்கியமானது என்றால் அவர்கள் சொல்லிவிடுவார்கள். வெறுமனே நாம் பிரசங்கிக்கும் பிரசங்கங்கள் மட்டும் நம் குழந்தைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. நம் பணத்தாலும், நேரத்தாலும், நாம் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது தான் நம் பிள்ளைகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்.

என் பிள்ளைகள் என்று வரும்போது பதிலை கேள்வியிலேயே கொண்டுள்ள கேள்வியான நான் விளையாட்டு வீரர்களை வளர்க்கிறேனா அல்லது கிறிஸ்தவர்களை வளர்க்கிறேனா எனும் கேள்வியை எனக்கு நானே கேட்டுக் கொள்ள வேண்டும்.

பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப் படியுங்கள், இது நியாயம் – உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்ததமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:1–4).

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TV வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் TV சனி காலை 7:00 - 8.00 மணி

**மாத இதழ் : திருமறை ஆசான்**

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

<u>தொடர்புக்கு</u>

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.

பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041

## சத்திய வழி


பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**

நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்



பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**

தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி

நம்பிக்கை TV : வெள்ளி 8:00 – 8:30 மணி


மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்

<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**

தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி

அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி

**Good News TV** : செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி

பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை

**English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL

**J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( **4** இதழ்கள் ) (அ) ரூ. 200 ( **8** இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ........................ காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

“சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ____________________________________

தெரு / ரோடு : ________________________________

நகரம் : ______________________ பின் கோடு : ______________

மாநிலம் : ___________________________________

# 5 நிமிட வேத பாடம்

## நீதி

Paula Bates

1. நீ .......................... நியாயத்தோடும்,.................கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுவாய், புறஜாதிகளும் அவருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டு, அவருக்குள் மேன்மைபாராட்டுவார்கள். [எரேமியா4:2].

2. ......................... பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ............................[மத்தேயு 5:6].

3. ஞானி தன்.................... மேன்மைபாராட்டவேண்டாம், பராக்கிரமன்க்குறித்து ................மேன்மைபாராட்டவேண்டாம், ஐசுவரியவான் தன் ....................குறித்து மேன்மைபாராட்டவேண்டாம், மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் .......................செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார், இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் [எரேமியா 9:24].

4. ............................ திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது: நீதியோ .......................தப்புவிக்கும் [நீதிமொழிகள் 10:2].

5. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் ............. பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. இவைகளிலே ...................... ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறான். ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய ..................... உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம் [ரோமர் 14:17-19].

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்








## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

'திருமறை ஆசான்'
'கிருபையுள்ள வார்த்தை'
'வேர்டு ஆப் கிரைஸ்ட்'

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385